மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

மார்ச் – 2024 இதழ் – 03 மாசி – பங்குனி



கட்டுரையாளர்கள்

மாரிராஜன்
திருச்சிற்றம்பலம்
சரவண மணியன்
பௌசியா இக்பால்
விஜய் பாண்டியன்
விஜய் பட்
பாலாஜி கிருஷ்ணமூர்த்தி
பாலபாரதி
பாலமுரளி
ஸ்ரீநிவாஸ்
இராமமூர்த்தி நாகராஜன்
காளீஸ்வரன்
பார்த்திபன்
சுரேந்திரன்
ஹாரூன் பாஷா
தென்கொங்கு சதாசிவம்
பாலமுருகன்
மூசா

மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 - மார்ச் - இதழ் - 03)

பதிப்புரிமை

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

ஆற்றுப்படை குழு

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்

பொருளடக்கம்

செப்பேடுகள் வழி சோழர் வரலாறு

பாகம் - 3



வேளஞ்சேரி செப்பேடு - முகப்பு இலச்சினை



மா. மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வு சங்கம்
காரைக்கால்

செப்பேட்டின் முதல் பகுதியில் 29 வரிகள் வடமொழியிலும், இரண்டாம் பகுதியில் 48 வரிகள் தமிழிலும் உள்ளன.

முதலாம் பராந்தகனின் 25 ஆம் ஆட்சியாண்டில் இச் செப்பேடு வெளியிடப்பட்டது.

மேலிருஞ்சேரு என்னும் கிராமத்தைச் சேர்ந்த அந்தணர்களுக்கு நிலம் வழங்கிய அரசனின் ஆணைதான் இச் செப்பேடு.

வேளஞ்சேரி செப்பேடு.

முதலாம் பராந்தகன்.

கி.பி. 932.

6.10.1977 ஆம் வருடம்.

திருத்தணி அருகே உள்ள வேளஞ்சேரி என்னும் கிராமத்தில் உள்ள ஒருபள்ளிக்கூடம்.

பள்ளி மைதானத்தில் மாணவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும்போது புதைந்திருந்த சிலைகள் சிலவற்றைக் கண்டார்கள். விடயம் அறிந்து வந்த தொல்லியல் துறையினர் அங்கே கிடந்தவற்றை ஆய்வு செய்தனர். தொல்லியல் இயக்குநர் இரா.நாகசாமியின் மேற்பார்வையில் திரு.நடன காசிநாதன் அவர்கள் அந்த பள்ளிக்குச் சென்று அங்கே கிடைத்த பொருட்களை பார்வையிட்டார். அதில் இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க செப்பேட்டுத் தொகுதிகள் இருந்தன.

பராந்தகச்சோழரின் செப்பேடு ஒன்று. அபராஜிதப் பல்லவரின் செப்பேடு ஒன்று.

பராந்தகனின் செப்பேடு வேளஞ்சேரி செப்பேடு என்றும், அபராஜிதனின் செப்பேடு திருத்தணிச் செப்பேடு என்றும் தொல்லியல் துறையால் அழைக்கப்பட்டன.

இந்த செப்பேடுகளில் காணப்படும் விபரங்களை திரு. நாகசாமி அவர்கள், திருத்தணி மற்றும் வேளஞ்சேரி செப்பேடுகள் என்னும் தலைப்பில் தொல்லியல் துறை வெளியீடாக ஒரு நூலை வெளியிட்டார்.

வேளஞ்சேரி செப்பேடு ஐந்து பட்டைகளைக் கொண்டது. பட்டைகளின் இருபுறமும் எழுத்துக்கள் உள்ளன. இப்பட்டைகள் ஒரு வளையத்தில் கோர்க்கப்பட்டு வளையத்தின் முகப்பில் இலச்சினை உள்ளது.

வட்ட வடிவமான இலச்சினையில் சோழர்களின் முத்திரை.

இரு மீன்களின் முன் ஒரு புலி அமர்ந்துள்ளது.

இரு புறமும் இரு விளக்குத் தாங்கிகள் உள்ளன. மேலே குடைகளும் சாமரங்களும் உள்ளது. மொத்த அமைப்பின் கீழ் வில் ஒன்று படுக்கை வசமாக உள்ளது. இலச்சினையின் விளிம்பில் கிரந்த எழுத்தில் சுலோகம் உள்ளது.

"ஸ்ரீமத் சந்ரந்த்யதேரேவ

சோளம்ஸ ஸ்ரீகாமணே |

சாஸனம் சோளபூபர்த்து பரகேசரி வர்ம்மண||

"சந்திரனை போன்ற ஒளி கொண்டவனும் சோழத்தின் தலையிற் சூடும் மணியை போன்றவனுமான பரகேசரிவர்மனின் சாசனம்."

செப்பேட்டின் முதல் பகுதியில் 29 வரிகள் வடமொழியிலும், இரண்டாம் பகுதியில் 48 வரிகள் தமிழிலும் உள்ளன.

முதலாம் பராந்தகனின் 25 ஆம் ஆட்சியாண்டில் இச் செப்பேடு வெளியிடப்பட்டது.

மேலிருஞ்சேரு என்னும் கிராமத்தைச் சேர்ந்த அந்தணர்களுக்கு நிலம் வழங்கிய அரசனின் ஆணைதான் இச் செப்பேடு.

முதல் பகுதியில் மங்கல வாழ்த்தோடு துவங்குகிறது.

செய்யுள் 1-7

திருமால் வாழ்த்து. திருமாலின் நாபியில் உதித்த பிரம்மா. அவருக்கு பின் மரீசி. அவருக்கு மகனாக கச்யபர். அவருக்குப்பின் சூரியதேவர். இக்குலத்தில் உசிநரன் என்னும் மன்னன் பிறந்தான். சோழர்குலத் திலகம் சிபி பிறந்தான். அக்னித்தேவன் அவனை சோதிக்கும் பொருட்டு பருந்தாக வந்தபோது, தன் சதையை பருந்துக்குக் கொடுத்து புறாவைக் காத்தான்.

செய்யுள் - 8

பனிமலையின் தடத்தை பதித்தவனும், காவிரியை இரு கரைக்குள் அடக்கியவனுமான கரிகாலன் அக்குலத்தில் பிறந்தான்.கரிகாலனது ஆணையால் காஞ்சியில் மேகத்தைத் தொடும் மாளிகைகள் உண்டாயிற்று.

செய்யுள் - 9

சிலந்தியின் தியாகத்தால் உவகை கொண்ட சிவன் அதை சோழர் மரபில் மன்னனாக பிறக்கச் செய்தார். கோச்செங்கண்ணான் என்னும் பெயரில் சிலந்தி சோழ மன்னனாகப் பிறந்தது.

செய்யுள் 10 - 15

அந்தக் குலத்தில் ஒற்றியூரன் என்பவன் பிறந்தான். அவனுக்கு, எதிரிகளாகிய தொடர்களுக்கு காட்டுத்தீயானவன் (விஜயாலயன்) பிறந்தான். அவனுக்கு குபேரனுக்குச் சமமான பெருமையுடைய ஆதித்தன் பிறந்தான். ஆதித்தனிடமிருந்து எதிரிகளுக்கு கூற்றுவன் போல் பராந்தகன் தோன்றினான். அவன் இராமேஷ்வரம், கன்னியாகுமரி, ஸ்ரீரங்கம், இவற்றில் தன் வீரத்தால் கொண்டுவரப்பட்ட தங்கத்தைக் கொண்டு துலாபாரம் ஏறினான்.

செய்யுள் 16 - 17

ப்ரம்மவிருத்திராசன் வேண்டுகோள் விட, கிளிநல்லூரைச் சேர்ந்த சர்வதேவன் என்பவன் இச்சாசனத்தின் ஆணத்தி ஆவான். தானத்தை பராந்தகச் சோழன் நீர் வார்த்து பக்தியோடு அளித்தான். உருத்சன் என்னும் பெயரையுடையவன் இச்சாசனத்தைச் செய்தான். இந்த தர்மத்தை காக்க வேண்டி வீரசோழன் யாசிக்கிறான்.

அடுத்து...

தமிழ்ப்பகுதியில் தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் வரையறைகள் குறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டில் நமக்குக்கிடைக்கும் சில அவசியத்தரவுகள்.

கரிகாலன் இமயமலையில் தடம்பதித்த செய்தி. காவிரியாற்றுக்கு கரை எழுப்பியது. காஞ்சியில் மாளிகைகள் எடுத்தது.

கோச்செங்கணானின் முற்பிறப்பான சிலந்தி வரலாறு. விஜயாலனின் தந்தை பெயர் ஒற்றியூரன்.

தொடர்வோம்...

அன்புடன்.

மா.மாரிராஜன்.





நாட்டு ரக மீன்கள் அறிமுகம்
பாகம் - 3



இராமமூர்த்தி நாகராஜன்
சூழலியல் ஆர்வலர்
பூதலூர்

தீமை செய்யும் எந்தப் பொருளும் அற்ற அருமையான மீன் இனம். சற்று சிறிதாக இருப்பதால் உணவுக்கு இம்மீனை சுத்தம் செய்வது மட்டுமே பெரிய வேலை ஆகும். மற்றபடி இதன் சுவை அலாதியானது. அதுவும் பிடித்த உயிர்மீனை உடனடியாகச் சுத்தம் செய்து சமைக்கும் போது இதன் சுவை இரண்டு மடங்கு அலாதியாக இருக்கிறது. இதில் நடுமுள் மட்டுமே உண்டு என்பதால் எளிதாக முள் நீக்கி உண்ணலாம். மிகச் சிறு மீன்களை நடுமுள்ளுடன் சேர்த்தே உண்பதால் நடுமுள்ளில் இருக்கும் கால்சியம் நமது உடலுக்குச் சேர்ந்து நமது எலும்புகளுக்குப் பலம் அளிக்கிறது. மேலும் உடலுக்கு வலு சேர்க்கும் பல நுண் ஊட்டச்சத்துக்களைக் கொண்டது. பெரிய மீன்களை விட இச்சிறு மீன்களே அதிக அளவில் நன்மை செய்யும் ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. அந்த வகையில் சுவையிலும், சிறு அளவிலே முள் கொண்டமையிலும் மிகச் சிறந்த உணவாகும் மீன் ஆகும்.

#அரஞ்சான் பொடி

#சார்முட்டி பொடி

#நெடும்பொடி

#பாய்ச்சல் பொடி

ஆங்கில பொதுப்பெயர்: Reba Carp.

அறிவியல் பெயர்: Cirrhinus Reba.

காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளில் அதிக அளவில் கிடைக்கும் சிறு கெண்டை மீன் இனம்.

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்பெரம்பூர், திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் போன்று காவிரி அதன் கிளை ஆறுகளாகப் பிரியும் வெண்ணாறு, வெட்டாறு, கோரையாறு, பாமனி ஆறு போன்றவற்றில் அந்த சிறு அணைக் கட்டடங்களில் தண்ணீர் வெளியேறும் பகுதியில் இம்மீன் அதிகம் கிடைக்கும். இம்மீன்கள் நீரை எதிர்த்து நீந்தும் பண்பு கொண்டது. இதனால் அணை மதகுகளில் தண்ணீர் வெளியேறும் பகுதிகளில் எதிர்த்து நீந்தி வரும்.



அங்கே மதகுகளில் தண்ணீர் வெளியேறும் பகுதியில் அணை மேலிருந்து கட்டித் தொங்கவிடப்படும் பெரிய பெரிய கூடைகளில் இம்மீன் தவ்வித் தானே துள்ளி விழுந்து விடும். வெயில் நன்றாக அடிக்கும் நாட்களில் மதிய நேரத்தில் இருந்து வெயில் தாழும் மாலை நேரம் வரை இம்மீன்கள் நன்கு நீரை எதிர்த்து நீந்தி வந்து கூடைகளில் துள்ளி விழும்.

அதிகளவில் கிடைக்கும் பருவம்:

காவிரியில் நீர்வரத்து சீராக இருந்தால் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இம்மீன் அதிக அளவில் கிடைக்கிறது.

பிடிக்கும் முறை:

பொதுவாக இம்மீனை மற்ற மீன்களைப் போல் வலை மூலம் பிடிக்கமாட்டார்கள். இதன் நீரை எதிர்த்து நீந்தும் பண்பின் காரணமாக கூடை கட்டியே பிடிக்கப்படுகிறது.

பிடிக்கும் நேரம்:

வெயில் உரத்து அடிக்கும் மதியம் முதல் மாலை வரையே இம்மீன் பிடிக்கப்படுகிறது. காலை நேரத்திலும் மழைக்காலத்திலும் இம்மீன் கூடையில் அதிகம் விழாது.

நீளம் மற்றும் எடை:



அதிகபட்சம் 20 முதல் 30 சென்டி மீட்டர் நீளம் இருக்கலாம். பொதுவாக ஆண் மீன்களைவிட பெண் மீன்கள் சற்று நீளமாக இருப்பதாக ஆய்வுகள் சொல்கின்றன.



இது ஜிலேபி கெண்டை போன்ற பெரிய மீன்களுக்கும் கெண்டை குஞ்சி என அழைக்கப்படும் மிகச்சிறு மீன்களுக்கும் இடைப்பட்ட அளவில் இருக்கிறது. அதிகபட்சமாக 100 கிராம் அளவுக்குள் தான் இருக்கும்.

நிறம்:

மேல்பகுதியில் சற்று கருவியாகவும், கீழ் பகுதியில் வெள்ளை நிறமாகவும் இருக்கிறது.



இதன் உணவுகள்:

இம்மீன்கள் சிறு பூச்சி, புழுக்கள் மற்றும் சிறு தாவரங்கள் என அனைத்தையும் உட்கொள்ளும் அனைத்துண்ணி இனம் ஆகும்.

உணவாகும் இம்மீன்:

இம்மீன் உணவுக்குப் பயன்படும் முக்கிய மீன் இனம் ஆகும். இவை இயற்கையாக மட்டுமே கிடைக்கிறது. இதனை யாரும் வளர்ப்பதில்லை.

தீமை செய்யும் எந்தப் பொருளும் அற்ற அருமையான மீன் இனம். சற்று சிறிதாக இருப்பதால் உணவுக்கு இம்மீனை சுத்தம் செய்வது மட்டுமே பெரிய வேலை ஆகும். மற்றபடி இதன் சுவை அலாதியானது. அதுவும் பிடித்த உயிர்மீனை உடனடியாகச் சுத்தம் செய்து சமைக்கும் போது இதன் சுவை இரண்டு மடங்கு அலாதியாக இருக்கிறது. இதில் நடுமுள் மட்டுமே உண்டு என்பதால் எளிதாக முள் நீக்கி உண்ணலாம். மிகச் சிறு மீன்களை நடுமுள்ளுடன் சேர்த்தே உண்பதால் நடுமுள்ளில் இருக்கும் கால்சியம் நமது உடலுக்குச் சேர்ந்து நமது எலும்புகளுக்குப் பலம் அளிக்கிறது. மேலும் உடலுக்கு வலு சேர்க்கும் பல நுண் ஊட்டச்சத்துக்களைக் கொண்டது. பெரிய மீன்களை விட இச்சிறு மீன்களே அதிக அளவில் நன்மை செய்யும் ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. அந்த வகையில் சுவையிலும், சிறு அளவிலே முள் கொண்டமையிலும் மிகச் சிறந்த உணவாகும் மீன் ஆகும்.

பெயர்க் காரணம்:

வட்டார வழக்கில் இம்மீனை வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கின்றனர்.


தஞ்சை மாவட்டத்தில் இம்மீனை **"நெடும் பொடி"** என அழைக்கிறார்கள். ஏனெனில் இம்மீன் தட்டையாக அகலமாக இல்லாமல் நீளமாக இருப்பதால் நெடும்பொடி என்ற பெயர் வந்திருக்கலாம்.

திருவாரூர் மாவட்டத்தில் இம்மீனை **"சார்முட்டி பொடி"** என்று பெயர்க்காரணத்தோடு அழைக்கின்றனர். அதாவது இது அணைமதகுகள் போன்ற தடுப்புகளில் நீர் வெளியேறும் பாதைகளில் எதிர்த்து வந்து முட்டுவது போல் செல்வதால் இது சார் முட்டி என அழைக்கப்படுகிறது என்று நான் ஊகிக்கிறேன். மேலும் மீன் வளர்க்கும் குளங்களில் உள்ளிருந்து மீன் வெளியேறாமல் இருக்க சாரம் என்று கட்டி இருப்பார்கள்.

நீர் உள்ளேவரும்போது அதனை எதிர்த்து இம்மீன் சாரத்தை முட்டுவது போல் செல்வதால் சார்முட்டி என இப்பெயர் வந்திருக்கலாம்.



இம்மீனைப் பற்றிய தகவல்களை கள ஆய்வில் ***திருக்காட்டுப்பள்ளியில் காவிரி ஆறு, தென்பெரம்பூர் வெண்ணாறு மற்றும் நீடாமங்கலத்தில் வெண்ணாறு, கோரையாறு*** *போன்றவற்றில் தெரிந்து கொண்டேன்.*



தமிழிக் கல்வெட்டுக்களும் சில பொதுவான கூறுகளும்....



வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை

"அறிவர்களை"க் குறிக்கும் "அமணர்" என்ற சொல் மேட்டுப்பட்டி மற்றும் புகளூர் கல்வெட்டுக்களில் நேரிடையாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் தேவாரத்தில், சமணர் (ஜெயினர்) களையும் அவர்கள் வாழ்ந்த "பள்ளி" களைத் தனியாகவும், அமணர்கள் (அறிவர்கள் / ஆசீவகர்கள்) களையும் அவர்கள் வாழ்ந்த "பாளி" களைத் தனியாகவும் குறிப்பிட்டிருப்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆம். சமணர் வேறு. அமணர் வேறு.

இரண்டு நாட்களுக்கு முன் சென்று வந்த (அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள) ஐயனார் குளத்துடன் தொல்லியல் துறை சொல்லும் அனைத்து தமிழிக் கல்வெட்டு இடங்களையும் பார்த்து விட்டேன்.

செல்வதற்கு கடினம் என்று சொல்லப்படும் திருச்சி மலைக்கோட்டை, ஐவர் மலை மற்றும் எடக்கல் மட்டும் இதில் அடங்கா.

அதேபோல், இலங்கையில் இருக்கும் தமிழிக் கல்வெட்டுக்களுக்கு தனியே ஒரு பயணம் திட்டமிட்டுள்ளேன். எனவே, இலங்கைக் கல்வெட்டுக்களும் இதில் அடங்கா.

நான் சென்ற 28 இடங்களிலும் வித விதமான அனுபவங்கள். எல்லா இடங்களிலும் சில பொதுவான கூறுகளைக் காண முடிகிறது.

இவையெல்லாவற்றையும் ஒப்பிட்டு ஒரு புத்தகம் எழுதும் முயற்சியில் இறங்கியுள்ளேன். உயர்திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் மற்றும் நாகசாமி போன்றோர் கட்டமைத்த சில தவறான கருத்துக்களை ஆதாரங்களுடன் மாற்றும் ஒரு முயற்சியாகவும் என் புத்தகம் இருக்கும்.

சரி விஷயத்திற்கு வருவோம். ரொம்பவும் பெரிய ஆராய்ச்சி எதுவும் செய்யாமல், மேலோட்டமாகப் பார்த்தாலே தெரியும் சில பொதுவான கூறுகள்:

1.எல்லா கல்வெட்டு இடங்களுமே இன்றைக்கும் புழக்கத்தில் இருக்கும் பெருவழிப் பாதைகளில் இருக்கின்றன

2.எல்லா இடங்களிலும் நிலாப் பாறைகள் என்னும் வானியலை ஆய்வு செய்ய உதவும் உயரம் அதிகம் உள்ள திறந்த வெளிப் பாறைகள் உள்ளன. சில இடங்களில் அவற்றில் கற்படுக்கைகளும் உள்ளன.

3.இவற்றில் நிறைய இடங்களில் வெண் சாந்து பாறை ஓவியங்களும், சில இடங்களில் செஞ்சாந்து ஓவியங்களையும் காண முடிகிறது. இதிலிருந்து இந்த இடங்கள் தொடர்ந்து மக்கள் வாழும் அல்லது மக்கள் வந்து செல்லும் அல்லது மக்கள் பயன்பாட்டில் இருந்த இடங்களாக இருந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.


4.சில பாறை ஓவியங்களில் வானிலை சார்ந்த ஓவியங்களையும் காண முடிகிறது. அவற்றில் சில இடங்களில் தமிழி கல்வெட்டுக்கள் இல்லாவிட்டாலும் கூட பாறைக் கீறல்களும், வெண் சாந்து ஓவியங்களும் வானியல் ஆராய்ச்சியை மையப் படுத்தியே உள்ளன (புலிப் பொடவு மற்றும் பெருமுக்கல் ஒரு சிறந்த உதாரணம்). இது போன்ற ஓவியங்களை இங்கு வாழ்ந்த அறிவர்களே வரைந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

5.தமிழிக் கல்வெட்டு இருக்கும் எல்லா இடங்களில் மருந்து அரைக்கும் குழிகளைக் காண முடிகிறது.

6.இந்த நிலாப் பாறைகள், மருந்துக் குழிகள் மற்றும் வானியல் தொடர்பான வெண் சாந்து ஓவியங்களை வைத்து இவ்விடங்களில் வாழ்ந்தவர்கள் "தமிழி அறிவர்கள்" தான் என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும்

7.சித்தன்ன வாசலில் ஓவியங்கள் இருக்கும் குடைவரைக்கு இன்றும் "அறிவர் பள்ளி" என்றுதான் பெயர். ஆசீவகர்களின் பள்ளிக்கு அறிவர் பள்ளி என்றுதான் பெயர் என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

8.ஜெயினர்களின் தொடக்க காலத்தில் மருத்துவமும், வானிலை ஆய்வும் பெருங்குற்றமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. கி.பி. ஒன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகே ஜெயினர்களும் இந்த



இரண்டு களங்களிலும் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது (ஆதாரம்: முனைவர் சோ. ந. கந்தசாமி எழுதிய இந்தியத் தத்துவக் களஞ்சியம்). ஆனால், நமது தொல்லியல் சொல்லும் தமிழிக் கல்வெட்டின் காலங்களையே உண்மை என்று எடுத்துக் கொண்டாலும் கூட, பெரும்பாலான கல்வெட்டு இடங்கள் கி.மு. 3, 2 மற்றும் ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது என் வாதத்திற்கு இன்னும் வலு சேர்க்கும்.

9.வானியல் ஆய்வில் அறிவர்களின் பங்கைப் பற்றி தொல்காப்பியர் சொல்வதே என் தேடலின் அடிப்படை. ஜெயினர்களின் தொடக்க கால நூல்கள் கூட ஜெயினர்களின் வானியல் மற்றும் மருத்துவ அறிவைப் பற்றி சொல்லவில்லை (நானறிந்தவரை).

10.ஐராவதமும், நாகசாமியும் திரும்பத் திரும்பச் சொல்லும் “சமணர்” என்ற வார்த்தை எந்தக் கல்வெட்டிலும் இல்லை.

11.ஆனால் “அறிவர்களை”க் குறிக்கும் “அமணர்” என்ற சொல் மேட்டுப்பட்டி மற்றும் புகளூர் கல்வெட்டுக்களில் நேரிடையாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் தேவாரத்தில், சமணர் (ஜெயினர்) களையும் அவர்கள் வாழ்ந்த “பள்ளி”களைத் தனியாகவும், அமணர்கள் (அறிவர்கள் / ஆசீவகர்கள்) களையும் அவர்கள் வாழ்ந்த “பாளி”களைத் தனியாகவும் குறிப்பிட்டிருப்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். ஆம். சமணர் வேறு. அமணர் வேறு.



12.பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் "பாளி" என்ற சொல்லே இடம் பெற்றுள்ளது. ஓரிரண்டு இடங்களில் மட்டுமே பள்ளி என்ற சொல்லைக் காண முடிகிறது. அதுவும் கூட குழப்பத்தினால் வந்த பிழையாக இருக்கலாம்.

13.நிறைய கல்வெட்டுக்களில் எழுத்துப் பிழைகளையும், குறில் நெடில் குழப்பங்களையும் காண முடிகிறது.


14.தொண்டூர், திருப்பரங்குன்றம் (புதிய கல்வெட்டு)

கல்வெட்டுக்களில் கற்படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறிக்க ||| மற்றும் ||||| என்று செங்குத்துக் கோடுகள் செதுக்கப்பட்டுள்ளன. அப்போதே எண்களை பதிவு செய்யும் தேவை வந்து விட்டது என்பதையே இது காண்பிக்கிறது. வரிச்சியூர் கல்வெட்டில் "நூறு" என்ற வார்த்தையும் வருகிறது.

15.அதிலும் திருப்பரங்குன்றத்தில் நான் கண்டுபிடித்த புதிய கல்வெட்டில் ஐந்து செங்குத்துக் கோடுகள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் பிராமியில் (???) ஆங்கில எழுத்து "r "போன்று இருப்பதுதான் ஐந்து என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால் "r" நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே (புதிதாய் கண்டுபிடித்த) திருப்பரங்குன்றத்து கல்வெட்டு செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

16.நிறைய கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்களைக் காண முடிகிறது. ஆனால், எந்தக் கல்வெட்டிலும் சமஸ்கிருதச் சொற்களைக் காண முடியவில்லை.

17.தமிழிக் கல்வெட்டுக்களின் காலத்தை நமது தொல்லியல் துறை கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை வரையறைத்துள்ளது. அப்படிப் பார்க்கையில் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை சமஸ்கிருதம் நமது



தமிழகத்தில் பேச்சு வழக்கில் கூட பெரிய செல்வாக்கு அடையவில்லை என்பது தெளிவு.

18.கர்நாடகத்தைக் குறிப்பதாகச் சொல்லப்படும் சித்தன்ன வாசல் கல்வெட்டைத் தவிர வேறெந்த கல்வெட்டும் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை.

19.சித்தன்ன வாசல் போல ஓரிரண்டு இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் மதுபான பாட்டில்களையும், சிகரெட் பாக்கெட்டுகளையும், இறைச்சியின் எச்சங்களையும், சில இடங்களில் ஆணுறைகளையும் காண முடிகிறது. தமிழி பற்றி மக்களுக்கு எந்தவொரு விழிப்புணர்வும் இல்லை என்பதையே இது காட்டுகிறது. வேதனையான விஷயம்.

20.கிட்டத்தட்ட எல்லா தமிழி கல்வெட்டுக்கள் உள்ள இடத்தின் அருகிலும் ஒரு ஐயனார் கோவிலைக் காண முடிகிறது. இதிலிருந்து, இங்கு வாழ்ந்த அறிவர்கள், உயிருடன் இருக்கும்போது மக்களால் “ஐயனாக” மதிக்கப்பட்டு, இறந்த பின்னர் “ஐயனாராக” வழிபடத் தொடங்கியிருக்க வேண்டும் என்பது என் கருத்து.


21. தமிழி ஆய்வின் தொடக்கத்தில் ஐராவதம் போன்றோர், அசோகப் பிராமியிலிருந்துதான் “தமிழ் பிராமி “(தமிழி) தோன்றியது என்ற கதையை திரும்பத் திரும்பச் சொல்லி, நமது தமிழியின் காலத்தை கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தொடங்கினர். ஆனால், இப்போது கீழடி, ஆதிச்ச நல்லூர், கொடுமணல், பொருந்தல் போன்ற இடங்களில் கிடைத்த தமிழி பொறித்த பானை ஓடுகளை வைத்து நமது தமிழியின் காலத்தை கி.மு. 8 அல்லது கி.மு. 9ம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்ல முடியும் (ஆதிச்ச நல்லூர் ஆய்வின் முழு அறிக்கை வெளியானதும் இது மீண்டும் உறுதி செய்யப்படும்). புலிமான் கோம்பை மற்றும் தாதப்பட்டி நடுகற்களில் உள்ள தமிழி

கல்வெட்டுக்கள், அசோகரின் காலத்திற்கு முன்பே தமிழி வழக்கில் இருந்ததை நிரூபித்து விட்டன.

ஆனால், தமிழிக் கல்வெட்டுகளின் காலத்தை மட்டும் இன்னும் யாரும் மறு ஆய்வு செய்யவில்லை. விரைவில் அதுவும் நடக்கும் என்று உறுதியாக நம்புவோம். அதற்கு “எல்லா” மக்களும் தொல்லியல் துறையில் நுழைந்து பெரிய பதவிகளை அடைய வேண்டும். அது ஒன்றே வழி.

இளைஞர்களே விழித்துக் கொள்ளுங்கள்.

நான் இந்த “தமிழி” ப்ராஜக்ட்டை வெற்றிகரமாக முடிக்க உதவிய எனது தமிழி ஆசான் வே.இராஜகுரு, நண்பர்கள் திருச்சி பாலா பாரதி, திருச்சி பார்த்தி, தென்கொங்கு சதாசிவம், ஐயா வெள் உவன், காவல்துறை அதிகாரி கண்ணன், யானைமலை இரவிச்சந்திரன், அரிட்டாபட்டி இரவிச்சந்திரன், புகளூர் சந்திரன், தம்பி ஆனந்த குமரன், மீனாட்சிபுரம் பாண்டி துரை என் கல்லூரித் தோழர்கள் வெற்றிவேல், குமார், காரைக்குடி முத்துச் செல்வம், அரச்சலூர் தம்பி லெட்சுமி நாராயணன் மற்றும் அவருடைய இரண்டு நண்பர்கள், அம்மன் கோவில்பட்டி நாகராஜன்,



தொண்டூர் மற்றும் நெகனூர்பட்டி கல்வெட்டுகளைக் காண்பித்த உயர்திரு திருநாவுக்கரசு அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நமது தமிழ்நாடு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள “தமிழ் பிராமி கல்வெட்டுக்கள், பேராசிரியர் க. நெடுஞ்செழியன் எழுதிய ஆசீவகமும்

அய்யனார் வரலாறும், முனைவர் சோ. ந.கந்தசாமி எழுதிய இந்தியத் தத்துவக் களஞ்சியம் போன்ற நூல்கள் பெருந்துணை புரிந்தன.

சமீபத்தில் நான் கண்டறிந்த திருப்பரங்குன்றம் கல்வெட்டைப் படியெடுத்து உதவிய நண்பர் வே.இராஜகுரு அவர்களுக்கும், தம்பி உதயகுமார் அவர்களுக்கும், அதை ஆராய்ந்து உதவிய நமது மூத்த தொல்லியல் அறிஞர் முனைவர் சாந்தலிங்கம் அவர்களுக்கும் நன்றி சொல்ல வார்த்தைகளில்லை.

விரைவில் என்னுடைய "தமிழி" புத்தகம் உங்கள் கைகளில் தவழும்.

எருமைத்தொறு கொள்ள போகேன்





க.சீனிவாசன்
பொறியாளர்
வரலாற்று ஆர்வலர்
வாணியம்பாடி

"அன்றைய காலத்தில் கால்நடைகள் மாபெரும் செல்வமாக அமைந்தது, பகை நாட்டினர் இந்த கால்நடைகளை கவர முயற்சிகள் மேற்கொள்வார்கள், கால்நடைகளை மீட்கும் பூசலில் உயிர் துறந்த வீரர்களின் நினைவாக நடுகற்கள் நடுவது ஓர் வழக்கமாக இருந்தது, இந்த வீரர்களை தெய்வமாக கருதி நடுகல் வழிபாடுகள் அன்றிலிருந்து இன்று வரை தொடர்கிறது".

நதிக்கரையில் நாகரிகம் பிறந்தது என்பார்கள், ஒவ்வொரு நதிக்கரையில் ஓர் தனித்துவமான நாகரிகம் இருப்பதை காணமுடியும், அதுபோன்றே பாலாற்றங்கரை நாகரிகம், தொண்டைநாட்டின் ஜீவநதி பாலாறு, நந்தி மலையில் தொடங்கி பாலாற்றங்கரை வழியே பயணித்தால் பல்வேறு தொல்லியல் தடங்களை காண முடியும் அதிலும்கூட நடுகற்கள் அதிகமுள்ள பல்வேறு பூசல்கள் மற்றும் போர்களை கண்ட பாலாறு நதிக்கரை இன்று நீர் இன்றி அமைதியாக காட்சிதருகிறது.

தமிழ்நாட்டில் சோழ பாண்டிய பல்லவ நடுகற்கள் மட்டுமின்றி, பாணர், கங்கர், நுளம்பர், ராஷ்ட்ரகூடர்கள் கால நடுகற்களும் காண கிடைக்கின்றன. இவற்றின் காலம் 9, 10 ஆம் நூற்றாண்டு ஆகும், பெரும்பாலும் இந்த நடுகற்கள் தமிழகத்தின் வேலூர், திருவண்ணாமலை பகுதிகளில் உள்ளன.

கிபி 800 முதல் 970வரை தமிழகத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கிறது பல்லவர்களின் ஆதிக்கம் குறைகிறது, அதன்பின்னர், சோழர்களின் எழுச்சி, திருப்புறம்பயம் போர், தக்கோல போர், என் பல போர்களும் தொடர்ச்சியாக நடந்தவண்ணம் சூழ்நிலைகள் மாறிய வண்ணமிருந்தன, இத்தகைய காலகட்டத்தில் பேரரசுகள் கீழ் படிந்த சிற்றரசர்கள் தம்மை சுதந்திர அரசாக தம்மை அறிவித்து தங்களது ஆதிக்கத்தை நிறுவ முயல்கின்றனர்.

பல்லவர் நடுகற்கள் உள்ள பகுதிகளில் சோழர் கால நடுகற்கள் உள்ளன, சோழர் ஆதிக்கம் நிறைந்த பகுதியில் ராஷ்ட்ரகூடர்கள் நடுகல் காணகிடைக்கின்றன, கண்ணரதேவன் நடுகல் அருகிலேயெ பார்த்திவேந்திரன் நடுகல்லும், ஆதித்த கரிகாலன் ஆட்சி புரிந்த இடங்களில் பார்த்திவேந்திரன் கால நடுகற்களும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஓர் நிலபரப்பை எந்த அரசன் ஆட்சி புரிந்தார் என்பதற்கு சான்றாக இந்த நடுகற்கள் அமைகிறது.

சக ஆண்டு 832 அதாவது கிபி 910 ஆம் ஆண்டில் பராந்தக சோழர் ஆட்சியிலிருந்த தொண்டை நாட்டின் ஒரு பகுதியை மாவலி வாணராயர் என்ற அரசர் ஆட்சிபுரிகிறார்.

படுவூர் கோட்டம் அடையாறு நாட்டில் செண்டத்தூர் (தற்போது குடியாத்தம் அருகில் உள்ள ஓர் ஊர் ஆகும்) என்ற ஊரில் எருமை மாடுகளை திருடர்கள் கவர்ந்து செல்ல, இந்த திருடர்களை எதிர்த்து, போரிட்டு. திருடர்களிடமிருந்து எருமை மாடுகளை மீட்டு உயிர் துறந்தார் மறைமங்கலத்தை சேர்ந்த பறிதண்டி காமனார் என்ற வீரர்.

அன்றைய காலத்தில் கால்நடைகள் மாபெரும் செல்வமாக அமைந்தது, பகை நாட்டினர் இந்த கால்நடைகளை கவர முயற்சிகள் மேற்கொள்வார்கள், கால்நடைகளை மீட்கும் பூசலில் உயிர் துறந்த வீரர்களின் நினைவாக நடுகற்கள் நடுவது ஓர் வழக்கமாக இருந்தது, இந்த வீரர்களை தெய்வமாக கருதி நடுகல் வழிபாடுகள் அன்றிலிருந்து இன்று வரை தொடர்கிறது.

பறிதண்டி காமனார் உடலின் மீது எட்டு அம்புகள் பாய்ந்துள்ளது, இந்த தொறு மீட்கும் முயற்சி எத்தனை கடினமாக இருந்திருக்கும் என்று சற்று எண்ணிப்பாருங்கள், எருமை மாடுகளை கவர்ந்து செல்வதும் அத்தனை எளிதல்ல, எத்தனைப்பேர் எருமை மாடுகளை கவர்ந்து செல்ல வந்திருப்பார்கள்? இந்த பூசலை தடுக்கும் முயற்சியில் எத்தனைப்பேர் பூசலில் கலந்து கொண்டு இருப்பார்கள்? என்ற கேள்விகள் நடுகல்லை காணும்போது மனதில் தோன்றுகிறது.

பறிதண்டி காமனார் உடைய மகன் மல்லன் என்பவரும் இந்த தொறு மீட்டுப் பூசலில் உயிர் துறக்கிறார், மல்லனுக்கும் ஓர் நடுகல் தனியாக உள்ளது.





கல்வெட்டு 1:

"ஸ்வஸ்தி ஸ்ரீ சகர யாண்டு எண்ணூற்று முப்பத்திரண்டவாது

படுவூர் கோட்டது அடையாறு நாட்டு ஸ்ரீ மாவலி வாணராயர்

ஆள இகல் மறைமங்கலத்திருந்து வாழும் பறி தண்டி காமனார்

செண்டத்தூர் எருமைத்தொறு கொள்ள போகேன் என்று தொறு மீட்டு பட்டார்"

கல்வெட்டு 2:

"இவர் மகதுண்ண மல்லன் உடன்பட்டார்".

சிவபுரம்





முனைவர். ப. காளீஸ்வரன்
தடய அறிவியல் துறை
சென்னை

சிவபுரம் அமைந்திருக்கக் கூடிய கோட்டம் மணவிற் கோட்டம் ஆகும். மண்டலம் சோழமண்டலம். ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மணையிற் கோட்டத்து என்று கல்வெட்டுகளில் வருகிறது.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோகடம் என்றும், பின்னர் ராஜாதிராஜன் ஆட்சிக் காலங்களிலும், ராஜேந்திர சோழரின் பிந்தைய ஆட்சிக் காலங்களிலும் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு சிவபுரத்து ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்றும் அழைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பகுதியானது தேவதானமாக கோவிலுக்கு வழங்கிய பிறகுதான் சிவபுரம் என்ற பெயரோடு அழைக்கப்பட்டு இருப்பதாக கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் சிவபுரம் வருகிறது.

சிவபுரம் பலரும் கேள்வி படாத ஒரு ஊர். இந்த ஊர் சோழர்கள் காலத்தில் உரோகடம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. சோழப் பேரரசில் ராசராச சோழன், ராஜேந்திர சோழன் போன்றோரெல்லாம் தஞ்சாவூரிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் எழுப்பிய பெரும் கோயில்களை பற்றி தான் நாமெல்லாம் அறிந்திருப்போம். சோழ தேசத்திலே அவர்கள் எழுப்பிய கோவில்களை பற்றி அறிந்திருப்போம்.

காஞ்சிபுரம் மாவட்டம், தொண்டை மண்டலத்தில் இருந்தது. பின்நாளில் அது சோழர்கள் வசம் வந்தது. சோழர்கள் வசம் காஞ்சிபுரம் வந்த பிறகும், சோழர்கள் தொண்டை மண்டலத்தில் ஆற்றிய சிவத்தொண்டானது எண்ணிலடங்காதது. அந்த வகையிலே ராசராச சோழன் காலத்திலும், ராஜேந்திர சோழன் காலத்திலும் புகழ்பெற்று விளங்கிய ஒரு திருத்தலம் தான் சிவபுரம் திருத்தலம். இந்த திருத்தலத்தில் ராஜேந்திர சோழர் காலத்தில் வெகுமரிசையாக திருவிழாக்கள் நடைபெற்றதும், கோவிலுக்கு அளித்த பல்வேறு கொடை பற்றிய செய்திகளும் இங்கு உள்ள கல்வெட்டுகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

சிவபுரம் இந்த ஊர் பேரம்பாக்கத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய ஊர். பேரம்பாக்கத்தில் இருந்து தக்கோலம் செல்லும் பேருந்துகள் சிவபுரம் வழியாகவே செல்கின்றன. இதற்கு அருகிலே இருக்கக்கூடிய பாடல் பெற்ற திருத்தலங்கள் ஆனவை கூவம் திரிபுராந்தகர் திருக்கோவில், தக்கோலம் திருக்கோவில், எலுமியன் கோட்டூர் திருக்கோவில் ஆகியவை. இரயிலில் சென்றால் சென்னை சென்ட்ரலில் இருந்து அரக்கோணம் திருத்தணி செல்லும் ரயில்கள் கடம்பத்தூர் என்ற ஊரில் நிற்கும். கடம்பத்தூர் ரயில் நிலையத்திலிருந்து பேரம்பாக்கம் சென்று அங்கிருந்து சிவபுரத்தை அடையலாம்.

திருக்கோயிலின் அமைப்பை நோக்கும் பொழுது கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகிய மண்டபங்களுடன் அமைந்துள்ள எளிய திருக்கோயில். சோழர்கள் ஆட்சியில் நிலப் பரப்பானது மண்டலம், கோட்டம், நாடு அல்லது வளநாடு, கூற்றம், ஊர், கிராமம் , சேரி என்று பல்வேறு பகுதிகளாக பகுக்கப்பட்டிருந்தது. அவ்வகையிலே ராஜேந்திர சோழன் ஆட்சி செய்த பகுதியானது ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்று அழைக்கப்பட்டது. சோழர்கள் பல்வேறு காலகட்டங்களில் ஒரே காலத்தில் வேறு வேறு நிலப்பரப்பில் சோழர்களாக ஆட்சி செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக சுந்தரச் சோழர் தஞ்சையை ஆட்சி செய்த அதே வேளையில், ஆதித்த கரிகாலச் சோழர் காஞ்சிபுரத்தை ஆண்டு வந்திருக்கிறார். தஞ்சையில் இராசராச சோழன் முடிசூட்டிய பிறகு அவரது இறுதி ஆட்சிக் காலத்தில் தான் ராஜேந்திர சோழருக்கு முடி சூட்டப்பட்டது. அதே வேளையில் ராஜேந்திர சோழர் ஆட்சிப் பொறுப்பு ஏற்று இரண்டு ஆண்டுகளிலேயே தன்னுடைய மகன்களில் ஒருவருக்கு தஞ்சையில் முடி சூட்டினார். இன்னொரு மகனை பாண்டிய நாட்டிற்கு முடிசூட்டி அனுப்பி சோழ பாண்டியர் ஆக அரியணை அமர்த்தினார். ஒருவர் நாட்டை நிர்வகித்துக் கொண்டும், மற்றொருவர் நாட்டின் எல்லையை காத்துக் கொண்டும், விரிவு படுத்திக் கொண்டும் வெகு சிறப்பாக இவ்வகையிலான ஆட்சி ராசேந்திரச் சோழரின் காலத்தில் அமைந்திருந்தது.

ஜெயங்கொண்ட சோழமண்டலம் தொண்டை மண்டலத்தை உள்ளடக்கியது. ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்று சொல்லப்படக்கூடிய தொண்டை மண்டலத்தில் 24 கோட்டங்கள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அப்படி மண்டலத்திற்கு கீழே கோட்டம் என்று பெரிய பகுப்பாக வகுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கோட்டத்தை அடுத்து கோட்டத்திற்குள் இருக்கக்கூடிய நிலப்பரப்புகள் நாடு அல்லது வளநாடாக பகுக்கப்பட்டு இருக்கின்றன. நாடானது மேலும் சிறு சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு கூற்றம், ஊர் என்று பெயரிடப்பட்டு நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வகையில் இந்த சிவபுரம் அமைந்திருக்கக் கூடிய கோட்டம் மணவிற் கோட்டம் ஆகும். மண்டலம் சோழமண்டலம். ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மணையிற் கோட்டத்து என்று கல்வெட்டுகளில் வருகிறது.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோகடம் என்றும், பின்னர் ராஜாதிராஜன் ஆட்சிக் காலங்களிலும், ராஜேந்திர சோழரின் பிந்தைய ஆட்சிக் காலங்களிலும் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு சிவபுரத்து ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்றும் அழைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பகுதியானது தேவதானமாக கோவிலுக்கு வழங்கிய பிறகுதான் சிவபுரம் என்ற பெயரோடு அழைக்கப்பட்டு இருப்பதாக கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் சிவபுரம் வருகிறது.

இத்திருக்கோவிலில் ராஜராஜ சோழனின் கல்வெட்டு ஒன்றும், முதலாம் ராஜாதிராஜனின் கல்வெட்டு ஒன்றும், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திய கல்வெட்டுக்கள் இரண்டும் காணப்படுகின்றன. மொத்தம் காணப்படக்கூடிய 22 கல்வெட்டுகளில் மற்றவை அனைத்தும் முதலாம் ராஜேந்திரன் காலத்து கல்வெட்டுக்கள். இதன் மூலம் முதலாம் ராஜேந்திரன் ஆட்சி காலத்தில் இந்த ஊரில் இருக்கக்கூடிய சிவபெருமானின் திருக்கோவிலானது சிறப்புறக் கொண்டாடப்பட்டிருப்பதை நாம் அறியலாம்.

கோவில் அமைப்பு:

திருக்கோயிலானது விமானத்துடன் கூடிய கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றை கொண்டு அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் கோட்டத்திலே விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை, பிரம்மா ஆகியோர் அமைந்துள்ளனர்.



விநாயகரின் உருவமைப்பு அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. அமர்ந்த நிலையில் விநாயகர் தெற்கு புறம் நோக்கி பத்ம பீடத்தில் இருக்கிறார். பீடத்திலே மூஞ்சூறு அவருடைய வாகனம் இருக்கின்றது. கழுத்திலே ஆபரணம் அணிந்து இருக்கின்றார். துதிக்கை இடது புறமாக சுழிக்கப்பட்டு இடது கையில் உள்ள கனியை பிடித்தவாறும், வலது கரத்திலே ஒடித்த கொம்பையும், மேல் இரண்டு கரங்களில் அங்குச, பாசமும் வைத்து ஒரு காலை மடித்து ஒரு காலை குத்திட்டு, வெண்குடை சாமரங்கள் வீச தலையில் கிரீடத்துடன் அழகாக அமர்ந்திருக்கிறார். வலது புறத்தில் உள்ள கொம்பை ஒடித்து கையில் வைத்திருக்கின்றார்.

விநாயகருக்கு கீழும், இடது புறத்திலும், ஜகதியிலும், குமுதத்திலும் நிறைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.



தென்முகக் கடவுள் தட்சிணாமூர்த்தி

அடுத்தபடியாக தெற்கு புறத்தில் கோட்டத்தில் தெற்கு திசை நோக்கி தட்சிணாமூர்த்தி அழகுற அமர்ந்துள்ளார். அவர் காலிலே மிதித்து இருக்கக்கூடிய அசுரனின் பாவனை மிக அழகாக காட்டப்பட்டுள்ளது. இறைவனின் காலால் மிதிபட்ட முயலகன் எனும் அரக்கன் அதிலிருந்து விலக எத்தனிப்பது போல் முயற்சிப்பதும், இறைவனின் பிடியிலிருந்து அவனால் வெளிப்பட இயலாததையும் அவன் முகம் காட்டுகிறது.



அவனுடைய கை அங்கிருந்து நழுவ எத்தனிப்பதையும் காட்டுகிறது. தட்சிணாமூர்த்தி அமர்ந்திருக்கும் பீடத்தில் ஒரு குரங்கும், மானும் அமர்ந்திருப்பது போல காட்டப்பட்டுள்ளது. இறைவனின் இடது கீழ் கையில் ஓலைச்சுவடி காணப்படுகிறது. இந்த ஓலைச்சுவடி நீளமான ஓலைச்சுவடி ஆதலால் சற்று வளைந்து காணப்படுவது அழகாக அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இறைவனின் நகமும் அங்கே தெளிவாக காணப்படுகிறது. கழுத்தில் ஆபரணமும், தோளில் பூணூலும் அணிந்திருக்கிறார். வலது கீழ் கை யோக முத்திரை காட்ட, விரிந்த சடையில் பிறையையும் தாங்கி இருக்கிறார். இரண்டு பக்க காதுகளில் காணப்படும் ஆபரணங்கள் சிறப்புற காட்டப்பட்டிருக்கின்றன. அவர் அமர்ந்திருக்கும் கல்லால மரத்தில் நாகம் ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது.. இரண்டு பறவைகள் அந்த மரத்தில் உள்ள துவாரங்களின் வழியே எட்டிப் பார்க்கின்றன. மரத்தின் அசைவும் இலையின் அசைவும் அழகாக சிற்பத்தில் செதுக்கப்பட்டு இறைவன் புன்முறுவலுடன் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கின்றார். இடது மேற்கரத்தில் தீ சுவாலை ஏந்தி உள்ளார். வலது மேல் கரத்தில் ஜெப மாலையை வைத்துள்ளார். இவருக்கு கீழேயும் குமுதத்தில் கல்வெட்டுக்கள் நிறைய பொறிக்கப்பட்டுள்ளன.

லிங்கோத்பவர் :

கோட்டத்தின் மேற்குப் பகுதியில் இருப்பவர் லிங்கோத்பவர். இங்கு சிவபெருமான் ஆனவர் பிரம்மனுக்கும் திருமாலுக்கும் அடிமுடிகாண இயலாதவராக நிமிர்ந்து நிற்கின்றார். இறைவனின் திருவடியை தேடி திருமால் வராக வடிவத்திலே பூமியை குடைந்து கொண்டு செல்கின்றார். அந்த காட்சி இங்கே எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. அவர் எவ்வளவு வேகமாக செல்கிறார் என்பதை காட்டும் விதமாக அவருடைய நான்கு கரங்களும் மண்ணினை பறிப்பது போன்றும், அவருடைய ஆடையானது காற்றில் அசைந்து ஆடுவது போல காட்டி இருப்பதும் அவரின் வேகத்தை தெளிவுற காட்டுகிறது. இவ்கையான சிற்பங்களின் நுணுக்கங்கள் சோழச் சிற்பங்களில் வெகுவாக காணலாம் என்பது குடவாயில் பாலசுப்பிரமணியன் ஐயா அவர்களின் கருத்து. பிரம்மன் இறைவனின் திரு முடியைத் தேடி அன்னப்பறவையின் மீது அமர்ந்து மேல் நோக்கி செல்லக்கூடிய காட்சியும் இங்கு காட்டப்பட்டுள்ளது.



பெரும்பாலான திருக்கோயில்களில் மேற்கு பகுதியில் நாம் மகாவிஷ்ணுவையும் தரிசிக்கலாம். அரிதாக சில கோவில்களில் நரசிம்மரையும் காணலாம். சிவபுரம் திருத்தலத்தில் மேற்கு பகுதி கோட்டத்தில் லிங்கோத்பவரே காட்சி தருகின்றார். இத்திருக்கோவில் ஒரு காலத்தில் சிதைந்து இருந்ததாகவும் பின்னால் ஆங்காங்கே

சிலைகள் கிடைக்கப்பெற்று அவற்றை எடுத்து வந்து பொருத்தியதாகவும் அந்த ஊர் பெரியவர்கள் சிலர் கூறுகின்றனர். தற்பொழுது தமிழக தொல்லியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் திருக்கோயில் ஆனது சிறப்புற பராமரிக்கப்பட்டு வருகிது. லிங்கோத்பவருக்கு கீழே காணப்படும் குமுதத்திலும் கல்வெட்டுக்கள் வெகுவாக காணப்படுகின்றன.

நான்முகன் :

கோட்டத்தின் வடக்கு பகுதியை நான்முகனுக்கு ஒதுக்கி இருக்கின்றார்கள். இங்கே நான்முகன் பத்ம பீடத்தில் நின்ற நிலையிலே ஒரு கையை இடுப்பில் வைத்து, ஒரு கையில் ஜபமாலை, கழுத்து, கை, இடுப்பு, காது ஆகியவற்றில் ஆபரணங்கள் தரித்தும், வடக்கு நோக்கி காட்சி தருகின்றார். இவருடைய ஆடை வடிவமைப்பு அழகுற காட்சிப்படுத்தப்பட்டுள்ளது இந்த சிற்பத்தின் சிறப்பாகும். மூன்று முகங்கள் தெரியும் படி சிற்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நான்முகனுக்கு கீழும் குமுதத்தில் கல்வெட்டுகளை காண முடிகிறது.



இத்திருக்கோவில் விமானம் ஆனது பொதுவாக தொண்டை நாட்டில் காணப்படும் தூங்காணை மாட வடிவ விமானத்திலிருந்து வேறுபட்டு வேசர வகை விமானமாக உள்ளது.

துர்க்கை:

பிரம்மாவுக்கு அடுத்ததாக கோட்டத்தில் அமைந்திருக்கும் தெய்வம் இந்த துர்க்கை. அம்மை இங்கு நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். ஒரு கையில் அபயமுத்திரை காட்டியும், ஒரு கையை நளினமாக இடுப்பில் வைத்துக் கொண்டும், மேல் இரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி, கருணை பொழியும் விழிகளால் நம்மை பார்த்துக் கொண்டு, காதுகளில் குண்டலமும், கழுத்தில் திருமாங்கல்யம் இன்ன பிற ஆபரணங்களும், மார்பு கச்சையும், கைகளில் பல்வேறு ஆபரணங்களும், தலையில் கிரீடமும் தரித்து, இடுப்பில் அதற்கு ஏற்ற ஆபரணங்களும் அணிந்து ஒய்யாரமாக நின்று கொண்டு, ஒரு காலை நேராக வைத்தும் ஒரு காலை சற்று வளைத்தும், இடுப்பை ஒருபுறமாக வளைத்தும் எழிலுற காட்சி தருகிறார். திருவாசியானது பின்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



அர்த்தமண்டப, மகா மண்டப வெளிப்புற சுவர்களின் வடபகுதியிலும், தென்பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் பல்வேறு கல்வெட்டுக்கள் ஏராளமாக காணப்படுகின்றன. விமானத்தின் வட பகுதியில் பிரம்மதேவரும், மேற்குப் பகுதியில் திருமாலும், தெற்கு பகுதியில் தட்சிணாமூர்த்தியம் அமைக்கப்பட்டு நான்கு புறத்திலும் நந்தியம்பெருமான் அமர்ந்திருக்க கற்களாலையே எழுப்பப்பட்ட முழு கற்றளிக் கோயிலாக இந்த சிவபுரம் திருத்தலம் திகழ்கின்றது.

முன் மண்டபத்தின் முன் பகுதியில் அதாவது கிழக்குப் பகுதியில் நந்தியம் பெருமானுக்கான மண்டபம் இருக்கிறது. 4 தூண்களுடன் சிறிய அளவிலான மண்டபம் நந்தியம்பெருமானுக்கு அமைக்கப்பட்டு பலிபீடமும் அமைக்கப்பட்டிருக்கிறது. நந்தியம்பெருமானுக்கு முன்னதாக ஒரு சிறிய சாளரத்தின் வழியே இறைவனை தரிசனம் செய்யலாம். இறைவனை வழிபடுவதற்காக கருவறை செல்லக்கூடிய வாசற்படியானது தெற்கு பகுதியிலே அமைந்திருக்கிறது. அம்மன் சிறிய சன்னதியில் தெற்கு நோக்கி இறைவனுக்கு அருகிலே அமைந்திருக்கிறார். அம்மனுக்கு என்று தனியாக சன்னதி எழுப்பப்பட்டதாக தெரியவில்லை. முன் மண்டபத்தின் கிழக்கு பகுதியில் ஏராளமான கல்வெட்டுகளை காண முடிகிறது. முன் மண்டபத்தின் வடக்கு பகுதியில் துர்க்கையை தாண்டி நந்தியம்பெருமானை அடைவதற்கு வரை உள்ள வடபகுதியில் ஏராளமான கல்வெட்டுகள் இருக்கின்றன. அதனை பார்க்கும் பொழுதே நமக்கு அத்தனை வியப்பு மனதில் தோன்றுகின்றது. இத்துணை கல்வெட்டுகளே காணும் பொழுது இத்திருத்தலம் எவ்வளவு செழிப்புற மக்களால் வழிபாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.


சிவபுரம் நிறுத்தத்தில் இறங்கி ஊருக்குள் நடந்து சென்று ஊரின் எல்லையிலே இத்திருக்கோயிலை அடையலாம். ஒரு காலத்தில் எந்த விதமான வெளிப்புற பாதுகாப்பும் இன்றி இருந்த திருக்கோயில் ஆனது தற்பொழுது சுற்றி வேலி அமைக்கப்பட்டு, கோவில் வாசலில் ஏராளமான மரங்கள் நட்டு பராமரிக்கப்பட்டு, ஒரு குளுமையான, அமைதியான மன நிலையை நமக்கு தருகின்றன. பிரதோஷம், சிவராத்திரி வழிபாடு இங்கு சிறப்புற ஊர் மக்களால் நடத்தப்படுகிறது. ஏராளமான வெளியூர் பக்தர்களும் இத்திருக்கோவில் வந்து செல்கின்றார்கள். ராசராசன் எழுப்பிய மிகப்பெரிய கோவில் மட்டும் பெருமையுடையதாக அமையாமல், அவர் எழுப்பிய சிறிய கற்றளியும் இன்று காலம் கடந்து நம் கண் முன்னே நின்று பெருவுடையார் கோயில் போன்ற பெருமையை ஏந்தி நிற்கின்றது.

திருக்கோவிலில் இருக்கக்கூடிய மிகப் பழமையான கல்வெட்டு ராசராச சோழன் காலத்து கல்வெட்டு. ராசராசசோழரின் 24 ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு அதாவது கிபி ஆயிரத்தி ஒன்பதாம் ஆண்டு. சுமார் இன்றைக்கு ஆயிரத்து பத்து ஆண்டுகளுக்கு மேலான கல்வெட்டு. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து ஒரு திருக்கோயில், சிறிய அளவிலான திருக்கோவில் நம் கண் முன்னே எழிலுற காட்சி தருகிறது என்றால் இத்தனை காலம் அதை இயற்கையானது பேணி பாதுகாத்து நமக்கு கொடுத்திருக்கிறது. இதனை நாமும் பாதுகாத்து பின்னால் வரும் சந்ததிகளுக்கு இக்கோவிலையும், இக்கோவில் பற்றிய பெருமைகளையும், இக்கோவில் எழுப்பினவர்களை பற்றிய பெருமைகளையும், இக்கோவிலுக்கு பல்வேறு நிவந்தங்கள் அளித்தவர்களின் பெருமைகளையும் சொல்லிப் புரிய வைக்க வேண்டியது நம் காலத்தின் கட்டாயமாகும்.



கன்னல் சுவை சங்கத்தமிழ்
பாகம்–3





பௌசியா இக்பால்
ஆசிரியர்
சத்தியமங்கலம்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துக் கூறியனவற்றில் மக்களின் வாழ்வாதார தேவைகளுள் ஒன்றான நீர்நிலைகளைப் பற்றி, அதிலும் குறிப்பாக தமிழகத்தின் ஜீவநதியான காவிரியின் செழிப்பையும், வனப்பையும் இளங்கோவடிகளின் கவித்திறனையும் இக்கட்டுரையில் காணலாம்.

கன்னல் சுவை சங்கத்தமிழ்' தலைப்பில் இம்மாதத்திற்கான பாடலை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதி சிலாகித்துக் கூறிய சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துள்ளேன்.

சிலப்பதிகாரம் புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டதொரு காப்பிய நூல். இதில் கோவலன், கண்ணகி மற்றும் மாதவி ஆகிய மூவருக்குமிடையே நடக்கும் வாழ்வியல் நிகழ்வுகளை அழகிய காப்பியமாக வடித்திருப்பார் இளங்கோவடிகள்.

சிலப்பதிகாரத்தின் முதல் காண்டமான புகார் காண்டத்தில் வறியவருக்கு இரங்கும் வள்ளல்குணமும், கலைகள் மீது தீராக் காதல்கொண்டோனுமான கோவலன் தன் மனைவி, குடும்பம், குலப்பெருமையென அனைத்தையும் மறந்து, மாதவியின் ஆடற்கலை மீது கொண்ட காதலால் மாதவியுடன் வாழ்ந்து வருகிறான்.

அதுசமயம் நடந்த இந்திரவிழாவில் கோவலனுக்கு மாதவி மீது அதிருப்தி உண்டாகின்றது. அங்கே அவள் பிறர் முன் ஆடியதையும், பாடியதையும் விரும்பாத கோவலன் புகார்காண்டத்தின் இறுதியில் மீண்டும் கண்ணகியிடம் வருகிறான். தான் கொண்டு சென்ற செல்வத்தை எல்லாம் இழந்த நிலையில், தன்னை நாடி வந்த கணவனை மன்னித்து ஏற்கும் கண்ணகி மீண்டும் பொருள்தேட கோவலன் மதுரை செல்லலாம் என்றபோது அவனுக்கு உறுதுணையாக அவனோடு செல்ல முற்படுகின்றாள். அவ்வாறு கோவலனும், கண்ணகியும் பொருளீட்ட மதுரைக்கு செல்வதும், அங்கு அவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்களுமே மதுரைக் காண்டத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள்.

இக்காப்பியத்தில் இளங்கோவடிகள் அக்காலத்தில் ஆட்சியிலிருந்த அரசர்கள், அதிகாரிகள், வணிகர்கள், பேரங்காடிகள், நகரங்களின் அமைப்பு, மக்கள் வாழ்வியல், அங்கிருந்த மதங்கள், வழிபாட்டு நெறிமுறைகள், கலைகள் என்று பல்வேறு விஷயங்களை சிறப்பித்துக்கூறியுள்ளார். இதுவரை இக்கட்டுரையில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் அனைவரும் அறிந்த ஒன்றே.

இனி, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துக் கூறியனவற்றில் மக்களின் வாழ்வாதார தேவைகளுள் ஒன்றான நீர்நிலைகளைப் பற்றி, அதிலும் குறிப்பாக தமிழகத்தின் ஜீவநதியான காவிரியின் செழிப்பையும், வனப்பையும் இளங்கோவடிகளின் கவித்திறனையும் இக்கட்டுரையில் காணலாம்.

தமிழ்மொழியின் இயல், இசை, நாடகம் என்ற முக்கூறுகளில் நாடக காப்பியமாக போற்றப்படும் சிலப்பதிகாரம் இன்பவியல் மற்றும் துன்பவியலை மிக அழகாக சந்தச் சுவையுடன் விளக்கும் சிறப்பு பெற்றுள்ளது. அதில், முதலாவதாக கோவலனுக்கும், மாதவிக்குமிடையே கனிந்த காதல், ஊழ்வினையால் கானல் வரியாக (கானல் வரி – கடற்கரைச் சூழலில் பாடும் பாடல்) உருவாகி, அவர்களுக்கிடையே பிரிவை உண்டாக்குகின்றது. சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கும், மாதவிக்குமிடையே துளிர்விடும் துன்பவியலின் காரணம் இப்பாடல்களே!

பாணர்களின் அழகிய யாழை ஏந்திய கோவலன் முதலில் பாட ஆரம்பிக்கின்றான்.

திங்கள் மாலை வெண்குடையான்,

சென்னி, செங்கோல் - அது ஓச்சி,

கங்கை - தன்னைப் புணர்ந்தாலும்,

புலவாய்; வாழி, காவேரி!

கங்கை - தன்னைப் புணர்ந்தாலும்,

புலவாதொழிதல், கயல் கண்ணாய்!

மங்கை மாதர் பெரும் கற்பு என்று

அறிந்தேன்; வாழி, காவேரி!

இளஞ்சூரியனுக்கு நிகரான வெண்கொற்றக்கொடையுடன் சிறந்து ஆட்சிசெய்யும் சோழமன்னன் வடக்கேயிருக்கும் கங்கைவரை சென்று கங்கையில் நீராடினாலும், அவனின் செய்கையால் அவனிடம் கோபம் கொள்ளாமல் இருக்கும் காவிரியே! கற்பில் சிறந்தவளே! நீ வாழ்க!

மன்னும் மாலை வெண்குடையான்

வளையாச் செங்கோல்-அது ஓச்சி,

கன்னி-தன்னைப் புணர்ந்தாலும்,

புலவாய்; வாழி, காவேரி!

கன்னி-தன்னைப் புணர்ந்தாலும்,

புலவாதொழிதல், கயல் கண்ணாய்!

மன்னும் மாதர் பெரும் கற்பு என்று

அறிந்தேன்; வாழி, காவேரி!

செங்கோல் வளையாமல் ஆட்சிசெய்யும் சோழன், தெற்கேயிருக்கும் குமரியில் குளித்து மகிழ்ந்தாலும் அவனுடன் பிணக்கின்றி சோழநாடு முழுவதும் பாய்ந்து வளம் தரும் காவிரியே! நீயே கற்பில் சிறந்தவள்!

உழவர் ஓதை, மதகு ஓதை,

உடை நீர் ஓதை, தண்பதம் கொள்

விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப,

நடந்தாய்; வாழி, காவேரி!

விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப

நடந்த எல்லாம் வாய் காவா

மழவர் ஓதை வளவன்-தன்

வளனே; வாழி, காவேரி!

நீ வரும் பாதை முழுவதும் உழவர்களின் ஓசையும், மதகுகளில் நீர்ப்பாயும் ஓசையும், கரையை உடைத்துக்கொண்டு ஓடும் நீரின் ஓசையும், சோழநாடு முழுவதும் கொண்டாடப்படும் விழாக்களின் ஓசையும், வயல்களில் நெல் அடிக்கும் ஓசையும் கேட்குமாறு வருகின்றாயே இதற்கெல்லாம் நீ சார்ந்த சோழனை நீ அரவணைத்து செல்வதனாலேயே உனக்கு இப்பெருமைகள் அனைத்தும் வந்து சேர்ந்தன என்று பாடுகிறான் கோவலன்.

அதாவது காவிரியின் பெருமைகள் அனைத்திற்கும் காரணம் சோழவேந்தனே என்றும், மாதவியின் பெருமைகளும் கோவலனை அவள் சார்ந்து இருப்பதால் வந்ததே என்பதாகவும் அர்த்தம் கொள்கிறாள் மாதவி. மேலும், கற்பில் சிறந்த கண்ணகியைப் பிரிந்து வந்த கோவலன், காவிரியின் கற்பைப் புகழ்ந்தது, மாதவிக்கு வலியைத் தந்திருக்குமோ? இதோ கோவலனின் பாடலுக்கு எதிர்ப்பாடல் பாடுகிறாள் மாதவி!

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,

மணிப் பூ ஆடை-அது போர்த்து,

கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,

நடந்தாய்; வாழி, காவேரி!

கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,

நடந்த எல்லாம் நின் கணவன்

திருந்து செங்கோல் வளையாமை;

அறிந்தேன்; வாழி, காவேரி!

காவிரியின் கரைதோறும் பூத்த நறுமலர்களால் ஆற்றங்கரையெங்கும் வண்டுகள் ஆர்ப்பரிக்க, அக்கரையோரத்தில் பூத்த நறுமலர்கள் காவிரியாற்றிலும் விழுவதனால் பூவாடை அணிந்து நடைபயில்கின்ற காவிரியில் நீந்தி விளையாடும் கருங்கயல்களை காவிரியின் விழிகளென்றும் காவிரியின் அழகை விவரித்தவள் அதற்கடுத்த வரிகளில்...

பூவர் சோலை மயில் ஆல,

புரிந்து குயில்கள் இசை பாட,

காமர் மாலை அருகு அசைய,

நடந்தாய்; வாழி, காவேரி!

காமர் மாலை அருகு அசைய,

நடந்த எல்லாம் நின் கணவன்

நாம வேலின் திறம் கண்டே;

அறிந்தேன், வாழி, காவேரி!

சோலையில் மயிலாட, குயில் பாட இவ்வளவு அழகோடு நடைபழகும் காவிரியின் பெருமிதம் அவள் விரும்பி வரிந்துகொண்ட தலைவன், சோழவேந்தனின் வேலின் திறமைதான் என்று கூறி வாழ்த்துகிறாள். இத்துடன் முடிந்ததா? அடுத்ததாக மாதவியே தொடர்கின்றாள், பிரச்சனையே இங்குதான் ஆரம்பம் ஆகின்றது...

வாழி அவன்-தன் வள நாடு

மகவாய், வளர்க்கும் தாய் ஆகி,

ஊழி உய்க்கும் பேர் உதவி

ஒழியாய்; வாழி, காவேரி!

ஊழி உய்க்கும் பேர் உதவி

ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்

ஆழி ஆள்வான், பகல் வெய்யோன்

அருளே; வாழி, காவேரி!

சோழன் வாழ்க! ஆனால், சோழவள நாட்டிற்கு தாயக இருந்து வளர்க்கும் காவிரியே! நீ உனது இத்தன்மையை ஊழிக்காலம் வரும்வரையிலும் மாற்றிக்கொள்ள விரும்பமாட்டாய். உனது அனைத்து பெருமிதங்களுக்கும் காரணம், உன் தலைவனாகிய வளவன் நல்முறையில் உலகை ஆட்சிசெய்வதே என்ற பொருள்படுமாறு கோவலனின் பாட்டிற்கு எதிர்பாட்டு பாடி அவள் தனது கருத்தை குறிப்பால் வெளிப்படுத்துகின்றாள்.


மாதவி ஆடல்மகளிராக இருந்தாலும், கோவலன் அவளைத் திருமணம் செய்துகொண்டதால் அவனுக்கு அவள்மீது உரிமை உண்டானது இயல்பே. அவ்வியல்பே, இந்திரவிழாவில் அவள் பிறர் முன் ஆடியதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியாமல் அவளோடு ஊடல் கொள்ளச்செய்தது. அதன் வெளிப்பாடாகவே கோவலன் யாழ் கொண்டு பாடிய கானல் வரிப் பாடலில், ஆண்கள் தவறு செய்தாலும் அதனைப் பொறுத்துக்கொண்டு காவிரியைப்போல இருப்பவளே சிறந்த கற்புடையப் பெண் என்று கோவலன் கூறுவதாக கருதிய மாதவி அவனது இப்பாடலுக்கு அவனைப்போலவே பதிலளிக்க விரும்பியே, காவிரியின் பெருமைக்குக் காரணம் சோழனின் கருணை தான் என்கிறாள். ஆணின் அன்பே பெண்ணின் செயல்களை நிர்ணயிக்கின்றது என்ற கருத்தை அவள் அதே கானல் வரியில் கோவலனுக்கு எதிராகப் பாடியதாக அர்த்தம் கொள்கிறான் கோவலன்.

இவ்வாறாக ஒருவருக்கொருவர் பாடிக்கொண்ட எதிர்பாடல்களில் கோவலனின் பாடலில் இருந்த பொருளை மாதவி தவறாகவும்,

மாதவியின் எதிர்ப்பாட்டில் இருந்த பொருளை கோவலன் தவறாகவும் புரிந்துகொண்டதைத்தான் ஊழ்வினை என்று கூறியிருப்பார் இளங்கோவடிகள். இக்கானல் வரிப் பாடல்கள் கோவலனை மாதவியை விட்டு பிரிந்துசொல்ல தூண்டிடவே அவன் மீண்டும் கண்ணகியை நாடிச்செல்கிறான்.

நாடக காப்பியத்தின் ஒருபகுதியாக புகார் காண்டத்தின், கடலாடு காதையில் வரும் ஒருசில வரிகள் தான் இவை. இப்பாடல்களே, துன்பவியலின் துவக்கமும் கூட. இதே கோவலன், வைகையைப் பற்றியும் இக்காப்பியத்தில் வர்ணித்திருப்பான். அதில் மதுரை சென்று பெருளீட்ட முடியும் என்ற அவனது நம்பிக்கையின் அளவு நன்றாகவே தெரியும். அடுத்த மாத பதிவில், இதே சிலப்பதிகாரத்தில் கோவலனின் பார்வையில் வைகை எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

பறவைப் பொறியாளன்





சரவணமணியன்.ப.அ
பொறியாளர்
சூழலியலர், வரலாற்று ஆர்வலர்
காளையார்கோவில்

செழிப்பான நீர் பகுதி, உயரமான பனை மரம், தென்னை மரம் போன்ற இடங்களில் இவை கூட்டை கட்டுகின்றன. கூட்டம் கூட்டமாக வாழும் இவைகளின் கூட்டத்தில் 20 முதல் 30 வரை கூடுகள் இருக்கும். கிடைக்கப்பெற்ற ஆய்வுகளின் கூற்றுப்படி ஒரு கூடு கட்ட கிட்டத்தட்ட 500 தடவை சேகரிப்பிற்காக பறக்கின்றன. மொத்தம் 4000 பதர்களை கொண்டு இவை கூடு கட்டுகின்றன. மொத்தம் கூடு கட்ட 18 நாட்கள் எடுத்து கொள்கின்றன. அவற்றில் குடுவை போல இருக்கும் பகுதிக்கு 8 நாட்கள் வரை எடுத்துக் கொள்கின்றன.

ஒரு அற்புதமான கட்டிடக்கலைஞன் பறவையாய் பிறந்து விட்டதே என்று வியக்கும் வண்ணம் ஒரு பறவை கூடுகட்டி வாழ்ந்து வருகிறது என்றால் அது தூக்கணாங்குருவி தான்பா.

அதுவும் தென்மேற்கு பருவமழை தொடங்கும் நாட்களில் தமது காதல் மாளிகையை கட்டி பெண் தூக்கணாங்குருவிகளை கவர்கின்றன ஆண் தூக்கணாங்குருவிகள்.அங்கும் ஓர் காதல் கவியோட்டமாய் உண்டு போலும்🥰.

கூட்டினுள் இருக்கும் முட்டைகள் வேகமாக வீசும் காற்றில் கீழே விழாமல் இருக்கும் வண்ணம், காற்றடிக்கும் திசைக்கேற்ப கூட்டின் நுழைவுவாயிலை தூக்கணாங்குருவி அமைக்குதுங்க. பயிர்களோட இலை நரம்புகளையும் நார்களையும் கொண்டு இக்குருவி முடையும் தொங்கு கூண்டுகள் வியப்பூட்டுபவையே.

செழிப்பான நீர் பகுதி, உயரமான பனை மரம், தென்னை மரம் போன்ற இடங்களில் இவை கூட்டை கட்டுகின்றன. கூட்டம் கூட்டமாக வாழும் இவைகளின் கூட்டத்தில் 20 முதல் 30 வரை கூடுகள் இருக்கும். கிடைக்கப்பெற்ற ஆய்வுகளின் கூற்றுப்படி ஒரு கூடு கட்ட கிட்டத்தட்ட 500 தடவை சேகரிப்பிற்காக பறக்கின்றன. மொத்தம் 4000 பதர்களை கொண்டு இவை கூடு கட்டுகின்றன. மொத்தம் கூடு கட்ட 18 நாட்கள் எடுத்து கொள்கின்றன. அவற்றில் குடுவை போல இருக்கும் பகுதிக்கு 8 நாட்கள் வரை எடுத்துக் கொள்கின்றன.

கூடு ஓரளவிற்கு முடிந்த பின் ஆண் குருவி, வாசலில் இருந்து பறந்து செல்லும் பெண் குருவிகளுக்கு, என்னை பார், என் கூட்டை பார் என சமிக்ஞை கொடுக்குமாம்யா. பின் பெண் குருவி உள்ளே வந்து பார்வையிடும் (இன்ஸ்பெக்ஷன்). அதற்கு திருப்தி இருந்தால் இணைவிற்கு ஓ.கே., சொல்லிவிடும்.பின் நீளமான வால் போன்ற பகுதியை கட்ட ஆரம்பித்து கூட்டை முடிக்கும். கூட்டின் உட்பகுதிகளில் பெண் குருவிகளின் விருப்பத்திற்கு ஏற்றார்போல் கட்ட வேண்டியது ஆண் குருவிகளின் பொறுப்பு. சில நேரங்களில் உட்கட்ட அமைப்புகளில் திருப்தியுறாத பெண் பறவைகள், தாங்களே தன் விருப்பத்திற்கு ஏற்றது போல கட்டிக்கொள்கின்றன.

ஆண் பறவைகள் நிறைய கூடுகளை கட்டி முடிக்காமலே வைத்திருக்கும். பெண் துணை உறுதியானதும் பின் கூடு முழுமையடையும்(அங்கயும் நம்மள மாதிரி தான் போல). வீடு கட்டியாகி விட்டது. வீட்டுக்கு விளக்கேற்ற வேண்டுமே. பறவைகள் மண்ணெண்ணெய்க்கும், மின்சாரத்துக்கும் எங்கு போகும். இயற்கை அதற்கும் வழி சொல்லித்தந்துள்ளது.நம்ம சின்ன வயசுல மின்சாரம் இல்லைனா ஒருசில நேரம் என்ன பண்ணுவோமோ அதே தான் ஒரு மின்மினிப்பூச்சியை தூக்கிட்டு வந்து கூட்டில் வைத்துள்ள ஈரமான களிமண்ல அதைப் பதித்து வைத்து கூட்டுக்குள் தூக்கணாங்குருவி ஒளியேற்றிக் கொள்கிறது. பின்னர், பெண் பறவை 3 முதல் 5 முட்டைகளை இடுமாம். பெண்பறவை 15 நாள் வரை அடைகாக்கிறது. குஞ்சு ஓரளவிற்கு வளர்ந்து பறந்து சென்றுவிட்டவுடன், ஆண் குருவி அடுத்த பெண் குருவிக்கு அடுத்த கூட்டை கட்ட ஆரம்பிக்கிறது. பறவைக்குஞ்சு அருகில் உள்ள பகுதிகளுக்கு இடம் பெயர்கிறது.

வண்ண நிறங்களில் கவரும் தூக்கணாங்குருவி

சிட்டுக்குருவி இனத்தை சேர்ந்ததுங்க. இக்குருவியின் உச்சந்தலை, மார்பு ஆகியவை மஞ்சள் நிறத்தில் இருக்கும். பெண் குருவிகள் பொதுவாக மரவண்ண நிறத்தில் இருக்கும். முட்டையிடும் பருவத்தில் ஆண், பெண் குருவிகள் இரண்டும் அடர்த்தியான பிரகாசமான மஞ்சள், கருப்பு

நிறங்களைப் பெற்றிருக்கும். இனப்பெருக்கம் இல்லாத காலங்களில் இவை கூடு கட்டுவதில்லையாம். அந்தமாதிரியான காலங்களில் இவை மரப்பொந்துகள் போன்ற அடைவிடங்களில் கூடி இரவைக் கழிக்குமாம். இவற்றின் ஒவ்வொரு அசைவுகளும் ஓர் கவிதை தான் யா 😍.



BAYA WEAVER - PLOCEUS PHILIPPINUS

CONSERVATION STATUS: LEAST CONCERN (POPULATION STABLE)

TAMIL NAME - இவருக்கு **தூக்கணாங்குருவி** - **மஞ்சக்குருவி** - **தூதுணம்** - **துழகுறை குருவி** - **தொங்கநாதன் தூக்குணம்** என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்கள் உண்டுங்க.



காப்பு நிலை - தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்


அன்பன்,


ப.அ.சரவண மணியன்





பழங்கால தமிழகமும் சர்வதேச வர்த்தகமும்





பாலாஜி கிருஷ்ணமூர்த்தி
இயந்திரவியல் பொறியாளர்
கும்பகோணம்

அரிக்கமேடு பகுதி அகழ்வில் உரோமானிய மதுக்குடுவைகளும், ஆலிவ் எண்ணெய் சேர்த்து வைத்திருந்த அடையாளங்களுடன் குடுவைகளும்,ஒருவகை மீன்சாறு வைக்கப்பட்டிருந்த குடுவைகளும் கிடைத்திருக்கின்றன. ஆலிவ் எண்ணெய் பெரும்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை! இருந்திருப்பின் நம் வாழ்வியல் முறைகளில் அவை இன்றைக்கும் இருந்திருக்கும். எனவே அறிஞர்கள் அவை இங்கே தங்கியிருந்த யவனர்கள் பயன்படுத்தி இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இன்றைய சிங்கப்பூரைப் பார்த்து வாய்ப்பிளக்காதோர் இருக்க வாய்ப்பேயில்லை என்பது எத்தனை உண்மை! சிங்கப்பூரின் பொருளாதாரம் அப்படி. உங்கள் வீட்டில் சென்ற தலைமுறையைச் சேர்ந்த வயதான பெரியவர் இருந்திருப்பின், அவர்தம் நினைவு தெரிந்த நாளில் சிங்கப்பூர் ஒன்றுமேயில்லாத தீவாந்திரத்தில் இருந்து தற்போதைய வளர்ந்துவிட்ட நாடாக எப்படி உருமாற்றம் அடைந்தது என்பதை தம் வாழ்நாளில் பார்த்திருப்பார். சிங்கப்பூரின் பொருளாதார மாதிரி அப்படியானது. அதே போல் ஜப்பான் இரண்டாம் உலகப்போரின் போது நொடிந்த நிலையில், அதிலிருந்து மீண்ட கதையை நாம் அனைவருமே பாடப்புத்தகங்களில் படித்திருப்போம்.

இன்றைய சிங்கப்பூரின் பொருளாதாரம் வர்த்தக ஒருங்கிணைப்பு சார்ந்த ஒன்று. அந்நாட்டில் பெரிதாக சொல்லிக்கொள்வது போல உற்பத்தியோ சேவைகளோ சார்ந்த தொழில்கள் இல்லை. அதன் பலமே துறைமுகம்தான். அதை வைத்தே தென்கிழக்காசியாவின் நுழைவாயில் என்ற நிலையை எட்டியுள்ளது. ஜப்பான் நாட்டில் உற்பத்தி தொழிற்சாலைகள் நிறைய உண்டு. ஆனால் மூலப்பொருட்கள் யாவுமே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்ட நிறைவு பொருட்களாக மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜப்பானிய பொருளாதார மாதிரியைக் கொண்டே கொரியாவும் இயங்குகிறது. உலகில் ஓடும் நூறு கப்பல்களில் எழுபது கப்பல்கள் கொரியாவில் தயார் செய்யப்பட்டவை என்ற நிலை தற்போது இருக்கிறது.

வரலாறு எங்கே இங்கு வருகிறது என்று கேட்டால்!,இந்த மூன்று நாடுகளின் பொருளாதார மாதிரிகளின் கலவையாக ,நம் சங்ககால தமிழகத்தின் பொருளாதாரம் இருந்திருக்கிறது. அதற்கு அறுதியிட்டு உறுதிசெய்யும் விதமாக நம்மிடம் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. (பண்டைய தமிழகம் என்பது இன்றைய கேரளத்தின் நடுப்பகுதி, தென்பகுதி இரண்டையும் உள்ளடக்கியது என்பதை நினைவில் கொள்க. இதை இங்கே சொல்ல காரணம் உள்ளது.)

இந்த கொழிக்கும் வணிகத்தை யார் கட்டுப்படுத்துவது என்ற போட்டியே பெரும் போர்களில் முடிந்திருக்கிறது. முற்கால மூவேந்தர் இடையேயான போர்களும், அவர்கட்கும் வேளிர்களுக்குமிடையேயான போர்களும் அதில் அடங்கும். இடைக்காலத்தில் சோழர்கள் தலையெடுத்த போது கூட முதலாம் ஆதித்த சோழன்,தொண்டை மண்டலத்தை கைப்பற்றிய கையோடு,பாண்டியர்களை விட்டுவிட்டு கொங்குநாட்டின் மீது படையெடுத்தது இதற்காகவே இருக்க வேண்டும். கொங்குநாட்டின் வர்த்தக பெருவழி ஒன்று முசிறி பட்டணத்தையும், இன்றைய பாண்டிச்சேரி அரிக்கமேட்டையும் இணைத்தது.அதை கட்டுப்பாட்டில் கொண்டுவரவே ஆதித்த சோழன் எண்ணியிருக்கக் கூடும். அடுத்து வந்த இராஜராஜன் ஏன் தொடர்பே இல்லாத முந்நீர்ப் பழந்தீவும் பன்னீராயிரமும் என்றழைக்கப்பட்ட இன்றைய மாலத்தீவை கைப்பற்ற வேண்டும்?! இன்றைய இந்தியப் பெருங்கடல் பகுதி உலகின் நாற்பது சதவீதம் வர்த்தகம் கடக்கும் பகுதி. இன்னமும் அங்கே இங்கிலாந்து ஒரு தீவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

அடுத்து வந்த இராஜேந்திரன் ஏன் கிழக்கு கடற்கரை ஓரமாக இருந்த நாடுகளை கைப்பற்ற வேண்டும்? தாமிரலிப்தி என்ற துறைமுகம் ஒன்றும்,பாலூர்ப் பெருந்துறை என்ற துறைமுகம் ஒன்றும் இன்றைய ஒடிசா, மேற்கு வங்காளக் கடற்கரை ஓரமாக இருந்தன. நாகையில் இருந்து கடாரம் செல்லவதைவிட காற்றின் வேகமும் திசையும் பாலூர் பெருந்துறையிலிருந்து செல்வதை எளிதாக்கியிருந்தன எனக் கொள்ளலாம். கடாரப் படையெடுப்பின் நோக்கமே வர்த்தக நலன் காத்தல் என்ற கருத்தே முதன்மையானது.

ஆக இத்தகைய பெரும் போர்களை ஏற்படுத்த வல்ல அந்த வணிகம் எத்தனை செழுமையான வணிகமாக இருந்திருக்க வேண்டும்?!

செழுமையான வணிகமாக மட்டுமல்லாமல் நேர்த்தியான வணிகமாகவும் எப்படி நம் சங்ககால வணிகம் இருந்திருக்கிறது என்றும் பார்ப்போம்.


அரிக்கமேடு பகுதி அகழ்வில் உரோமானிய மதுக்குடுவைகளும், ஆலிவ் எண்ணெய் சேர்த்து வைத்திருந்த அடையாளங்களுடன் குடுவைகளும்,ஒருவகை மீன்சாறு வைக்கப்பட்டிருந்த குடுவைகளும் கிடைத்திருக்கின்றன. ஆலிவ் எண்ணெய் பெரும்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை! இருந்திருப்பின் நம் வாழ்வியல் முறைகளில் அவை இன்றைக்கும் இருந்திருக்கும். எனவே அறிஞர்கள் அவை இங்கே தங்கியிருந்த யவனர்கள் பயன்படுத்தி இருக்கலாம் என்று கருதுகின்றனர். அதேபோல் உரோமானிய காசுகளும் ஏராளமாக கிடைத்திருக்கின்றன. நாம் ஏற்கனவே பார்த்த வர்த்தகப் பெருவழி நெடுகிலும் பல ஊர்களில் இவை கிடைக்கின்றன. மேலும் தொழில் பேட்டைகளும் இருந்தமைக்கான ஆதாரங்களும் அகழ்வில் கிடைத்திருக்கின்றன. (கொடுமணல்!!). உரோமானிய பேரரசின் காலத்தில் எழுதப்பட்ட ஒரு குறிப்பில், அங்கிருந்த அதிகாரிகள் உரோம்நாட்டு பண்டாரத்திலிருந்த

தங்கம் யாவும் முசிறிக்கு இடம்பெயர்வது குறித்து கவலை கொள்வதாக உள்ளது. முக்கிய வணிக பொருட்கள் யாவரும் அறிந்ததே. மிளகு!! பின் வாசனைப் பொருட்கள், கண்ணாடி அணிகலன்கள், இரும்பு பொருட்கள் எனப் பல பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிகின்றன. (சோழர்கால ஐம்பொன் சிலைகள் தெரியும்! சோழனின் இரும்பும்- Chola steel பெயர்போன ஒன்று. அதுபற்றி இன்னொரு பதிவில்!) ஐரோப்பிய-எகிப்திய அண்மைக்கால அகழ்வில், வர்த்தக பயன்பாட்டிற்கான நாவாய்கள் தமிழகத்தில் கட்டப்பட்டன என்று கண்டுபிடித்திருக்கின்றனர். அதற்கான மரங்கள் எங்கிருந்து கொண்டுவந்தனர் என்ற குறிப்பில்லை. ஆனால் தமிழகத்தில் அவை கட்டப்பட்டன என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவ்வளவு விரிவாக வர்த்தகம் நடைபெற்றது என்று பார்த்தோம். எத்தனை நேர்த்தியாக நடைப்பெற்றது என்பதை பார்ப்போம்.

1980 ஆம் ஆண்டு எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் ஒரு பழம் பொருட்கள் சேகரிப்பாளர் பெயர் குறிப்பிடப்படாத ஒருவரிடமிருந்து ஒரு பட்டயத்தை விலைக்கு வாங்குகிறார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியொன்றை தன்னகத்தே கொண்டிருக்கும் அந்த பட்டயம் தற்காலத்தில் ஆஸ்த்திரியா நாட்டின் வீயென்னா அருங்காட்சியகத்தில் இருப்பதால் அதன் பெயர் வீயென்னா பட்டயம். ஆனால் அந்த பட்டயத்தில் இருப்பதோ பொயு இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்திற்கும் ரோமானிய நாட்டிற்கும் நடந்த வணிகத்திற்கான ஒரு ஒப்பந்தம் அல்லது தற்காலத்தில் இருக்கும் வங்கி உறுதி (Bank gaurantee) போன்றதொரு செய்தி. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது தொல்தமிழகத்தின் முக்கிய துறைமுக நகரமான முசிறியில். கையெழுத்தானது செங்கடல் ஓர நகரமொன்றில்! எனவே இந்திய வரலாற்று அறிஞர்கள் அதனை முசிறி அலெக்சாந்திரியா வணிக ஒப்பந்தம் என்றே சுட்டுகின்றனர். மூன்று பக்கங்கள் இருக்கும் அந்த ஒப்பந்தத்தில் ஒரேயொரு பக்கம் மட்டுமே கிடைத்திருக்கிறது. அந்த ஒரு பகுதியே பல செய்திகளை நமக்கு எடுத்துரைக்கிறது.

இரு வணிகர்கள் இடையேயான அந்த ஒப்பந்தத்தில், என்ன பொருள்,யாருக்கு அந்த பொருள் போகிறது,யார் பணம் தரவேண்டும்,யாருக்கு பணம் தரவேண்டும், வழிநெடுகிலும் தரவேண்டிய சுங்கத் தொகை எவ்வளவு என்பன போன்ற பல தரவுகள் கிடைக்கின்றன. யாருடைய ஒட்டகங்களின் மீது பொருட்கள் செல்லவேண்டும், அவனுக்கு தரவேண்டிய தொகை எவ்வளவு என்பன போன்ற களிநயமிக்க செய்திகளும் உண்டு. மொத்த பொருட்களின் விலை,எழுபது இலட்சம் டிராக்மாக்கள் (Greek Drachmas).அதில் 25% வரி!!(ஓர் புரிதலுக்காக, ஒரு ரோமானியப் போர்வீரனுக்கு வருடத்திற்கு 800-1200 டிராக்மாக்கள் ஊதியம் இருந்திருக்கிறது). பொருட்கள் பத்திரமாக ரோம் நகருக்கு கொண்டு செல்வதற்கு பல காவல் வீரர்கள் இருந்திருக்கின்றனர் முக்கியமாக இன்றய எகிப்தின் குவிஃப்ட் பாலைவனத்தில் பாதுகாப்பு மிக அதிகமாக இருந்திருக்கிறது. இன்றைய குவிஃப்ட் அன்றைய கோப்டோஸ் பாலைவனம்.




ஒரு ஆய்வு வருடத்திற்கு 120 கப்பல்கள் முசிறிக்கும் ரோம் நகருக்கும் இடையே சென்று வந்திருக்கின்றன என்று சொல்கிறது. ஒரு கப்பலில் 70 லட்சம் டிராக்மாக்கள் மதிப்பிலான பண்டங்கள் எனில் மொத்தம் எத்தனை கோடிக்கு வியாபாரம் நடந்திருக்கும்! அக்காலத்தில் முசிறிக்கு எளிதாக வரும் உத்தியை ரோமானிய கப்பலோட்டிகள் மட்டுமே அறிந்து வைத்திருந்திருக்கின்றனர். இப்பாலஸ் என்ற காற்று அடிக்கும் போது முசிறிக்கு செல்வது எளிது என கிரேக்க ரோமானிய குறிப்புகள் சொல்கின்றன. அது வேறொன்றும் இல்லை, நமது பருவக்காற்றுகள்தாம்.

இவ்வளவு மதிப்பிலான பொருட்கள் ஏற்றிச்செல்லும் கப்பல் எவ்வளவு பெரிதாக இருந்திருக்கும்? ஒரு ஆய்வில் அவை 180 அடிகள் நீலம் கொண்டாதாக இருந்தன என்றும் தற்கால கணக்கீட்டின்படி 1000 டன்கள் எடையை சுமந்து செல்ல வல்லவை என்றும் கணிக்கின்றனர். ரோமானிய தாலமி காலம் எனப்படும் பொயுமு 3 முதல் பொயு 6 வரையான காலப்பகுதியில் நடந்த இந்த வர்த்தகம் குறித்து மேலும் அடுத்த பதிவில் காண்போம்!

படம்: முசிறி அலெக்சாந்திரியா வணிக ஒப்பந்த பட்டயம்.

தமிழரின் நடுவரை கணக்கீடு





திரு.கா.பாலகிருஷ்ணன்
முதல்வர் மற்றும் தாளாளர்
பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி
திருச்சி-21

பண்டைய தமிழர்கள் கட்டமைத்த சூரிய ஆய்வு நிலையங்கள் இன்றைய மாலத்தீவிற்கு அருகே தென்கிழக்கில் தற்போது கடலில் மூழ்கியுள்ள தீவுவுகளில் இருக்கவேண்டும் என்பதற்கான தரவுகள் கிடைத்துள்ளன. ஆய்வு மையங்கள் என்றால் சூரியனின் நகர்வுகளை ஆண்டு முழுவதும் பார்ப்பதற்கு ஏதுவான கட்டட அமைப்பும், செங்குத்தாக நட்டுவைக்கப்பட்ட குச்சியின் நிழலை துல்லியமாக அளக்க ஏதுவான அமைப்புகளும் என நாம் புரிந்துகொள்கிறோம். மேலும் இந்தக் கட்டட அமைப்பு சூரியனின் வட, தென் செலவுகளை துள்ளியமாகக் கணிக்க கிழக்குத் திசையை நோக்கி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நேரம் உலகம் முழுவதும் ஒரே அளவாக இருப்பதில்லை, நாட்டுக்கு நாடு வேறுபடும். ஒவ்வொரு நாட்டிற்கும் நேரம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

தற்போது 'கிரீன்விச் நடுவரை' (Greenwich Meridian) யைக் கொண்டு பூமியில் உள்ள நாடுகளின் நேரங்கள் அளக்கப்படுகின்றன. கோளவடிவில் உள்ள பூமியின் மேலுள்ள நாடுகள் ஒரு செவ்வகத்தில் பொருத்தப்படுகின்றன. இதில் செவ்வகத்தின் நீளம் அகலத்தை போல் இருமடங்காக இருக்கும். இச்செவ்வகத்தின் நடுவில் கிடைமட்டமாக போடப்படும் கோடு நிலநடுக்கோடாகும். இக்கோடு இரு சம பாகங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் பூஜ்ஜியத்தில் இருந்து பதினொன்று வரை பன்னிரண்டு புள்ளிகள் குறிக்கப்படுகின்றன.

வலப்புறத்தில் பூஜ்ஜியத்திலிருந்து +11 வரையிலும், இடப்புறத்தில் பூஜ்ஜியத்திலிருந்து -11 வரையும் எண்ணிடப்படுகின்றன. இப்பள்ளிகளின் வழியே செல்லும் குத்துக்கோடுகள் (உண்மையில் வளை கோடுகள்) நெடுவரைகள் (Meridians) ஆகும். நடுவில் உள்ள பூஜ்ஜியத்தின் வழியே செல்லும் நெடுவரை முதன்மை நெடுவரை (Prime Meridian) அல்லது நடுவரை என அழைக்கப்படுகிறது. இக்கோடு இங்கிலாந்தின் கிரீன்விச் வழியே செல்வதால் இதை 'கிரீன்விச் நடுவரை' (Greenwich Prime Meridian) என அழைக்கப்படுகிறது. இந்த நடுவரையிலிருந்து உலகின் அனைத்து பகுதிகளுக்குமான நேரங்கள் வரையறுக்கப்படுகின்றன. இந்த நடுவரை இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், மேற்கு ஆப்பிரிக்கா வழியே செல்கிறது. தற்போது அணுக்கடிகாரம் கொண்டு நுட்பமாகக் காலத்தைக் கூறும் முறையான UTC- Universal Time Coordinate முறையைப் பயன்படுத்துகிறோம்.

முதன்மை நடுவரையின் வலப்புறத்தில் இருக்கும் நெடுவரையில் நேரங்கள் கூடிக்கொண்டேவரும். முதன்மை நடுவரையில் மணி நடுஇரவு 12 ஆக இருக்கும்போது வலப்புறம் முதல் நெடுவரையில் காலை ஒரு மணியாகவும், இரண்டாம் நடுவரையில் காலை இரண்டு மணியாகவும் இருக்கும். இது தொடர்ந்து அதிகரித்து பதினொன்று மணியில் முடியும். இடப்புறம் உள்ள நெடுவரைகளில் முதல் நெடுவரையில் இரவு 11 மணியாகவும், இரண்டாவது நெடுவரையில் இரவு10 மணியாகவும் தொடர்ந்து குறைந்துகொண்டே போகும். ஒரு நாடு எந்த நெடுவரையில் அமைகிறதோ அதைப் பொறுத்து அந்நாட்டின் நேரம் கூறப்படும். எடுத்துக்காட்டாக, இந்தியா ஐந்தாவது, ஆறாவது நெடுவரைகளில் அமைந்துள்ளது. இது ஐந்தரையாக எடுத்துக் கொள்ளப்பட்டு இந்தியாவின் நேரம் UTC+5:30 எனக் கணக்கிடப்படுகிறது. இதையே இந்தியன் ஸ்டாண்டர்ட் டைம் (IST) என்கிறோம். அதாவது கிரீன்விச்சில் நடுஇரவு 12 மணியளவில் இந்தியாவில் காலை ஐந்து முப்பது மணி.

இதுபோல முதன்மை நடுவரைக்கு இடப்புறம் உள்ள நாடுகளில் நேரம் குறைத்துக் கணக்கிடப்படுகிறது. இம்முறை எப்போதிலிருந்து கடைபிடிக்கப்படுகிறது? உலகம் முழுக்க ஒரே முறையைக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்காவில் வாசிங்டன் நகரில் 1884 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி அனைவரும் பொதுவான நடுவரையைப் பயன்படுத்துவது என்றும் அது இங்கிலாந்தின் 'இராயல் அப்சர்வேட்டரி' வழியே செல்லும் கோடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருபத்து ஐந்து நாடுகள் கலந்து கொண்டதில் இருபத்து இரண்டு நாடுகள் ஒப்புதல் அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரான்ஸ் நாடு ஏற்றுக்கொள்ளாமல் தனது நடுவரையையே தொடர்ந்து பயன்படுத்தியது. பின்னர் 1911 ஆம் ஆண்டிலிருந்து அந்நாடும் பொதுவான நடுவரையை ஏற்றுக்கொண்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இவ்வாறு நெடுவரைகளைக் கொண்டு காலம் கணிக்கும் முறையை ஐரோப்பியர்கள் அறிந்திருந்தனர். ஆனால் அதற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நெடுவரைகளைக் கொண்டு உலகில் அனைத்துப் பகுதிகளின் நேரங்களையும் அளக்கும் முறையை தமிழர்கள் வகுத்திருந்தனர். மிகப்பரந்த நிலப்பரப்பில் ஒவ்வொரு இடத்தின் நேரங்களை ஏன் கணக்கிட்டனர்?

உலகின் மற்ற பகுதிகளுக்கு கடலோடிகளாகத் தமிழ் வணிகர்கள் கப்பலில் சென்று வணிகம் செய்து வந்தனர். எனவே அவர்களுக்கு மற்ற நாடுகளுக்கான நேரம் கணிக்கும் முறைத் தேவைப்பட்டிருக்கிறது. அதனால் நெடுவரைக் கணக்கீட்டு முறையை தங்களுக்கென உருவாக்கிக் கொண்டனர்.

இம்முறையை எப்படி உருவாக்கினர் என்பதை சற்று விரிவாகவே பார்ப்போம்.

இதற்கானச் சான்றுகள் தமிழ் ஐந்திரங்களில் (பஞ்சாங்கங்களில்) உள்ளன. பஞ்சாங்கம் என்றாலே மூட நம்பிக்கைகள் அடங்கிய புத்தம் என்று பலர் நினைப்பர். பிற்காலத்தில் நுழைந்த சடங்குகள், நோன்புகள், திருவிழாக்கள் போன்றவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் அதில் வானியல் குறிப்புகள் மிஞ்சும். அவற்றில் நாம் வரலாற்றுக் குறிப்புகளைக் கூட தேடலாம். அந்த வகையில் 'மநோன்மணி விலாச சுத்த வாக்கிய பஞ்சாங்கத்தில்' ஒரு குறிப்புக் காணப்படுகிறது. இந்த பஞ்சாங்கம் மத்திய ஸ்தானத்திற்கு கணிக்கப்பட்டதாகவும், தஞ்சாவூர் பலசாயை அங்குலம் 2, வியங்குலம் 17, இதற்கு அஷஜ்யா 643 இக்கு அஷாம்சம் 10, பாகை 47 கலை. லங்கோஜ்யையினி மத்ய ரேகையிலிருந்து ரேகாந்திரம் 34 வினாடிக்கு யோஜனை 46 கிழக்கு. (அட்சம் – அட்சரேகை - Latitude, ரேகாந்திரம் - தீர்க்ரேகை - Longitude, பலசாயை - விஷுதின சூரியோச்ச சமயம் 12 அங்குல சங்குவின் நிழலின் அங்குலமும் சதாம்சமும்)

அதாவது பஞ்சாங்கம் கணிக்கப்பட்ட இடத்தின் அட்ச, தீர்க்க ரேகைகளை அக்கால அலகுகள் கொண்டு சொல்கிறார்கள். இன்று அட்சரேகை, தீர்க்க ரேகைகளை கூறும்போது பாகை (Degree) நிமிடம் (Minute) வினாடி (Second) எனக்கூறுவதைப்போல வேறு அலகுகளை பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இன்று ஒருவருடைய இருப்பிடத்தைக் குறிக்கும்போது அட்சரேகையிலிருந்து எவ்வளவு தொலைவு, தீர்க்க ரேகையிலிருந்து எவ்வளவு தொலைவு எனக்குறிப்பதைப் போல இங்கு குறிப்பிடுகிறார்கள். இதில் "லங்கோஜ்யையினி மத்திய ரேகைக்கு" கிழக்கே தஞ்சாவூர் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் லங்கோஜ்யையினி மத்திய ரேகை என குறிக்கப்படுவது அக்காலத்தில் தமிழர்கள் உருவாக்கிப் பயன்படுத்திய நடுவரையாகும். இதிலிருந்து இன்றைய மத்திய பிரதேசத்திலுள்ள உஜ்ஜையினியையும் இலங்கையையும் இணைக்கும் குத்துக்கோடு என புரிந்து கொள்ளலாம். ஆனால் உஜ்ஜையினியையும் இன்றைய இலங்கையையும் இணைக்கும் கோடு செங்குத்தாக இல்லை. எனவே, அங்கே குறிக்கப்படுவது இன்றைய இலங்கை அல்ல உஜ்ஜையினிக்கு நேர்கீழே இலங்கை என அக்காலத்தில் அழைக்கப்பட்ட ஏதோ ஒரு நிலப்பரப்பாகத்தான் இருக்க முடியும்.

உஜ்ஜையினி 23.17 பாகை வடக்கு அட்சரேகை, 75.76 பாகை கிழக்கு தீர்க்கரேகையில் கடகரேகையின் மேல் அமைந்துள்ள நகரமாகும். இந்த உஜ்ஜையினியையும் இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு நிலப்பரப்பையும் இணைக்கும் ஒரு கோடே இந்த லங்கோஜ்ஜையினி மத்திய ரேகை என எளிதில் புரிந்துகொள்ளலாம். உஜ்ஜையினி நகரம் கடகரேகையின் மீது அமைந்துள்ள நகரமாகும், இதன் எதிர்ப்புறம் நிலநடுக்கோட்டின் மேலே லங்கோஜ்ஜை யினி மத்திய ரேகையை இணைக்க ஒரு நிலப்பரப்பு உண்மையில் இருந்ததா எனில் ஆம். அது தற்போது கடலில் அமிழ்ந்துள்ளது. நெடுவரை வகுக்கப்பட்ட காலத்தில் அந்த நிலப்பகுதி தீவாக இருந்துள்ளது. இதை உறுதிப்படுத்தும் தரவுகள் கிடைத்துள்ளன.

நிலநடுக்கோட்டின் மேலிருந்த அப்பகுதி இன்றைய மாலத்தீவுக்கு அருகே உள்ளது. தற்போதைய மாலத்தீவு நிலநடுக்கோட்டின் மேல் இல்லை, ஆனால் 200 ஆண்டுகளுக்கு முன்பு கூட மாலத்தீவின் சில தீவுகள் நிலநடுக்கோட்டின் மீது அமைந்திருந்தன. இதை ஐரோப்பிய மாலுமிகளின் வரைபடங்கள் உறுதி செய்கின்றன. சான்றாக 1676 ஆம் ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமிகள் பயன்படுத்திய வரைபடத்தைக் கூறலாம். 500 ஆண்டுகளுக்கு முன்பு நிலநடுக்கோட்டின் மேலே இருந்த சில தீவுகள் இன்று கடல் நீரின் அடியில் உள்ளன. இதில் ஒரு தீவைதான் லங்கோஜ்ஜையினி மத்திய ரேகை உஜ்ஜையினியுடன் இணைக்கிறது. தற்போதைய மாலத்தீவு கடல் மட்டத்திற்கு மேலே சிறிதளவே உயரமாக உள்ளது. அதாவது கடல் மட்டம் மேலும் சிறிது உயர்ந்தாலும் அழிந்துவிடும் நிலையில் உள்ளது. 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலப்பகுதிகள் கடல் மட்டத்தின் உயர்வால் நீரில் மூழ்கிவிட்டிருக்கின்றன. லங்கோஜ்ஜையினி மத்திய ரேகையுடன் இணையும் அந்த நிலப்பரப்பே பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்படும் 'நிரட்ச்சலங்கை'. நிராசை என்றால் ஆசையில்லாத எனப் பொருள். நிர்-பூஜ்ஜியம், நிரட்சம் என்றால் அட்ச்சம் (Latitude) பூஜ்ஜியமான என்று பொருள். அதாவது, நிரட்ச்சலங்கை என்றால் நிலநடுக்கோட்டில் பூஜ்ஜிய அட்ச்சத்தை (Latitude) உடைய இலங்கை என்று பொருள். இதுவே தென்னிலங்கை என வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

தற்போதைய தமிழ்நாட்டிற்குத் தென்கிழக்கே இருந்த நிலப்பரப்பைக் குறித்துப் பல தரவுகள் கிடைக்கின்றன. மேலும் அதைக் குறிப்பிடுகிறவர்கள் அந்த நிலப்பரப்பை இலங்கை (சிலோன்) என்று புரிந்து வைத்திருந்தனர். த சில்ட்ரன் ஆப் மூ (The Children of Mu) என்ற புத்தகத்தில் ஜேம்ஸ் சர்ச்வேர்டு (James Churchward) அவர்கள் இந்த நிலப்பரப்பை வரைபடமாக வரைந்துள்ளார். 1929 ஆம் ஆண்டு வரையப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள அந்த வரைபடம் நாம் கூறும் நிரட்சலங்கையை உள்ளடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. தாலமியின் வரைபடத்தில் இலங்கை நிலநடுக்கோட்டில் உள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த வரைபடத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் தாலமி இலங்கையை இருபது மடங்கு பெரிதாகத் தவறாக வரைந்துவிட்டார் என்ற கூற்றையும், நிலநடுக்கோட்டின் மேல் ஒரு நிலப்பரப்பு இருந்தது என்ற கூற்றையும் இணைத்து நோக்கினால் நிலநடுக்கோட்டின் மேலே நிரட்ச்சலங்கை என அழைக்கப்பட்ட நிலப்பரப்பு இருந்துள்ளது எனப் புரிந்து கொள்ளலாம். தாலமியும் போர்ச்சுகீசியர்களும் தங்கள் வரைபடத்தில் நிலநடுக்கோட்டின் மேல் அமைந்துள்ள நிலப்பரப்பை தெளிவாகவே குறித்து வைத்துள்ளனர். அந்நிலப்பரப்பு இன்றைய இலங்கை அல்ல, ஏனெனில் அது நிலநடுக்கோட்டிற்கு மேலே தொலைவில் உள்ளது.

இந்த நிரட்ச்சலங்கைக்குக் கீழே லங்கோஜையினி மத்திய ரேகையை தொடர்ந்து மகரத் திருப்பத்தில் ஏதேனும் நிலப்பரப்பை இணைக்கிறதா எனத் தேடினால், அவ்வாறு ஒரு நிலப்பரப்பு தற்போது இல்லை. மேலும், அங்கு கடலின் ஆழம் குறைவாக உள்ள பகுதிகளும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே மகரத் திருப்பத்தில் அத்தகைய நிலப்பரப்பு இல்லை என்பது நமது முடிவாகும். ஆனால், மேற்கண்ட லங்கோஜையினி மத்திய ரேகையைப் பற்றி நமக்கு தரவுகளைக் கொடுத்த திரு. வெள்உவன் ஐயா அவர்கள் மகரத் திருப்பத்தில் ஒரு நிலப்பரப்பு இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாக வாதிடுகிறார். மேலும் அந்த நிலப்பரப்பே குமரிக்கண்டம் என்பதும் அவரின் வாதம்.

பஞ்சாங்கங்கள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் வானியல் குறிப்புகளைக் கொண்ட புத்தகங்கள். இதில் உள்ள குறிப்புகளை இன்றைய கணக்கீடுகளின் மூலம் ஆய்வதன் மூலம் நாம் பல செய்திகளைப் புரிந்துகொள்ள முடியும். அந்த வகையில் லங்கோஜையினி மத்திய ரேகை தற்போது எங்கே உள்ளது என இன்றைய காலக் கணக்கீட்டின்படி அறிந்து கொள்வோமா? தேசாந்ர சமஸ்காரத்துடன் கூடிய சித்தாந்த திருக்கணிதம் என்னும் சாதக நூலில் லங்கோஜையினி மத்திய ரேகையிலிருந்து பல ஊர்களின் தொலைவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் திருச்சியை எடுத்துக்கொள்வோம். திருச்சி லங்கோஜையினி மத்திய ரேகையிலிருந்து கிழக்கே 560 மைல் தொலைவில் உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது திருச்சியில் இருந்து 560 மைல் (901 கிலோ மீட்டர்) மேற்கே இந்த ரேகை உள்ளது. மேலும் இந்த மத்திய ரேகை உஜ்ஜயினியையும் நிரட்ச்சலங்கையையும் இணைப்பதாகும். அதாவது, தீர்க்க ரேகை 75 பாகை வழியே செல்கிறது. இந்த ரேகை திருச்சியில் இருந்து மேற்கே எந்த பாகையில் அமைந்துள்ளது எனக் கணக்கிடுவோம்.

நிலநடுக்கோட்டின் நீளம்	400,75 கி.மீ (பூமியின் சுற்றளவு)
360° பாகைக்கு	400,75 கி.மீ
1° பாகைக்கு	40075 ÷360 = 111.32 கி.மீ

அதாவது

111.32 கி.மீ	1° பாகை
1 கி.மீ	1÷111.32 ° பாகை
901 கி.மீ	901/111.32 = 8° பாகை (தோராயமாக)

நெடுவரையை நாம் நேர்கோடாகக் கருதிக் கணக்கிட்டு உள்ளோம். ஆனால், அவை வளைகோடுகள் எனவே 8° பாகையில் இருந்து சிறிது வேறுபாடுகள் இருக்கும். மேற்கண்ட கணக்கீட்டின்படி மத்திய ரேகை திருச்சிக்கு மேற்கே 8° பாகையில் செல்கிறது என தெரிகிறது. திருச்சியின் தீர்க்கரேகை 78° பாகை. எனவே இந்த மத்திய ரேகை தற்போது 78°-8°=70° பாகையில் செல்லவேண்டும். லங்கோஜ்ஜையினி மத்திய ரேகை உஜ்ஜையினி வழியே செல்வதால் உஜ்ஜையினியின் தீர்க்க ரேகையான 73°பாகை வரவேண்டும். நமக்கு 70° என வருகிறது. தீர்க்க ரேகைகள் வளைகோடுகளாகவும் பழைய குறிப்புகளில் ஊரின் பெயர் மட்டுமே உள்ளது மேலும், அந்தக் காலகட்டத்தில் அவ்வூர் சற்றுத் தள்ளிக் கூட இருந்திருக்கலாம். எனவே இத்தகைய கணக்கீடுகளில்

3° பாகை பெரிய வேறுபாடு அல்ல. முடிவாக இதை இப்படிக் கூறலாம் லங்கோஜையினி மத்திய ரேகை இன்றைய தீர்க்க ரேகை +70° இக்கும் +75° இக்கும் இடையே உள்ளது. இந்த ரேகையின் தென் முனையே நிரட்சலங்கை. ராபர்ட் சீவல் (Robert Sewell) என்பவரால் எழுதப்பட்ட த இந்தியன் காலண்டர் (The Indian Calendar) என்ற புத்தகத்தில் பூஜ்ஜிய அட்சரேகையில் உள்ள நிலப்பகுதியில் இருந்து உஜ்ஜைனியை சேர்க்கும் நெடுவரையைப் பற்றிய குறிப்பு உள்ளது.

(... Here Lanka is pot es but a place supposed to be on the equator, or in lat. 0° 0 0 on the meridian of Ujjain, or longitude 75 46. It is of great importance to know the exact cast longitude of Ujjain, since upon it depends the verification of apparent phenoment throughout India. Calculation by the different. Siddhidintas can be checked by the best European science if that point can be certainly determined. The great Trigonometical Survey map makes the centre of the city 75° 49' 45" E. long, and 23° 11' 10 N. lat. But this is subject to two corrections; first, a correntíon of 1' 0 to reduce the longitude to the origin of the Madras Observatory taken as 80° 17' 21", and secondly, a farther reduction of 2' 30 to reduce it to the latest valuc, 80° 14' 51", of that Observatory, total 3' 39. This reduces the H. long, of the centre of Ujjnin city to 75° 46' 06. I take it therefore, that amidst conflicting authorities, the best of whom vary from 75° 43' to 75° 51, we may for the present accept 75° 46' as the nearest is found to exist between the new fixture and 80° 14' 51", that difference applied to 75° 40' will give the correct value of the approach to the truth. The securacy of the base, the Observatory of Madras, will before long be again tested, and whatever difference E. long, we require. The Indian Calendar - Robert Sewell, Sankara Balakrishna Dikshit)

	அட்ச ரேகை	தீர்க்க ரேகை
இன்றைய உஜ்ஜையினி நகரம்	23°30' N	73°14'E
பஞ்சாங்கங்களின்படி மத்திய ரேகை	0° - 23°30'	70°14'E
நமது கணக்கீட்டின்படி நிரட்ச்சலங்கை	0°	73°14'E

நிரட்சலங்கையின் இருப்பை மேற்கத்திய ஆய்வாளர்களின் கூற்று உறுதிச் செய்கிறது.

அலெக்ஸாண்டர் கோந்தரதோவ் என்ற ருஷ்ய எழுத்தாளர் தன்னுடைய *'Riddles of three Oceans'* என்ற நூலில் இலங்கையைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

"நிலப்பரப்புகள் பற்றிய புதியகண்டுபிடிப்புகளைக் குறித்து எழுதும் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் பண்டைக் கிரேக்கர்களும் ரோமர்களும் அறிந்திருந்த 'தாமிரபரணியை' இன்றைய இலங்கை என்று நம்புகிறார்கள் ஆனால் தாமிரபரணியைப் பற்றி பல விளக்கங்கள் இன்றைய இலங்கையோடு பெரும்பாலும் பொருந்தவில்லை. மேலும் தொன்மையான குறிப்புகள் பல தாமிரபரணியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. எவரொருவரும் தாமிரபரணியை இதுவரை கடல்வழியாகச் சுற்றி வந்ததாகத் தெரியவில்லையாதலால் அது ஒரு தீவாக இருக்க முடியாது. ஆனாலும் அது வேறொரு உலகத்தின் தொடக்கமாகவும் புவிக்கோளத்தின் எதிர்ப்பக்கம் வாழ்பவர்களுடைய நிலத்தின் வடக்கு விளிம்பாகவும் இருக்கலாம் என்பதாகக் கிப்பர்க்கஸ் (Hipparchus) குறிப்பிடுகிறார்.

(...Most historians of geographical discoveries believe Ceylon to be the place that was known to the Greeks and Romans as Taprobane. But there are many features in the description of Taprobane that do correspond to what we know about Ceylon. Taprobane is mention in very old sources. Hipparchus noted that no one hade yet circumnavigated Taprobane so that it might very well have not been an island but the beginning of another world the northern edge of the lands of those living opposite....)

தாமிரபரணியில் நிழல்கள் வடக்கு நோக்கி விழுவதற்கு மாறாகத் தெற்கு நோக்கி விழுகின்றன. கதிரவன் இடப்பக்கம் தோன்றி வலப்பக்கம் மறைகிறது என்று பிளினி கூறுகிறார். இத்தீவு தென்கோளரையில் இருந்ததையே இது புரிய வைக்கிறது. ஆனால் இன்றைய இலங்கையோ வடக்கு அட்சரேகை 5இக்கும் 9இக்கும் இடையே அமைந்திருக்கிறது.

(...Pliny said that on Taprobane the shadows fell to the south instead of north, and the sun rose in the left and set on the right. This means the island was in the southern Hemisphere. Yet Ceylon is situated roughly between 5 degree and 9 degree north....) "

(The riddles of three Oceans P. 169-170)

வடஅரைக் கோளத்தில் இருப்பவர்களின் நிழல் சற்று வடக்கே விழும், மேலும் சூரியன் வலப்பக்கம்

தோன்றி இடப்பக்கம் மறையும். தென்அரைக் கோளத்தில் இருப்பவர்களின் நிழல் சற்று தெற்கே விழும், மேலும் சூரியன் இடப்பக்கம் தோன்றி வலப்பக்கம் மறையும். தாமிரபரணியில் நிழல்கள் வடக்கு நோக்கி விழுவதற்கு மாறாகத் தெற்கு நோக்கி விழுகின்றன. கதிரவன் இடப்பக்கம் தோன்றி வலப்பக்கம் மறைகிறது என்று பிளினி கூறுவதிலிருந்து அது தெற்கு அரைக்கோளத்திலுள்ள நிலத்தைக் குறிக்கிறது எனப் புரிந்து கொள்ளலாம். இந்த நிலம் நாம் கூறும் நிரட்சலங்கையை ஒட்டிய தெற்கே இருந்த நிலப்பகுதியாக இருக்கவேண்டும்.

லங்கா என்ற சொல்லை மேலைநாட்டார் சிலோன் என்றே ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்திருக்கிறார்கள். இதனாலேயே இன்றைய இலங்கை பண்டைய ரோம கிரேக்கக் குறிப்புகளோடு பொருந்தவில்லை. அவர்களின் குறிப்புகளிலிருந்து இலங்கையைத் தாமிரபரணி *(Taproboni)* என்றே குறிப்பிட்டடுள்ளனர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. பஞ்சாங்கத்தின் மற்றொரு குறிப்பில் நிரட்சலங்கை என்ற இடம் பூஜ்யம் பாகையில் (நிலநடுக்கோடு) இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிரட்சம் என்ற சொல்லிற்குப் பூகோள சம ரேகை என்று தமிழ்மொழி அகராதி என்று பொருள் சொல்கிறது. (நிராசை - ஆசை இல்லாமல், அட்சம் - அட்சரேகை, நிரட்சம் - அட்சம் பூஜ்ஜியமான, நிரட்சலங்கை - பூஜ்ஜிய அட்சரேகையில் அமைந்த இலங்கை என அழைக்கப்பட்ட நிலப்பரப்பு). அலெக்சாண்டர் கோத்திரத்தோவ்வின் கூற்றையும் இணைத்துப் பார்க்கையில் அவர் லங்கா என குறிப்பிடுவது நிலநடுக்கோட்டின் மேலிருந்த நிரட்சலங்கை என்ற தீவையே என்றும், அது தற்போதைய மாலத்தீவுக்கு சற்று தென்கிழக்கே நிலநடுக்கோட்டின் மீது இருந்தது என்றும் முடிவுக்கு வரமுடியும்.

இதை உறுதி செய்ய மேலும் சில தரவுகளைப் பார்ப்போம். கில்பர்ட் சிலேட்டர் *(Gilbert Slater)* என்னும் ஆங்கிலேயஆய்வாளர் தமிழர்களின் வானியல் அறிவை "இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு *(The Dravidian element in Indian culture)*"என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். இதில் தமிழர்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளின் நேரங்களைக் கணிக்க தங்களுக்கென்று தனியான நெடுவரைகளை அமைத்திருந்தனர் எனக் கூறுகிறார். மேலும் தமிழர்கள் தாங்கள் அமைத்திருந்த நெடுவரையில் வானாராய்ச்சி நிலையத்தையும் கட்டமைத்து வானாய்வு செய்துள்ளனர் என தனது புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். தனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தெரிந்துகொண்டதாகக் கூறுகிறார்.

அப்புத்தகத்தில் பின்வருமாறு விவரிக்கிறார்.

வான் மண்டலம் பன்னிரண்டு மனையகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஞாயிறு ஒரு புது மனையகத்தில் புகும் நேரம் காலையாயினும் சரி, நண்பகலாயினும் சரி, இரவாயினும் சரி, அந்தக் கணத்திலேயே மாதம் பிறக்கிறது. நாட்களும் ஞாயிற்றெழுச்சியுடன் தொடங்குகிறது. ஆனால், ஞாயிற்றெழுச்சி என்பதும் இந்தியாவில் ஏதேனும் ஒரு பகுதியில் ஞாயிறு தோன்றும் வேளையன்று;[1] உலக நடு நேர் கோட்டில்,[2] நடுநிரைகோடு' அக்கோட்டுடன் சந்திக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கில் ஞாயிறெழும் வேளையாகவே அது அமைந்துள்ளது. தமிழர் தமக்கென்று வகுத்த இந்த நடுநிரைகோடு தமிழர் பண்டை வானாராய்ச்சி நிலையம் அமைந்திருந்த இடத்துக்கு நேராயிருந்ததாக அறிகிறோம்.

[1 Equator. 2 Meridian.]

உலகின் இத்தனியுயர் சிறப்புக்குரிய ஆண்டுக் கணிப்புமுறை தமிழருக்கு எப்போது ஏற்பட்டது என்று எவரேனும் காலவரையறை கண்டுணர்ந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அது தனியுயர் சிறப்புடைய தென்பதும், நடை முறையில் எவ்வளவு வசதிக்கேடாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அம்முறை இடைச் சங்கங்கள், கடைச் சங்கங்கள் இருந்து நடைபெற்ற தமிழகப் பகுதி இன்று கடலுளாழ்ந்துவிட்டது. அதில் ஒரு பண்டைத் தலைநகரமே தமிழரின் இவ்வாராய்ச்சிக்குரிய மூல இடம் என்று கருதலாம். அது பஃறுளி ஆற்றின் கரையிலிருந்த தென்மதுரை என்று கருத இடம் உண்டு. ஆண்டுத் தொகுப்பில் கணிக்கப்பட்ட நிலையில் அது குமரிமுனைக்குத் தெற்காகவும் இலங்கைக்கு மேற்காகவும் கடலில் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டுவதாயுள்ளது.

பிடிவாதமாகப் பின்பற்றப்படுகிறது என்பதும், மற்றெல்லா ஆண்டுத்தொகுப்பு முறைகளையும் விட

அது துல்லியமான வானிலைக் கணிப்பைக் குறியாகக்கொண்டுள்ளது என்பதும் தனிப்படக் குறிப்பிடத்தக்கன. இந்தியாவிலேயே, திராவிடமல்லாப் பண்புகளின் தலையீடில்லாத பகுதியிலேயே - அதாவது தமிழகத்திலேயே - திராவிட அறிவுநூல்கள் முழுத் தற்சார்புடன் தொடர்ச்சியான வளர்ச்சிபெற்றிருந்தன என்பதை இது காட்டுகிறது.

இதுவரை வேதங்களிலுள்ள திராவிட நகரங்கள், திராவிடக் கலைகள் ஆகியவை பற்றிய சில குறிப்புகள் தவிர, திராவிட நாகரிகத்தின் தொல்பழமைக்கு முடிவான சான்றாக மதிக்கக்கூடிய எதையும் நாம் குறிப்பிடவில்லை. ஆயினும் தென் இந்தியாவுக்கும் உலகின் மற்ற நாகரிக மையங்களுக்கும் இடையேயுள்ள தொல்பழந் சான்றுகள் ஏராளமான தொடர்புகளைப்பற்றிய ஜி. எலியட் சுமித்,' வில்ப்ரிட் எச். ஷாப்', ஜே. வில்ப்ரிட் ஜாக்ஸன்', டப்ளியூ. ஜே. பெரி' முதலிய பலரின் ஆராய்ச்சி வெளியீடுகளில் காணலாம். இவ்வெல்லா ஆராய்ச்சியாளர் முடிபுகளையும் பொதுமுறை வாசகர்களுக்கு எளிதாகத் திரு. பெரி "ஞாயிற்றின் சேய்கள்" என்ற தம் நூலில் தொகுத்துரைத் துள்ளார்.

[1. G. Elliot Smith, 2. Wilfrid H. Schoff, 3. J. Wilfrid Jackson,.4. W, J. Perry, 5. Logan's Classic, District Manual of Malabar.]] "

தமிழ்நாட்டுக்குக் கீழே நடுவரையில் தமிழர்கள் சூரியனை ஆய்வுசெய்யும் வான்ஆய்வு மையத்தை கட்டியிருந்தனர் என கில்பர்ட் சிலேட்டர் கூறுகிறார்.

நிலநடுக்கோட்டின் மீதும் நெடுவரையின் மீதும் அமைந்த பண்டைய தமிழர்களின் வான் ஆய்வு மையங்கள் நிரட்சலங்கையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை தற்போது எங்கேயுள்ளன என நாம் பார்க்கலாமா?

பண்டைய தமிழர்கள் கட்டமைத்த சூரிய ஆய்வு நிலையங்கள் இன்றைய மாலத்தீவிற்கு அருகே தென்கிழக்கில் தற்போது கடலில் மூழ்கியுள்ள தீவுகளில் இருக்கவேண்டும் என்பதற் கான தரவுகள் கிடைத்துள்ளன. ஆய்வு மையங்கள் என்றால் சூரியனின் நகர்வுகளை ஆண்டு முழுவதும் பார்ப்பதற்கு ஏதுவான கட்டட அமைப்பும், செங்குத்தாக நட்டுவைக்கப்பட்ட குச்சியின் நிழலை துல்லியமாக அளக்க ஏதுவான அமைப்புகளும் என நாம் புரிந்துகொள்கிறோம். மேலும் இந்தக் கட்டட அமைப்பு சூரியனின் வட, தென் செலவுகளை துள்ளியமாகக் கணிக்க கிழக்குத் திசையை நோக்கி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்றைய மாலத்தீவு குமரிக் கடலில் உள்ள பல தீவுகளைக் கொண்ட ஒரு தீவுநாடாகும். மாலேயை தலைநகராகக் கொண்ட இந்நாடு தமிழ்நாட்டின் தென்மேற்கே நிலநடுக்கோட்டிற்கு அருகே அமைந்துள்ளது.


"கடலுக்கு கீழ் ஒரு நீண்ட மலைத்தொடராகக் காணப்படும் இப்பகுதி ஒரு காலத்தில் நிலப் பகுதியாக இருந்தது என்பதையும், அங்கு மக்கள் வசித்திருக்கிறார்கள் என்பதையும், அங்கு நடைபெற்ற ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அங்கு வழங்கப்படும் மொழி, கலாச்சார, வாய்மொழி, ஒப்பீட்டு வரலாறுகள் சங்க காலத்திலேயே கிமு 300 இக்கு முன்பே மனிதர்கள் அங்கு வாழ்ந்தார்கள் எனவும் அவர்கள் தமிழர்கள் எனவும் சொல்கின்றனர் (மாலன், புதிய தலைமுறை, பிப்ரவரி 2012 மாதஇதழ் பக்கம் 24)."

மாலத்தீவுகளில் தொல்பொருள் ஆய்வு ஹெச். சி. பீ. பெல் (Harry Charles Purvis Bell) என்பவர் செய்த ஆய்விலிருந்து தொடங்குகிறது. அவரது ஆய்வில் கி.பி. நான்காம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்து பௌத்தம் கொண்டுவரப்பட்டது என்றும், பௌத்தம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாம் வரும் வரை தொடர்ந்தது என்றும் தெரியவந்தது.

1980 இல் மாலத்தீவு அரசு தொல்பொருள் ஆய்வு செய்ய ஏயெரத்தாள் (Thor Heyerdahl) என்ற நார்வே நாட்டு ஆய்வாளருக்கு அனுமதி அளித்தது. மாலத்தீவில் இஸ்லாம், பௌத்தத்திற்கு முந்தைய கலாச்சாரம் ஒன்று அங்கிருந்ததை ஏயெரத்தாள் கண்டுபிடித்தார். அவர் ஆய்வின்படி கி.மு. இரண்டாயிரம் காலப்பகுதியிலேயே மாலத்தீவு கடல்வழி வணிகத்தில் முக்கியப் பங்காற்றியுள்ளது. அவரின் கருத்துப்படி "சூரிய வணக்கம் செய்த கடலோடிகளே" மாலத்தீவின் பூர்வ குடிகளாவர். இப்போதும் இங்குள்ள பள்ளிவாசல்கள் கிழக்கு நோக்கியே உள்ளன. தீவாக இருப்பதால் கட்டிடப் பொருள்கள் தட்டுப்பாடுக் காரணமாக புதியக் கலாச்சாரங்கள் தோன்றும்போது பழையக் கலாச்சாரத்தின் கட்டிடங்களின் அத்திவாரத்தின் மீது


புதியக் கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. இதனால் பள்ளிவாசல்கள் சூரிய வணக்கக் கோயில்கள் மீது எழுப்பப்பட்டுள்ளன என ஏயெரத்தாள்பதிவு செய்தார்.

ஏயெரத்தாள் சூரிய வணக்கக் கோயில்கள் என்று கருதியவை பண்டைய தமிழர்களின் சூரிய ஆய்வுக் கூடங்கள் ஆகும். தீவுகளின் நடுவே கிழக்கே சூரியனின் எழுச்சியைப் பார்க்க ஏற்றவாறு அமைக்கப்பட்ட இந்த ஆய்வகங்களில் இருந்து பண்டையத் தமிழர்கள் சூரியனின் நகர்வுகளை உற்று நோக்கி, சூரியனின் வடசெலவு, தென்செலவு காலங்களை அளந்து, சூரிய நாட்காட்டியை உருவாக்கி இருக்கிறார்கள். இன்றைய மாலத்தீவிற்குச் சற்றுத் தென்கிழக்கே கடல் மட்டம் குறைவாக உள்ள நிலநடுக்கோட்டின் மீது 'நிரட்சலங்கை' இருந்திருக்கிறது. தற்போதைய மாலத்தீவின் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டுமானங்களைப் போல் இங்கும் சூரியஆய்வு கூடத்திற்கான கட்டுமானங்கள் கிடைக்கக்கூடும். இனிவரும் காலங்களில் அங்கு கடலாய்வு செய்தால் அத்தகையக் கட்டுமானங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்படலாம். ஏயெரத்தாளின் இந்த ஆய்வு முடிவை மற்ற ஆய்வாளர்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், சூரிய வணக்கம் செலுத்திய கடலோடிகள் என்பது வரை சரியாகப் பயணித்தவர் பின்னர் தடம் மாறிவிட்டார். கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டக் கட்டிடங்களைப் பார்த்தவர் அவை சூரியனை ஆய்வுச் செய்ய ஏற்படுத்தப்பட்ட கட்டுமானங்கள் என்பதை புரிந்து கொள்ளாமல் சூரியனை வணங்கிய மக்கள் எழுப்பியக் கட்டடங்கள் எனப் புரிந்து கொண்டார். அதனால் சூரிய வணக்கத்தைக் கொண்டிருந்த அஷ்டக்குகள், மாயன்கள் போன்றவர்களுடன் தொடர்புபடுத்தி தனது ஆய்வை வேறு திசையில் கொண்டு சென்றுவிட்டார். இதனால் அவரின் இந்த மிகப்பெரியக் கண்டுபிடிப்பு ஆய்வாளர்களின் கவனத்தைப் பெறாமல் போய்விட்டது. இப்போது நமக்கு இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது. எவ்வளவோ நிலப்பகுதிகள் இருந்தும் கடலின் நடுவே உள்ள சிறு தீவுகளை ஏன் பழந்தமிழர்கள் ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும்?



வடசெலவு, தென்செலவு ஆகிய சூரியனின் கிடைமட்ட நகர்வுகளை நுட்பமாக அளக்க நிலநடுக்கோட்டில் இருந்து ஆய்வுச் செய்வது இன்றியமையாததாகும். அதைச் சற்று விளக்கமாகப் பார்ப்போமா? கிழக்கு, மேற்காக 'அ', 'ஆ', 'இ' என மூன்று குத்துக் கோடுகள் போடப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்துக் கொள்ளுங்கள். நாம் கிழக்கு நோக்கி நிற்பதாகக் கொள்வோம். சரியான கிழக்கு நோக்கி இருக்கும்போது இடப்புறம் உள்ள 'அ' கோடு வடக்கேயும் வலப்புறம் உள்ள 'இ' கோடு தெற்கேயும் இருக்கும் அல்லவா? இப்போது ஒருவர் கோடு 'அ' விலிருந்து கோடு 'இ' யிற்கு கிடைமட்டத் திசையில் நகர்ந்துப் போவதாகக் கொள்வோம். கோடு 'அ' விலிருந்து பார்க்கும்போது அவர் வடக்கிலிருந்து தெற்கே "போனது" போலவும், கோடு 'இ' யிலிருந்து பார்க்கும்போது வடக்கில் இருந்து தெற்கே "வந்தது" போலவும் தெரியும். அதுவே கோடு 'ஆ' விலிருந்து பார்க்கும்போது அவர் வடக்கிலிருந்து "வந்து" பின்னர் தெற்கு நோக்கி "போனது" போலத் தெரியும். நகர்பவரைச் சூரியனாகக் கருதினால் நடுவில் உள்ள கோடு 'ஆ' விலிருந்து பார்க்கும் ஒருவருக்குச் சூரியன் வடக்கேயும், தெற்கேயும் பயணிப்பது தெரியும். பூமியில் கடகரேகைக்கும், மகரரேகைக்கும் இடையே நிலநடுக்கோடு உள்ளது. சூரியனின் நகர்வை நுட்பமாகக் கணிக்க நிலநடுக்கோட்டின் மீது

இருப்பது இன்றியமையாதது. எனவேதான் நாட்காட்டியையும், நெடுவரைகளையும் உருவாக்கிய பண்டைய தமிழர்கள் சூரியனின் நகர்வை நுட்பமாக அளக்க நிலநடுக்கோட்டுப் பகுதியைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இன்றைய தமிழ்நாட்டுக்கு மிக அருகில் இருக்கும் நிலநடுக்கோட்டு நிலப்பகுதி 'நிரட்சலங்கையே' எனவே தங்களின் சூரிய ஆய்விற்கும், நெடுவரைக்கும் நிரட்சலங்கையை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.




கோயிற் கட்டிடக்கலை

பாகம் மூன்று



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை



விமானத்தின் உறுப்புகள் - மறுபார்வை

அதிட்டானம்

பித்தி (சுவர்)

பிரஸ்தரம் : பிரஸ்தரம் /பிரத்தரம் கூரை எனப்படும் பகுதி

க்ரீவம் - கழுத்து

சிகரம் - கலயம்

ஸ்துபம்: சிகரத்தின் உச்சியில் ஏற்படுத்தப் படும் துலையில் இருத்தப்படும் ஆறோவது அங்கம் ஸ்தூபி /கலசம்

ஏகதல விமானம் பற்றிய ஒரு பார்வை

அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம்,சிகரம் ,ஸ்தூபி ஆகிய ஆறு வர்க்கங்கள் அடங்கிய ஆலயத்திற்கு ஏகதல விமானம் அல்லது ஒரு நிலை விமானம் அன்று பெயர்.

விமானத்தின் உயரம் என்பது அதிஷ்டானம் முத்துல ஸ்தூபி வரை உள்ள உயரமாகும.

இந்த விமான உயரங்கள் ஐந்து வகைப்படும்

1. சாந்திகம்

2. பௌஷ்டிகம்

3. ஜெயதம்

4. அற்புதம்

சார்வாகாமிகம்

மாமல்லை அர்ச்சுணன் தபசு சிற்ப காட்சியில் காணும் சிறு நாகர - ஏகதல விமானம், துல்லியமாக சார்வகாமிக அளவுகளை பின்பற்றியுள்ளது

அர்ச்சுணன் தபசு






Figure-1:

Sarvakamikam -Arjuna's Penance

Figure-2: Sarvakamikam

மாமல்லை இராமானுஜ மண்டபம் - ஏகதல விமானம்

மாமல்லை இராமானுஜ மண்டபத்தின் முகப்பின் இரு புறங்களிலும் இருக்கும் ஏகதல விமானங்கள்






Figure3:Ramanujar Mandapam

திரௌபதி இரதம்- -ஏகதல விமானம்

திரௌபதி இரதம் என வழங்கப்படும் இளங்கோயில் வடிவம், விமான அமைப்புகளில் மிக எளிமையானது. சம சதுர பக்கங்கள் உடைய 'நாகர விமானம் " இதில் அதிட்டானம், சுவர், சிகரம், ஸ்தூபி என நான்கு அங்க கட்டுமானமாக உள்ளது.

இளங்கோயில் வடிவமான இதில் பிரஸ்தரம் எனப்படும் கூரை உறுப்பும், கிரீவம் எனும் கழுத்துப் பகுதியும் தனிப்படக் காட்டப் படவில்லை

அதிட்டானம் அமரும் உயர்ந்த மேடை 'பீடம்' எனப்படும். ஆனால் இது விமானத்தின் அடிப்படை அங்கமாக கருதப் படுவதில்லை



Figure-4: Draupadi Ratham

புதுக்கோட்டை விசலூர் -ஏகதல விமானம்

கருவறை அதிஷ்டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம் மற்றும் ஸ்தூபி வழியாக 6 அங்கங்கள்/ பாகங்களுடன் கட்டப்பட்டுள்ளது.

கலசம் / ஸ்தூபி உள்ளிட்ட ஒற்றை அடுக்கு நாகரா பாணி கல் விமானம் சதுர கருவறையில் உள்ளது, இது சுத்த விமானம் என்று அழைக்கப்படுகிறது



Figure-5: Visalur Ekathala

அடுத்த இதழில் நாம் காணவிருக்கும் தலைப்பு விமான வடிவம் என்னும் விமான ஆகிருதி.

விமான வடிவம் (ஆகிருதி) ஆறு வகைப்படும்

1.சதுரம் (சதுரம்)

2.வட்டம் (விருத்தம்)

3.நீண்ட சதுரம் (ஆயத சதுரம்)

4. நீண்ட வட்டம் (ஆயத விருத்தம்)

5. ஆறுவட்டம் (ஷடாச்சரம்)

6.எட்டுப்பட்டம் (அஷ்டாங்கம்)

என்று ஆறுவிதமான வடிவங்களை விமானத்தில் அமைக்கலாம்.

மலையமான்கள்





வே.பார்த்திபன்
ஆற்றுப்படை
திருச்சிராப்பள்ளி

12ம் நூற்றாண்டு இலக்கியமான திருத்தொண்டர் புராணம் என கூறப்படும் பெரியபுராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றை கூறுகிறது. 8 ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டத்தொகை மூலமாய் வைத்து சேக்கிழாரால் எழுதப்பட்டது பெரியபுராணம். இதில் மலையமான்கள் ஒருசிலரைப்பற்றி குறிப்புகள் வருகிறது. எனவே இக்காலத்திய மலையமான்களை பல்லவர்காலமான கி.பி 5-8 ம் நூற்றாண்டு என கருதலாம்.

இலக்கியத்தில் மலையமான்கள்:

மலையமான்களில் முதல் மன்னனாகவும், தலைசிறந்தவராகவும் அறியப்படுபவர் திருமுடிக்காரி. மூவேந்தர்களைப் போல முடியணிந்ததால் **"திருமுடிக்காரி"** என இவர் பெயர் பெற்றார். கடையேழு வள்ளல்களில் ஒருவராய் இவர் போற்றப்படுகிறார்.

"காரி யூர்ந்து பேரமர் கடந்த

மாரி யீகை மறப்போர் மலையன்"

என புறநானூறு சிறப்பித்து கூறுகிறது. இவனது குதிரைக்கும் காரி என்றே பெயர். குதிரை வடிவில் இவர் காசு அச்சடித்துள்ளார். இக்காசுகள் திருக்கோவிலூர் சுற்றுவட்டார ஆற்றங்கரைகளில் நிறைய கிடைத்துள்ளது. திருக்கோவிலூரை தலைமையிடமாய் கொண்டு இவர் அரசு புரிந்தார் என்பதனை,

"துஞ்சாமுழவின் கோவற் கோமான் நெடுந்தேர்க் காரி"

என்ற அகநானூற்று பாடல் ஒன்றின் வாயிலாய் அறியலாம். இவனது வள்ளல்தன்மை குறித்து நிறைய பாடல் புறநானூற்றில் வருகிறது. முள்ளூரில் பெய்யும் மழையின் துளிகளை விட தன்னை புகழ்ந்து பாடும் புலவர்களுக்கு இவன் நிறைய தேர்களை அளித்தான் என புறநானூறு கூறுகிறது.

"நாளன்று போகிப் புள்ளிடைத் தட்பப்

பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்

வறிது பெயர்குவர் அல்லர் நெறிகொளப்

பாடு ஆன்று இரங்கும் அருவிப்

பீடுகெழு மலையற் பாடியோரே"

நாள். நேரம் பார்க்க காரி கொடையளிப்பதில்லை. அவனிடம் சென்றாலே வாரி வழங்குவான் கபிலர் காரியின் கொடைத்தன்மையை புகழ்கிறார்.

மூவேந்தர்களில் காரி எவன் பக்கம் இருக்கிறாரோ அவரே வெற்றிபெறுவர் என சங்க இலக்கியங்கள் இவரை புகழ்ந்து பாடுகிறது.

"குன்றத்து அன்ன களிறு பெயரக்

கடந்துஅட்டு வென்றோனும் நிற்கூறும்மே

வெலீஇயோன் இவன் எனக்

கழல்அணிப் பொலிந்த சேவடி நிலம்கவர்பு

விரைந்துவந்து சமம் தாங்கிய

வல்வேல் மலையன் அல்லன் ஆயின்

நல்அமர் கடத்தல் எளிதுமன் நமக்குஎனத்

தோற்றோன் தானும் நிற்கூறும்மே"

(புறநானூறு, 125)

திருமுடிக்காரி சோழனுக்குப் போர் உதவி புரிந்திருக்கிறான். ஒருமுறை சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவனும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் போர் புரிந்தனர். இவர்கள் இருவரில் சோழனுக்குச் சார்பாய் காரி நின்று வெற்றியைப் பெற்றுத் தந்தான். பின்னொரு சமயம் சேரனுக்கும் உதவிபுரிந்து சோழனை தோற்கடித்துள்ளான். இதிலிருந்து வேளிர் குடிகளில் மலையமான்கள் வலிமை பொருந்திய படைபலம் மிக்கவர்கள் என அறியலாம். ஆநிரை கவரும் வெட்சிபோரில் தலைமையேற்று குழுவாய் சென்று, கவர்ந்த ஆநிரைகளை தம் மக்களுக்கு பங்கிட்டு கொடுத்துள்ளான் திருமுடிக்காரி.

சக வேளிருடன் போர்:

திருமுடிக்காரி தன் சக வேளிர் இனத்தவருடன் பகைமை ஏற்ப்பட்டு போரிட்டுள்ளான், ஏழு வள்ளல்களில் ஒருவனான, கொல்லிமலைப்பகுதி அரசனான 'வல்வில் ஓரி' யுடன் போரிட்டு, அவனைக்கொன்று அவனது நகரிலேயே வீறுகொண்டு நடந்து வந்ததை,

"ஓரிக்கொன்ற ஒருபெருந் தெருவிற்

காரி புக்க நேரார் புலம்போல்"

என்ற நற்றிணை பாடலில் கபிலர் பாடுகிறார். இந்நிகழ்வினால் திருமுடிக்காரி "கொல்லிமலை பொருநன்" எனும் சிறப்புப் பெயர் பெற்றான். சக வேளிர்களின் பகைமையை சம்பாதித்த திருமுடிக்காரி

இறுகியில் அகியமானின் ககடூரை காக்கி அளிக்கான். வெஞ்சினம் கொண்ட அகியன் பிரிகொரு சமயம். கன்படையோடு கிருக்கோவிலாரை காக்கி பெருஞ்சேகப்படுக்கினான். இப்போருக்குப்பின் கிருமுடிக்காரி குறிக்க பாடல் ஏகும் கிடைக்கவில்லை. ஒருங்கால் இப்போரில் அவன் இறந்திருக்கக்கூடும்.

திருமுடிக்காரியின் மகன்:

கிருமுடிக்காரியின் மறைவக்குப்பின் அவனகு மகன் "மலையமான் சோமிய ஏனாகி கிருக்கன்னன்" என்பவன் அரசனாகிறான். போரில் கோற்ற சோமன் ஒருவனை கனக்குரிய முள்ளூரில் வைக்கு பாகுகாக்கவன் கிருக்கன்னன் என இவனது வீரத்தினை புறநானூறு கூறுகிறது.

பறம்பு நாட்டை ஆண்ட பாரி. குறுநில மன்னன்.கடையெழு வள்ளல்களில் ஒருவன்.முல்லைக்கொடி ஒன்று பற்றிக் கொள்ளக் கொம்பு இல்லாகு வாடுவகு கண்டு கன் கேரை அகற்குக் கொடுக்கவன். கபிலர் சங்கப் பலவருள் பகம் மிக்கவர். பாரியோடு நீண்ட காலம் உடன் வாழ்ந்கு நட்புச் கொண்டவர். மூவேந்கர்களும் கூட்டணியமைக்கு பாரியை போரில் கொன்றனர்.பாரி இறந்கபின். பாரியின் மகளிரான அங்கவை. சங்கவையை அமைக்குக் கொண்டு வேறு நாடு சென்று வேளிர்களிடம் அப்பெண்களை மணமுடிக்க வேண்டினார். மூவேந்கரின் பகைமை இகனால் வரும் என அஞ்சி அவர்கள் மறுக்க இறுகியில் கிருக்கோவிலார் வந்கடைந்கு அன்றைய மலையமானிடம் இப்பெண்களை ஒப்படைக்குவிட்டு. பின் நண்பனை எண்ணி உண்ணா நோன்பிருந்கு உயிர் விட்டார் என கூறுவர். இச்செய்கிக்குரிய இலக்கியம் நமக்கு கிடைக்காவிடினும். பிற்கால சோழரான ராஜராஜப்பெருவேந்கன் கல்வெட்டு இச்செய்கியை கூறுகிறகு. கபிலர் காலக்கில் வாழ்ந்க கிருக்கன்னன் அந்க இரு பெண்களுக்கும் பகமிடம் கொடுத்த மலையமானாய் இருக்க வாய்ப்புள்ளது.

இராஜராஜனின் காய் மலையமான் குடியை சார்ந்கவர் என்பகும். அவர் சுந்கரசோழர் இறந்ககும் உடன்கட்டை ஏறியிறந்கார் என்பகனயும் மேலும் கபிலர்பற்றிய குறிப்பும் கீழ்க்கண்ட பாடல்வடிவ கல்வெட்டின் மூலம் அறியலாம்.

"காளா கருவுங் கமழ்சந் தனமுந்

தாளார் திரளச் சாளமு நீளார்

குறிஞ்சியுங் கொகுடியு முகடுயர் குன்றிற்

பறிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர்

புதுமத கிடறிப் போர்க்கலிங் கிடந்து - - - - - - -

மொதுமொது முதுதிரை விலகி கதுமென

வன்கரை பொருதுவருபுனற் பெண்ணைத்

தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது

மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்

தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன் - - - - - -

மூரிவண் டடக்கைப் பாரித னடைக்கலப்

பெண்ணை மலயர்க் குதவிப் பெண்ணை

யலைபுன லழுவத் தந்தரி க்ஷஞ்செல

மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்

கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர் - - - - - -

பேரட் டான வீரட் டானம்)"

12ம் நூற்றாண்டு இலக்கியமான கிருக்கொண்டர் புராணம் என கூறப்படும் பெரியபுராணம் 63 நாயன்மார்களின் வாலாற்றை கூறுகிறகு. 8 ம் நூற்றாண்டில் வாழ்ந்க சுந்கரரின் கிருக்கொண்டக்கொகை மூலமாய் வைக்கு சேக்கிழாரால் எழுகப்பட்டகு பெரியபுராணம். இகில் மலையமான்கள் ஒருசிலரைப்பற்றி குறிப்புகள் வருகிறகு. எனவே இக்காலக்கிய மலையமான்களை பல்லவர்காலமான கி.பி 5-8 ம் நூற்றாண்டு என கருகலாம். சங்ககாலக்கிற்கு பின் இவர்களைப்பற்றி கிடைக்கும் குறிப்புகள் பெரியபுராணம் வாயிலாகவே அறிய முடிகிறகு. இப்புராணக்கில் மெய்ப்பொருள் நாயன்மார் மலையமான் குடியை சேர்ந்தவராய் அறியப்படுகிறது.

இப்புராணக்கில் மலையமானை எகிர்க்க மற்றுமொரு சிற்றரசனாய் "முக்காசன்" என்பவரை சேக்கிழார் கூறுகிறார். இகே காலகட்டக்கில் வானகோ முக்கரசன் என்பவரின் நடுகற்கள் செங்கம் பகுகியில் கிடைக்கிறகு. இவர்கள் முகலாம் நரசிம்மவர்ம பல்லவனின் ஆளுகையில் இருந்கவர்கள் இந்நடுகல் கூறுகிறகு. இப்பகுகியிலிருந்க மற்றுமொரு ஆளுமைமிக்கவனாய் "மாங்கபருமன்" என்பவனை அங்குள்ள நடுகற்கள் கூறுகிறது. இவ்விருக்குடியினருக்கும் பகைமை இருந்துள்ளது.

மாங்கபருமருக்கு அகாவாய் மலையமான் இருந்திருக்கக்கூடும். அகவே 'வானகோமுக்கரசர்" அடிக்கடி திருக்கோவிலூரை தாக்கியுள்ளார், இந்நிகழ்வை சேக்கிழார்,



"இன்னவா றொழுகு நாளில்

இகல்திறம் புரிந்ததோர் மன்னன்

அன்னவர் தம்மை வெல்லும்

ஆசையால் அமர்மேற் கொண்டு

பொன்னணி யோடை யானை

பொருபரி காலாள் மற்றும்

பன்முறை இழந்து தோற்றுப்

பரிபவப் பட்டுப் போனான்"

என மெய்ப்பொருள் நாயனார் பராணக்கில் 5 ம் பாடலில் கூறுகிறார். எனவே மெய்ப்பொருள் நாயன்மார் காலக்கை 7 ம் நூற்றாண்டின் இடைப்பகுகியாய் கூறலாம். கஞ்சைப் பெரியகோவிலில் இந்நாயன்மாருக்கு ராஜாராஜனின் அதிகாரியான "பொய்கைநாட்டு கிமான் கென்னவன் மூவேந்த வேளான்" உலோகபடிமம் எமுப்பியகை அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது. "கக்கா நமரோ காண் என்ற மிலாடுடையான்" என இவ்வடியாரை கல்வெட்டில் காணலாம். மலைநாடுடையான் என்கே பிற்காலக்கில் "மிலாடுடையான்" என அழைக்கப்பட்டது.

கல்வெட்டில் மலையமான்கள்:

கடலார் மாவட்டம் பெரியநெசலாரில் கல்வெட்டு பொறிப்புடன் 9 ம் நூற்றாண்டின் முற்பகுகியாய் கருகத்தக்க ஒரு கொற்றவை சிற்பம் கண்டறியப்பட்டது.

"ஸ்ரீ முக்குல மலையமான் சாதன்"

என அகில் கல்வெட்டு வாசகம் உள்ளது. முக்குல மலையமான் வம்சக்கை நேர்ந்க சாகன் என்பவன் இந்க கொற்றவையை செய்கு வைக்கிருப்பகை இந்தக்கல்வெட்டு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

கிளியூர் பெருமான்:



விழுப்பரம் மாவட்டம் உளுங்கார்ப்பேட்டை வட்டக்கில். பெரியசெவலை அருகில் உள்ள ஊர் "கிளியர்" இவ்வூரை அடையாளப்படுக்கியே "கிளியர் மலையமான்" என பிற்கால சோமர் கல்வெட்டில் கம்மை மலையமான்கள் அமைக்குக் கொண்டனர். இம்மாபில் முகல் மலையமானாய் அறியப்படுபவர் முகலாம் பராந்ககசோமனின் கல்வெட்டில் வருகிறார்.(ARE 1927&28 No.151) கிளியர் பெருமானார் மிலாடுடையார் கயிறார்ப் பெருமானார். எனும் பெயருடைய அகிகாரியின் மனைவியான ராஜகேவி கேசாகக்கிய பெருமானார் என்பவர் கிருக்கோவிலூர் வீரட்டானத்திற்கு 100 ஆடுகள் நிவந்தமளித்துள்ளார்.

நரசிம்மவர்மன்:

இகே காலகட்டக்கில் சக்கிநாகன். சிக்கவடவன்.மிலாடுடையான்.நரசிம்மவர்மன் என பல சிறப்பபெயர்களில் அமைக்கப்பட்ட மற்றொரு மலையமான் பராந்தகர் காலம் முதல் உத்தமசோழன்

காலம் வரையிலும் வருகிறார். பராந்தகரின் புதல்வன் ராஜாதித்தன் இராஷ்டிரகூடரோடு நடந்த தக்கோலபோரில் இறக்க தொண்டைநாடும், நடுநாட்டில் பலபகுதியும் ராஷ்ட்ரகூடரான கன்னரதேவன் வசம் போகிறது. அச்சமயம் நரசிம்மவர்மன் கன்னரதேவனின் ஆளுகைக்குட்பட்ட அரசனாகி, திருநாமநல்லூரில் சில தானங்கள் தருகிறான். அதில்,

"ஸ்லஸ்திஸ்ரீ கன்னாதேவருக்கு யாண்டு பதினேமாவது முனைப்பாடி திருநாவலார் திருத்தொண்டீஸ்வரத்து மகாதேவருக்கு,

ஸ்வஸ்திஸ்ரீ சுக்ரான்வய உதயாசல ஆதித்ய சக்திநாத சிம்ஹத்வஜ சிதிமகர லாஞ்சன மலைய குலோத்பவ மலையகுல சூளாமணி ஸ்ரீமத் நரசிம்ஹவர்ம மிலாடுடைய நாட்டான் சித்தவடவன்"

என கல்வெட்டில் கன்னரதேவனைக்கு அடங்கிய சிற்றரசனாக கூறிகொள்கிறான். இவனது மனைவி சேதிமாதேவியார் என்பவர் திருப்பமனம்,திருச்சோற்றுத்துறை, திருப்பந்துருத்தி ஆகிய கோவில்களுக்கு நிவந்தம் அளித்துள்ளார்.இவரின் இயற்பெயர் "ஏகவீரன் தன்ம சங்கடியார்" என திருமலை கல்வெட்டு வாயிலாய் அறியலாம். இந்த நரசிம்மவர்மனின் மகளை உத்தமசோழன் மணந்துள்ளார்.

விக்ரமசோழ மிலாடுடையான்:

ராஜராஜசோழனின் தாய் வானவன் மாதேவியின் தந்தை இவர். இவரது மனைவி மிலாடுடையதேவி எனப்படும் 'பலிசய்யன்சாமி அப்பை" என்பவராவார். இவர் காலத்தில் படைத்தலைவர்களாக நிறைய மலையமான்கள் பெயர் வருகிறது.

உத்தமசோழ மிலாடுடையார்:

விக்ரமசோழ மிலாடுடையாருக்கு அடுத்து உத்தமசோழ மிலாடுடையார் ஆட்சிக்கு வருகிறார். பெருவீரரான இவர் ராஜேந்திரசோழனின் மருமகனாகிய ராசராசநரேந்திரனுக்கு ஆதரவாய் போர்புரிய மேலைசாளுக்கியம் சென்று "கலிதிண்டி" எனும் இடத்தில் இறக்க அவருக்கொரு பள்ளிப்படை கோவில் அங்கு எழுப்பப்பட்டது. இவரது மனைவி கணபதி மயிலாடி.

இவர் காலத்திலும் இவருக்கு பின்னர் குலோத்துங்கன் காலம் வரையிலும் சில மிலாடுடையார் வருகின்றனர். அவர்கள் பெயர்கள்:

1.அருமொழிதேவ மிலாடுடையான்

2.இராஜேந்திரசோழ மிலாடுடையான்

3.முடிகொண்ட சோழ மிலாடுடையான்

4.செம்பியன் மிலாடுடையான்

5.கங்கைகொண்ட சோழ மிலாடுடையான்

6.இரணகேசரி நரசிம்மவர்ரேன்

7.கரிகாலசோழ ஆடையூர் நாடாழ்வான்

குலோத்துங்கன் கால மலையமான்கள்:

வாணகோப்பாடி நாட்டை ஆண்ட மலையமான்கள் பிற்காலத்தில் வாணக்கோப்பாடி அரையர் எனும் பொருளில் தம்மை வாணகோவரையர் என கல்வெட்டில் பொறித்துக்கொண்டனர். இதே காலகட்டத்தில் மலையமான்களின் மற்றொரு கிளையினர் மலையமான், சேதிராயன் மிலாடுடையான் எனவும் அழைத்துக்கொண்டு ஆட்சி புரிந்தனர்.

அம்மலையமான்களின் பெயர்கள்:

1.ராஜராஜசேதிராயன்

2.ராஜேந்திர சோழ மலையமான்

3.மலையகுலராயர்

4.ராஜேந்திரசோழ சேதிராயன்

5.குலோத்துங்க சோழ சேதிராயன்

மலையமான் அதிகாரிகள்:

1.தில்லை நாயகன் தேவர்கண்டன் அகமுடையான் மலையனான இராஜேந்திர சோழ சேதிராயன்.

2.மலையமான் திருக்கலை மருந்தன் ஆழ்வானாங்ககார மலையமான்

3.வேளக்காரன் ராஜராஜ சேதிராயன்

மூன்றாம் ராஜராஜன் காலம் வரையிலும் நிறைய மலையமான்களின் பெயர்கள் கிடைக்கிறது. அதன்பின் காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் மலையகுல கோவலராயன் என்பவனின் தகவல் கிடைக்கிறது. இறுதியாக திருவண்ணாமலையில், "கூத்தாடுவானான சேதிராயன்" எனும் அதிகாரி 48 பசுக்களையும் இரண்டு எருதுகளையும் வழங்கியுள்ளான். இதுவே கல்வெட்டு ரீதியாய் மலையமான்களின் கடைசி கல்வெட்டாகும். அதன்பின்னர் எழுந்த விஜயநகர பேரரசில் பதம்பெற்ற இவ்வேளிர் வம்சம் மக்களோடு மக்களாய் கலந்துவிட்டது.



தென்பாண்டி நாடும் தொன்மைத் தமிழியும்





“சிவத்தமிழ்ச் செல்வர்”
பி.திருச்சிற்றம்பலம்
M.Sc.,M.A.,DIAE.,DCT.,
திருவாவடுதுறை ஆதீனப்பேராசிரியர்.
சென்னை -69

தண்பொருநை நதியாம் தாமிரபரணியோடு தென்றல் தவழும் தென் பொதிகை மலைச் சாரலில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய அம்பாசமுத்திரம் அடுத்த அய்யனார் குளம், சீவலப்பேரி அடுத்த மறுகால்தலை ஐயனார் கோயில் பொத்தை மற்றும் குற்றாலம் மலைப்பகுதியின் மேற்பகுதியில் என மூன்று இடங்களில் மட்டுமே தமிழி கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன.

தமிழகம் எங்கும் தமிழ்ப் புலவர்கள் தோன்றி தமிழை வளர்த்திருந்தாலும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டிய நாட்டையேச் சாரும். முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனத் தொடர்ச்சியாக கடல்கொண்ட கபாடபுரம் மற்றும் மதுரையில் தமிழ்சங்கங்கள் இயங்கிய நாடு. ஆகையால் பாண்டி நாட்டை கூற வந்த மணிவாசப்பெருமானும் தம் திருவாசகத்தில் "தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாடு "என்றும் "பாண்டி நாடே பழம்பதி "என்றும் தமிழ் அளிக்கும் பழம்பெரும் நாடாகச் சிறப்பித்துப் பாடுகின்றார். தமிழ்ப்பாட்டி என்று போற்றப்பெறும் ஔவையாரும்

"பாண்டிய நன்னாட்டுடைத்து நல்ல தமிழ்"என்று தமிழின் பெருமையையும் பாண்டிநாட்டின் சிறப்பையும் பதிவு செய்கிறார். மேலும் பழம்பெரும் நூல்களான சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு பல்வேறு நூல்களும் தமிழ் வளர்த்த விதத்தை விரிவாக விவரிக்கின்றன.

இத்தகைய இலக்கியச் சான்றுகளுக்கு வலுசேர்க்கும் விதமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட தமிழின் தொன்மை எழுத்து வடிவாம்

தமிழ் பிராமி என்னும் தமிழி எழுத்துக்களும் அவை காணப்படும் கற்படுக்கைகளையும் பாண்டிய நாட்டில் பல்வேறு இடங்களில் காண்கிறோம். குறிப்பாக மதுரையைச் சுற்றியுள்ள யானைமலை, திருவாதவூர், சித்தர்மலை, பெருமாள் மலை, கீழக்குயில்குடி, சமணர்மலை, அழகர்மலை, கொங்கர் புலியங்குளம் என ஏராளமான இடங்களில் உண்டு.

தமிழியும் தென்பாண்டி நாடும்:

ஆனால் தென் பாண்டி நாடு என்னும் திருநெல்வேலி கன்னியாகுமரி தென்காசி பகுதிகளில் மிகவும் அரிதாகவே கற்படுக்கையோடு கூடிய தமிழி கல்வெட்டுகளை காணமுடிகின்றது...

குறிப்பாக தண்பொருநை நதியாம் தாமிரபரணியோடு தென்றல் தவழும் தென் பொதிகை மலைச் சாரலில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய அம்பாசமுத்திரம் அடுத்த அய்யனார் குளம், சீவலப்பேரி அடுத்த மறுகால்தலை ஐயனார் கோயில் பொத்தை மற்றும் குற்றாலம் மலைப்பகுதியின் மேற்பகுதியில் என மூன்று இடங்களில் மட்டுமே தமிழி கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன..

இதில் தேனருவி அருகில் உள்ள சன்யாசிபுடவு கல்வெட்டு வாசிப்பதற்கு சற்றே சிரமமுடைய தொல்எழுத்து வடிவமுடையது... சென்று காணவும் சிரமம்.

அய்யனார் குளம் தமிழிக் கல்வெட்டு:

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அடுத்த அய்யனார் குளம் பொத்தையில் காணப்படும் தமிழி கல்வெட்டுகள் மிகத் தெளிவான எழுத்தமைதியோடும் கற்படுக்கைகளோடும் காணப்படுகின்றன. செல்லும் பாதை சற்று கரடுமுரடானவையாக இருந்தாலும் ஒரே இடத்தில் எதிர்எதிரே 2 கற்படுக்கைகளையும் இரண்டு தமிழிக் கல்வெட்டுகளையும் கண்டவுடன் நம்மையறியாது மகிழ்வும் பிரமிப்பும் தோன்றச் செய்யும்.

1) ராஜாப் பாறை

2) நிலாப் பாறை

இவ்விரண்டு தமிழி கல்வெட்டுகளின் காலமும் பொ.யு.பி. 2 ஆம் நூற்றாண்டு ஆகும்.

1) ராஜாப் பாறை:



இயற்கையாக அமைந்த குகையின் ஊடே இரண்டு கற்படுக்கைகளை அமைத்து மழை நீர் ஒழுகாதவாறு காடி அமைக்கப்பட்டுள்ளது.



கல்வெட்டு வாசகம்:

"பள்ளி செய்வித்தான்

கடிகை (கோ) வின் மகன்

பெருங்கூற்றன்"

விளக்கம்:

கடிகை அரசனின் மகன் பெருங்கூற்றன் என்பான் இப்பள்ளியை செய்வித்துள்ளான்

இப்பாறையிலேயே ஆற்றுப்படை திருச்சி பார்த்தி அவர்களால் தொன்மையான பாறை ஓவியம் ஒன்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பெற்றது...

2) நிலாப்பாறை:

ராஜாப் பாறையின் எதிர்புறம் உள்ள வட்டமான பாறையின் மேற்புறம் பெயருக்கேற்ப நிலவை காணும் படியாகவும் வெயில் மழை பனி என அனைத்தும் நேரடியாக படும்படி அரிதான இரண்டு கற்படுக்கைகள் அமைந்துள்ளன.. இதன்மீது ஏறி பார்க்க வேண்டும் என்றால் மிகவும் சிரமம்... அருகில் உள்ள செங்குத்தான பாறை விளிம்பில் நின்றவாறே ஏற வேண்டும்...

இதன் அருகிலேயே இக்கற்படுக்கையை ஏற்படுத்தி தந்தவரின் பெயரும் உள்ளது.

கல்வெட்டு வாசகம்:

"குணாவின் இளங்கோ

செய்பித பளி"

விளக்கம்:

குணாவின் இளங்கோ செய்வித்த பள்ளி என இதன் மூலம் அறிய முடிகிறது.

இயற்கையோடு இயற்கையாக இயற்கை எழில் கொஞ்சும் இம்மலைச்சாரலில் எவ்வித தொந்தரவும் இன்றி தவ வாழ்வு வாழ்ந்தோர் அக்காலத்தில் வைத்தியம் மற்றும் வானியல் சார்ந்த வாழ்வியல் பணிகளில் ஈடுபட்டிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

மறுகால்தலை தமிழிக் கல்வெட்டு:

திருநெல்வேலி மாவட்டம் சீவலப்பேரிக்கு அருகிலுள்ள மறுகால்தலை என்னுமிடத்தில் பிரசித்திபெற்ற பூலாவுடையார் சாஸ்தா கோவில் உள்ளது. இக்கோயிலின் அருகிலேயே பொத்தை ஒன்றில் தமிழி கல்வெட்டும் பஞ்ச பாண்டவர்

படுக்கை என்றழைக்கப்படும் கற்படுக்கைகளும் காணப்படுகின்றன.

1906 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியராக இருந்த ஹெமைடு என்பவர் இக்கற்படுக்கைகளை கண்டறிந்தார். இவற்றில் சில படுக்கைகள் முழுமையானதாகவும் சில முற்றுப்பெறாததாகவும் காணப்படுகின்றன.

வெண் காசிபன் என்பான் ஏற்படுத்தித் தந்த கல்கஞ்சனம் எனப் பொருள். இங்கு தமிழ் பிராமியில் இல்லாத 'ஸ' எனும் எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

திக்கெலாம் புகழும் திருநெல்வேலி:



கல்வெட்டுகள் பெரிய எழுத்துகளில் நீர் விளிம்பு பகுதிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் ஒவ்வொன்றும் ஒரு அடிக்கு மேலான அளவிலும் தொலைவிலிருந்தே காணக் கூடியவாறு வெட்டப்பட்டுள்ளன.


கல்வெட்டு வாசகம்:

"வெண் காஸிபன் குடுபிதா கல்காஞ்சனம்"

விளக்கம்:

தமிழர் தம் பண்டைய நகர நாகரீகத்தை அறிந்திட உதவும் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை அகழ்வாராய்ச்சிகள் எப்படி தாமிரபரணிக்கரையில் வாழ்ந்தோரின் நாகரீகத்தை அறிந்திட உதவுவுகிறதோ அதுபோல மறுகால்தலை மற்றும் அய்யனார் குளம் தமிழிக் கல்வெட்டுகள் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தோர் பயன்படுத்திய பழம்பெரும் தமிழ் எழுத்துக்களின் வடிவத்தை அறிந்திட பெரிதும் உதவுகிறது.

வேட்டையாடும் வல்லூறு





விஜய் பாண்டியன்

Lawyer & Histoarchivist

இன்று நமது நாட்டில் வேட்டையாடுவது சட்டப்படி குற்றம் என்பதால் இந்த வேட்டை முறையை எங்கும் காண முடிவதில்லை பல நாடுகளில் இந்த வேட்டையானது சட்ட விரோதமில்லாத காரணத்தால் இன்றளவும் பழக்கத்தில் இருக்கிறது.

அன்றைய வேட்டை சமூகங்கள் போலவே மன்னர்களின் பொழுது போக்காக இருந்த வேட்டையாடுதலில் உலகம் முழுவதும் மிகவும் பிரபலமானதொரு வேட்டை முறை இருந்தது அது மிகவும் விசித்திரமானதும் கூட உருவத்தில் கழுகுகளை விட சிறியதாக அதீத வேகமும் வேட்டையாடும் திறனுடைய பறவை அது பார்பதற்கு ஒரு கழுகை போலவும் ஆனால் கழுகிலிருந்து வேறுபட்ட கழுகை விட வேகமாக பறக்க



கூடிய இப்பறவையை மனிதர்கள் வேட்டைக்காக பழக்கி முயல், மான் உட்பட பல சிறிய விலங்குகளை வேட்டையாடி இருக்கின்றனர்.

நமது சங்க இலக்கியங்கள் இப்பறவைகளை "வல்லூறு" என்றும் "எழால்" என்றும் குறிப்பிட்டுள்ளது இப்பறவைகள் புறா கிளி காடை கவுதாரி போன்ற பிற பறவைகளை



மட்டுமல்லாது சற்றே பெரிய வகை எழால் பறவைகள் பாம்பு எலி மான் ஆடு மாடு பன்றி போன்றவைகளையும் அடித்துக்கொன்று தின்னும் இயல்புடையது அதன் காரணத்தால் தமிழில் இது வல்லூறு என்றும் கூறுப்படுகிறது.

இயல்பிலேயே உலகின் மிகவும் வேகமாக பறக்கும் அதீத வேட்டையாடும் திறன் கொண்ட இப்பறவைகளை ஆங்கிலத்தில் "Falcon" என்பார்கள் இந்த பறவைகளை பழக்கும் வேட்டைக்காரர்களை "Falconer" என்றும் இந்த வேட்டை முறையை Falconry எனவும் சொல்வார்கள்.

இந்த வேட்டை முறையானது மங்கோலியர்களிடமிருந்து உலகம் முழுக்க பரவியதாக நம்பப்படுகிறது மேலும் இங்கிலாந்து ஐரோப்பா போன்ற நாடுகளில் எழால் பறவையை வளர்த்து பிற பறவைகளை சிறிய விலங்குகளை வேட்டையாடும் வழக்கமாகும். அதே சமயம் நமது சங்க

இலக்கிய பாடல்கள் சில இப்பறவையின் வேட்டை திறனை குறித்தும் இதன் வகைகளை குறித்தும் பேசுகிறது.



இப்பாடல்களில் எழால், சிற்றெழால், குடுமி எழால் என மூன்று வகை எழால்கள்களும் அதன் திறன்களும் கூறப்பட்டுள்ளது அதே சமயம் தமிழர்கள் இந்த வேட்டை முறையை பயன்படுத்தி வந்தனர் என்பதற்கான சங்க இலக்கிய குறிப்புகள் கிடைக்கவில்லை என்றாலும் பிற்கால சான்றுகள் சில நமக்கு இதை உறுதி செய்கிறது "கருணீகர் புராணத்தில்" சென்னிய சோழன் என்ற அரசன் எழால் கொண்டு வேட்டையாடினதாக கூறப்பட்டுள்ளது மேலும் ஆங்கிலேயர் காலத்தில் இராமநாதபுரம் பகுதிகளில் ஏழால் பறவையை வளர்ப்பவர்கள் அதை கொண்டு வேட்டையாடியவர்கள் குறித்து சில பிரெஞ்ச் குறிப்புகளை காணமுடிகிறது. இன்றும் புதுவை பகுதிகளில் எழால் என்பதை "எடால்" என சொல்லும் வழக்கம் இருக்கிறது புறாவை எடால் அடிச்சுட்டு போகுது என்பார்கள்.



தற்காலத்தில் இதை இராசாளி என்றும் பைரி லகுடு என்றும் இடங்களுக்கு ஏற்றவாறு வெவ்வேறான பெயர்களில் மக்கள் அழைக்கின்றனர் இராசாளி என்கிற பெயர்



அனைத்து
வகை எழால் பறவைகளுக்கும் எழால்
போலவே உருவத்தில் ஒற்றுபோகும் சில கழுகு
வகைகளுக்கும் உண்டு. விலங்குகளில்
வலிமை மிகுந்ததை ஆளி என்றழைத்ததை
போலவே பறவைகளில் வலிமை மிகுந்த சில
கழுகு வகைகளை ஆளி என்றழைத்தனர்
உருவத்தில் கழுகை விட சிரியதாக
இருப்பினும் வேகத்திலும் வலிமையிலும்
மிகுந்த எழால் இராசாளி ஆனது.





இன்று நமது நாட்டில் வேட்டையாடுவது சட்டப்படி குற்றம் என்பதால் இந்த வேட்டை முறையை எங்கும் காண முடிவதில்லை பல நாடுகளில் இந்த வேட்டையானது சட்ட விரோதமில்லாத காரணத்தால் இன்றளவும் பழக்கத்தில் இருக்கிறது.

மன்னார்குடி





மூசா @ மு.ச.சதீஷ்குமார்
தலைமைச்செயலக அலுவலர்
சென்னை

சோழர் காலத்தில், சுத்தவல்லி வளநாட்டு தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மன்னார்குடியின் மதிலழகு என்ற பெயருக்குக் காரணமான இராஜகோபாலசாமி கோயில், சோழ மாமன்னன் முதலாம் இராஜாதிராஜர் காலத்தில் கட்டத் தொடங்கப்பட்டது. பிறகு, முதலாம் குலோத்துங்கன் காலத்தில் செங்கற்கள் சுண்ணாம்புச்சுதையால் கோயிற்பணிகள் நிறைவு பெற்றன. தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் இராஜகோபுரமும் வெளிப்புற சுற்றுச்சுவரும் கட்டப்பட்டு, மன்னாருசாமி நாயக்கர்களின் குலதெய்வமாகவே ஆனார்.

வேதாரண்யம் விளக்கழகு, திருவாரூர் தேரழகு, திருவிடைமருதூர் தெருவழகு, மன்னார்குடி மதிலழகு என்பார்கள். மதுரை,தஞ்சை,செஞ்சி நாயக்கர்களில் தஞ்சாவூர் நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசர்களிடம் அளவுகடந்த விசுவாசம் கொண்டிருந்தனர். தங்களை விஜய நகர ஊழியர்கள் என்றே அழைத்துக்கொண்டர். விஜயநகரத்தின் அழிவுக்குப்பின்னரே, தங்களை சத்ரியர்கள் என அழைத்துக்கொண்டனர். தங்களுக்கென ஒரு கோத்திரத்தை உருவாக்கிக் கொண்டனர். மன்னர் கோத்திரம் மன்னாரு கோத்திரம். இராஜகோபாலசாமியின் இன்னொரு பெயரான மன்னாருசாமியின் தாசர்கள் என்றழைத்துக்கொண்டனர். தெலுங்கில் குடி எனில் கோயில். மன்னாருசாமி கோயில் கொண்ட குடி மன்னாருகுடி என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

சோழர் காலத்தில், சுத்தவல்லி வளநாட்டு தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மன்னார்குடியின் மதிலழகு என்ற பெயருக்குக் காரணமான இராஜகோபாலசாமி கோயில், சோழ மாமன்னன் முதலாம் இராஜாதிராஜர் காலத்தில் கட்டத் தொடங்கப்பட்டது. பிறகு, முதலாம் குலோத்துங்கன் காலத்தில் செங்கற்கள் சுண்ணாம்புச்சுதையால் கோயிற்பணிகள் நிறைவு பெற்றன. தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் இராஜகோபுரமும் வெளிப்புற சுற்றுச்சுவரும் கட்டப்பட்டு, மன்னாருசாமி நாயக்கர்களின் குலதெய்வமாகவே ஆனார்.

மன்னார்குடியில் கிடைத்த எந்தவொரு கல்வெட்டிலும் 'மன்னார்குடி' என்ற பெயர் இடம்பெறவில்லை. கல்வெட்டில் காணப்படும் 'பாம்புணிக் கூற்றம்' இன்று பாமணி என்ற ஊராகத் திகழ்கிறது. சுத்தமல்லி வளநாடு சித்தமல்லி என்ற பெயரில் மன்னைக்கு அருகே உள்ளது. இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம், குலோத்துங்கச் சோழ விண்ணகரம், இராஜேந்திர விண்ணகரம் என்ற பழைய பெயர்கள் அழிவுற்றதற்கான காரணங்கள் தெரியவில்லை. ஆனால், ஒரு கலவெட்டில் (SII Vol.6, A.R.No.108/1897) 'மன்னார் கோயில்' என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூருக்கு வண்டுவராபதி, செண்பகாரண்யம் என்ற பெயர்களும் உண்டு. செண்பக மலர்கள் நிறைந்த காடுகளும் செண்பக மலர்களை வண்டுகள் நெருங்காதென்பதால் வண்டு+வராத+பதி என்றும் அழைக்கப்பட்டது. மண்ணில் மிக்கது மன்னார்குடி என்ற சொலவடையும் உண்டு.

மூன்றாம் இராஜராஜன் காலத்தில், வரலாற்றின் ஓர் அரிய நிகழ்வாக கி.பி.1239 -இல் இராஜகோபாலசாமி கோயிலில் வெட்டப்பட்ட கல்வெட்டொன்று நகலெடுக்கப்பட்டு மன்னை கைலாசநாதர் கோயிலிலும் பொறிக்கப்பட்டுள்ளது. ஐந்து பேரிளமை நாட்டவர் சபையும் சதுர்வேதி மங்கலத்தார் சபையும் கூடி, வரிவசூல் முறைமைகளைத் திருத்தி 'கோனேரி மேல் கொண்டான்' அரசாணையாகப் பொறித்துள்ளனர்.

ஜெயங்கொண்டநாதர் கோயில் கல்வெட்டு ஒன்று, முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மற்றொரு பெயரான புவனேகவீரன் என்ற பெயரில் மடிகை ஒன்று இருந்ததை தெளிவுபடுத்துகிறது.

கி.பி. 1633 - 1673 ம் ஆண்டுகளில் விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் வெளியே இருக்கும் பெரிய இராஜகோபுரம், ஆயிரங்கால் மண்டபம் போன்றவைக் கட்டப்பட்டது. ஸ்ரீ இராஜகோபாலசுவாமியையே தனது குல தெய்வமாக கருதிய விஜயராகவ நாயக்கர் 'மன்னாரு தாசன்' என்றே அழைக்கப்பட்டார். நாட்டியம், நாடகம் போன்ற கலைகளில் ஆர்வமுடைய விஜயராகவ நாயக்கர், தான் தெலுங்கில் இயற்றிய படைப்புகளை ஸ்ரீ ராஜகோபாலசுவாமிக்கே சமர்ப்பித்தார். அது மட்டுமின்றி அவர் இயற்றிய பல நாடகங்களும் இந்த கோயிலின் ஆயிரம்கால் மண்டபத்திலேயே

அரங்கேற்றப்பட்டது.

விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலுக்கு பல கோபுரங்களும், மண்டபங்களும் , குளங்களும் கட்டியதால், இன்றும் இக்கோயிலில் இராப்பத்து, பகல்பத்து உற்சவத்தின்போது ஶ்ரீ இராஜகோபாலசுவாமிக்கு விஜயராகவ நாயக்கரின் அலங்காரம் செய்து, அவரது பெயரை கூவி கட்டியம் கூறுகின்றனர்.

இராஜகோபாலசாமி கோயில் திருப்பள்ளியறையின் முன்னால் உள்ள தூணின் அடிவாரத்தில், விஜயராகவ நாயக்கர் அவர்தம் தேவியார் செண்பகலட்சுமி கூப்பிய கரங்களுடன் சிற்பமாக விளங்குகிறார்கள். உற்சவக் காலங்களில் பெருமாள் இச்சிற்பத்தின் அருகே எழுந்தருளி நிற்கும்போது, தீட்சிதர்கள், "அனைத்துலகும் ஆண்ட அச்சுத விஜயராகவ மன்னாருதாசனுக்கு அருளிப்பாடி" என்று அருட்பா பாடுகின்றனர்.

எந்த இராஜகோபாலசாமியைத் தன் குலதெய்வமாக கொண்டாரோ, அதே இராஜகோபாலசாமி கோயில் (தஞ்சாவூர்) வாசலில் தனது 83 ஆவது வயதில் மதுரை நாயக்கப்படைகளால் கொல்லப்பட்டார். ரங்காஜம்மா எழுதிய மன்னாருதாசவிலாசம் என்ற நாடகநூல் மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயிலுக்கும் விஜயராகவனுக்கும் உள்ள தொடர்பை விரிவாக இயம்புகிறது.


மன்னார்குடிக்கு தென்மேற்கே மகாதேவப்பட்டினம் என்ற ஊர் உண்டு. மராத்திய மன்னர் சரபோஜியுடன் அவரது தம்பியான துக்கோஜிக்கு ஏற்பட்ட மனக்கசப்பால், தஞ்சையில் ஒரு பகுதியைப் பிரித்து, மகாதேவப்பட்டினத்தில் கோட்டையொன்று கட்டி ஆண்டு வந்திருக்கிறார். இக்கோட்டையில், துக்கோஜி 'சிவகாமசுந்தரி பரிணயம்' என்ற தெலுங்கு நாடக நூலை இயற்றி நாடகமாக நடத்திக்காட்டினாராம். மேலும், 'உமாபாய் சாகேப் சத்திரம்' என்ற பயணிகளுக்கான சத்திரம் ஒன்றையும் நடத்தி வந்திருக்கிறார்.

இப்படி நீண்ட நெடிய வரலாறைக் கொண்ட மன்னார்குடி கி.பி.1866 ஆம் ஆண்டு பிரிட்டீஷ் அரசாங்கத்தால் நகராட்சியாக அறிவிக்கப்பட்டது.

மூசா

கல்லும் சொல்லும்





ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர்(பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை

சக ஆண்டு 1451 இல் (பொது ஆண்டு 1530) கிருஷ்ணதேவராயருக்கு பின் ஆட்சி செய்த விஜயநகர அரசர் அச்சுதராயர் தேவமாகாரார் காலத்தில் கடலாடியைச் சேர்ந்த யக்னசுவாமி மகன் ராமச்சந்திர தீக்ஷீதரின் என்பவர் துங்க பத்ரா நதிக்கரையில் உள்ள ஸ்ரீ விருப்பாக்ஷாவில் நேரடியாக சென்று கடலாடியில் ஒரு பெரும் நிலப்பகுதியை தானமாக ஆணை பெற்றார். இந்த ஆணை செப்பேட்டில் வெட்டி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் அணிகலனான கடலாடி

(Kadaladi –The Ornament of Jayankonda Chola mandalam)

தமிழ்நாட்டில் உள்ள ஊர்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை பெற்றுவிளங்குவது நாம் அறிந்ததே. ஒவ்வொரு ஊரின் பெயரும் இயல்பாக இயற்கைச் சார்ந்த பெயரோடு விளங்குவது ஒரு மரபாகவே உள்ளது. மலையின் பெயராகவோ, மரத்தின் பெயராகவோ, இயற்கை அமைப்புகளின் பெயரால் ஆன கடவுளின் பெயரிலோ, சிறப்புப் பெயர்களிலோ ஊர் பெயர்கள் அமைந்துள்ளதை அறிவோம். மன்னர்கள் காலத்தில் ஆற்றுப்பாசனமும் ஏரிப்பாசமும் ஏற்படுத்தப்பட்ட பின்புதான் செழுமையான நிலங்கள் நமக்கு கிடைத்தன. இந்நிலங்களை திருத்தி உழவுக்கு ஏற்றபடி மாறியதில் பல நபர்கள் உழைப்பு அடங்கியுள்ளது.

அப்படிப்பட்ட செழுமையான ஒரு நிலப்பகுதியாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாதுமலை மற்றும் பர்வதமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஒர் அற்புதமான ஊர் கடலாடி. ஊரின் பெயர் கடலாடி என்பதற்கு கடல்போல உள்ள நீர்நிலைகள் அமைந்துள்ள ஊர் என்பது பொருளாகும். இதற்குச் சான்றாக கடலாடியில் உள்ள லட்சுமி நாராயணபெருமாள் கோயிலில் உள்ள விஜயநகர கால கல்வெட்டு இவ்வூரை சமுத்திரம் என்று குறிப்பிடுகிறது. கடலாடி என்ற சொல் 9/10 ஆம் நூற்றாண்டுகளிலேயே புழக்கத்தில் உள்ளதை அவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. வேடியப்பன் கோயில் நடுகல் கல்வெட்டில் கடலாடியில் இருந்த அம்பலம் என்ற அவைப் பற்றி குறிப்பிடுகிறது. அங்குள்ள தீப்பாய்ந்தான் கல்வெட்டில் கடலாடி ஆளும் பாறைப்படை வளவன் பற்றி குறிப்பிடுகிறது. எனவே, இவ்வூரின் பெயர் கடலாடி என்பது இன்று வரை மாற்றமடையாமல் தொடர்ந்து இருப்பதும் இப்பெயர் அவ்வூரில் உள்ள நீர்நிலைகளான பெயரி கடல்போன்ற ஏரிகளால் ஏற்பட்டதும் சிறப்பாகும்.

இவ்வூரில் மற்றுமொரு வரலாற்றுச் சிறப்பும் உள்ளது. அது அவ்வளவாக பொதுவெளியில் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆம். விஜயநகர மன்னர் அச்சுததேவராயர் காலத்தில் ஒரு செப்பேடு வெளியிடப்பட்டுள்ளது. இந்த செப்பேடு வேதம் அறிந்த பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட செப்பேடு எனினும் இதில் பல்வேறு வரலாற்றுக்குறிப்புகளும் நிலவியல் கூறுகளும் உள்ளதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

சக ஆண்டு 1451 இல் (பொது ஆண்டு 1530) கிருஷ்ணதேவராயருக்கு பின் ஆட்சி செய்த விஜயநகர அரசர் அச்சுதராயர் தேவமாகாரார் காலத்தில் கடலாடியைச் சேர்ந்த யக்னசுவாமி மகன் ராமச்சந்திர தீக்ஷீதரின் என்பவர் துங்க பத்ரா நதிக்கரையில் உள்ள ஸ்ரீ விருப்பாக்ஷாவில் நேரடியாக சென்று கடலாடியில் ஒரு பெரும் நிலப்பகுதியை தானமாக ஆணை பெற்றார். இந்த ஆணை செப்பேட்டில் வெட்டி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த செப்பேட்டில் 5 ஏடுகள் உள்ளன. அனைத்தும் சமஸ்கிருத மொழியில் நந்தி நாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. அனைத்து ஆணைகளும் சமஸ்கிருத பாடல் வடிவில் உள்ளன. இதில் 111 வரிகள் உள்ளன. 1-3 அவர்களுடை ஆசிகளும் 4-36 மன்னர்களின் வம்சா வழி பட்டியலும் வீரமும் பெருமையும் பொரிக்கப்பட்டுள்ளது. 37-104 வரை நிலம் வழங்கப்பட்ட விவமும் 105-111 காப்புப்பகுதியும் உள்ளது.

கடலாடி கிராமத்தில் உள்ள நிலங்களில் 110 பிரிவாக “விருத்தி” என்ற பெயரில் சர்வ மானியமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலம் ராமச்சந்திர தீக்ஷிதர் மற்றும் 46 பிராமணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்வமானியமான விடப்பட்ட

நிலங்களுக்கு நான்கு எல்லைகள் குறிப்பிடும் போது, ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்றக் கோட்டத்து பங்கள நாட்டு படைவீடு மகாராஜ்யம் கட்டகரம் ஊருக்கு வெளிப்பகுதியில் சேனாரிப்பாடி ஊருக்கு வடக்கும் பாலூருக்கு (பழபூர்) கிழக்கும் செய்யனேந்தல் ஊருக்கு தெற்கும் ஸ்கந்த நதிக்கு (செய்யாறு) மற்றும் ஹரிதாலமங்கலம் (அரிதாரிமங்கலம்) எல்லைக்கு மேற்கும் இந்நிலங்கள் அமைந்துள்ளன. மேலும் இதன் அருகில் உள்ள ஊர் பெயர்களாக சிங்கானப்பாடி(சிங்காரவாடி) குன்னத்தூர், மாம்பாக்கம் மற்றும் பட்டியேந்தல் (பட்டியந்தல்) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட 47 பிராமணர்களில் ரிக்வேதம் படித்த 24 பிராமணர்களுக்கும் யஜுர் வேதம் படித்த 15 பிராமணர்களுக்கும் சாமவேதம் படித்த 2 பிற பிராமர்கள் 6 பேருக்கும் மானியமான நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பிராமணர்கள் காஸ்யப, கௌதம, பரத்வாஜ, சாண்டில்ய, ஜமதக்னிய என பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

இந்த நிலமானியம் அளித்த செப்பேட்டில் உள்ள வரலாறு மற்றும் நிலவிலல் தகவல்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டபடி கடலாடி என்பது பெரிய ஏரிகளைக் குறிப்பதாகும். தற்போதும் கடலாடியில் 4 ஏரிகள் உள்ளன. ஒவ்வொரும் தன்னளிவில் பெரியவை. வடக்குப்பக்கம் உள்ள ஏரி கன்னரதேவன் காலத்தியதாகலாம். அங்கு அவர் வெட்டிவித்த கல்வெட்டு உள்ளது. அதில் சிங்கபுர நாட்டு மீ வழி கடலாடி என்று குறிபிட்டு ஏரிப்பட்டி நிலம் அளித்ததை குறிப்பிடுகிறது. இந்த செப்பேட்டில் கடலாடியை, பட்டியேந்தல் ஆன கடலாடி என்றும் மேலும் சிறப்பாக ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஆபரணம் (அணிகலன்) என்றும் குறிப்டுகிறது.


இவ்வூரில் உள்ள லட்சுமி நாராயண பெருமாள் கோயில் கல்வெட்டு இவ்வூரை வெங்கடாத்திரி சமுத்திரம் என்று குறிப்பிடுகிறது. எனவே, கடலாடி என்பது நீர் நிலைகளால் சூழப்பட்ட ஊர். நிலங்கள் நீர்பாச்ச தண்ணீர் எப்போதும் கிடைக்கும் ஊர். ஜவ்வாதுமலை, பர்வதமலையிலிருந்து வரும் நீர்ஊற்றுகள், கால்வாய்களால் இந்த ஏரிகள் நிரம்பி ஊரை வளம் செய்கின்றன. இது போன்ற வளமான ஊரைத்தான் அச்சுததேவராயர் காலத்தில் பிராமணர்களுக்கு சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த செப்பேட்டில் குறிப்பிடும் ஊர்கள் கவனத்துக்குரியன, பலபூர் என்பது பாலூர் ஆகலாம். கட்டகரம் என்பது கேட்ட வரம் பாளையம் அருகில் உள்ள ஊர். ஸ்கந்த நதி என்பது செய்யாற்றின் பெயர். இது புராணக்கதையுடன் தொடர்புடைய பெயர், இது குறித்து தனியாக பார்க்கலாம். ஹரிதலமங்கலம் என்பது தற்போதைய அரிதாரிமங்கலம், ஆனால் அவ்வூர் கல்வெட்டில் இது அரிதாக மங்கலம் ஆகும். இது போன்ற வளமான வரலாற்று சிறப்பு ஊர்களை போற்றிப்பாதுகாக்க வேண்டும்.


இந்த செப்பேடு பதிவு செய்யும் காலத்தில் கடலாடியில் இருந்த ராமச்சந்திர தீக்ஷிதர் என்பவரிடம் இருப்பதை இந்திய தொல்லியல் துறை பதிவு செய்து எபிகிராபிகா (தொகுதி XIV, pp. 310-323) இந்தியாவில் வெளியிட்டுள்ளது. இந்த சர்வமானியமாக அரசரிடம் பெற்ற ராமச்ந்திர தீக்ஷீதரின் வாரிசும் ராமச்சந்திர தீக்ஷீதர் ஆவார். இப்போது அந்நிலங்கள் எவர் பெயரில் உள்ளதோ, நலம். அந்த செப்பேடு எங்கு உள்ளதோ?

ச. பாலமுருகன்,









No. 22.—KADALADI PLATES OF ACHYUTA-RAYA: SAKA 1451.

BY PROF. S. V. VENKATESWARA, M.A., AND S. V. VISWANATHAN, M.A., KUMBAKONAM.

These plates belong to Mr. Yegnaswāmi Ayyar, son of Rāmachandra Dīkshitar, a direct descendant of the donee of our grant, whose name is also Rāmachandra Dīkshitar. He is the village munsiff of Kaḍalāḍi in North Arcot district and has still in his possession the land granted to his ancestor by Achyuta-Rāya. The plates were obtained from him through the kindness of His Holiness the Śaṁkarāchārya at Kumbakonam. They are in good preservation and are at present in the possession of the latter.

The grant is on five copper plates bored at the top and held together by a ring. The plates bear inscriptions on both sides, excepting the first and the last, which are engraved on one side only. They are numbered with Telugu-Kanarese numerals on the first side of each

[1] *Sarva-āvartta-yutā*, i.e. assigned as the date of payment as it falls due annually.

[2] *Tavanim* (the ending is perhaps wrong) is connected with Marathi *tavaṇā*, "the heap of sugarcane as cut for the mill" (Molesworth).


[3] See above, Vol. XI, p. 29.

[4] Ibid.

[5] A hand-cast or handful: cf. above, Vol. I, p. 161 n. Compare *nivāpa*, above, Vol. XI, p. 56.

[6] I understand *-sundara-saṁjāta . . . tilakaḥ* as an irregular compound similar in structure to the Prakrit *dhavala-ka-ōvavia* (i.e. *dhavala-krit-ōpavita*, for *krita-dhaval-ōpavita*): Pischel, *Gramm. d. Prakrit-Spr.*, 603.





(78) [5]सांद्रमंत्वातिजंता विलसितचवितेता विद्वद्दिष्टप्रदा-
(79) ता ।[। २९] यत्कीर्तिचंद्रचरति चमायां तिथिष्वशेषासु विव-
(80) र्धते च । तनोति चक्रस्य मुदं समिंधे[3] दिवा च सायं कुमु-
(81) दैर्विवंधे ।[। ३०*] मदं मयसि[4] मारुतं प्रोथीलयंत्यमेयैर्[5]येषं-
(82) दश्वपटलोत्करैः क्षितिचोभिकत्यापितैः[6] । भजोजनद[7]-
(83) तिक्रया[8] किसु विशोषयत्यंबुधीं बलप्रमथनस्य
(84) नो [9]रंगविरोधीमं वाजिनं ।[। ३१*] कारागृहाकलितदा-
(85) सविरोधिभूपदारावलीकरविचालितचामरस्य [।*]
(86) राजाधिराजपरराजभयंकरैकवीरादिकानि वि-
(87) रुदानि बहूनि यस्य ।[। ३२*] गोकर्णसंगमवृत्तिसुवर्ण-
(88) संसत्कोणाद्रि[10]पर्वतविरिंचपुरेषु कांच्यां । श्रीका-
(89) लहस्तिनगरेपि च कुंभकोणे[11] दानानि षोडश बहु-

தமிழக கோவில்கலை தோற்றமும் வளர்ச்சியும்





மருத்துவர் . மு.சுரேந்திரன்
நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்
கோவை,
வரலாறு மற்றும் கோயில்கட்டிடக்கலை ஆர்வலர்

சுமார் ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி மொழிமாற்றம் செய்யப்பட்ட தமிழர் கோயில், சிற்பக்கலை நூல்கள் சமஸ்கிருதத்தில் க்ரந்த எழுத்தில் நூல்களாக மாற்றம் பெற்றன. அவற்றிற்கேற்ற ஒலி, மற்றும் பொருட் குறிப்புகள் பெற்று. எனவேதான், தமிழர் கலை நூல்கள் அனைத்தும் தமிழகம் மட்டுமே அறிந்த க்ரந்த எழுத்திலமைந்த சமஸ்க்ருத நூல்களாகக் கிடைத்து வருகின்றன. தமிழர் மரபு "திராவிட மரபு" என்று அழைக்கப்பட்டு வருவது இவ்வாறே.

தோற்றம்:

மனிதனின் மெய்யியல் நம்பிக்கைகளின் அடிப்படையில் வழிபாட்டுக் கூறுகளின் நிகழ்வுப் பரிமாணமாக உருவாகி வளர்ந்து வந்ததே கோயிற்கலையும், சிற்பக்கலையும். சமூகமாக வாழ்ந்து வந்த மனித இனத்தின் மெய்யியல் அனுபவம், இரண்டு பரிமாணங்களாக வரலாற்றில் பதிவாகி உள்ளதை நாம் அறியலாம். தன் முன்னோர்களின் ஆன்மா தங்களுக்கு வழிகாட்டும். எனும் நம்பிக்கை அடிப்படையில் உருவான முன்னோர் வழிபாடு, ஆதிகாலம் தொடங்கி இன்றுவரை நடுகல் வழிபாடாகவும் குலதெய்வ வழிபாடாகவும் தொடர்ந்து வரினும் இம்மரபின் அடிப்படையில் பல்வேறு தத்துவக் கோட்பாடுகள் உருவாக வழி இன்னமையில் கோயில் சிற்பக்கலை தோன்றவோ பெரிய வளர்ச்சியடையவோ வழியேற்படவில்லை என நாம் உணரலாம்.



“நடுகல் வழிபாடு”

மற்றொரு பரிமாணமான அனைத்திற்கும் மேலான பரம்பொருள் உண்டு என்ற நம்பிக்கையும்,ஆன்மா, மனம். உடல் இவற்றுக்கிடையேயான தொடர்பை உய்த்துணர முயலும் மனிதனின் ஆறாவது அறிவான "மனம்" எனும் உணர்வாலும், அனுபவத்தாலும் பலவண்ணமான தத்துவங்கள், இறை சார்ந்தும் வழிபாடு சார்ந்தும் வெவ்வேறு நெறிகளாக வளர்ந்து சமயங்களாக உருவாகின்றன. இதன் அடிப்படையில் உருவானவையே பெருந்தெய்வ வழிபாடுகள் இம்மரபின் தொடர்ந்த வளர்ச்சியும், தொன்மங்களின் தோற்றமும், ஆலய வழிபாடு, உருவ வழிபாடு எனும் கலை மரபுகள் உருவாகவும், தொடர்ந்து காலம்தோறும் புதுமைகள் புகுத்தப்பட்டு வளர்ந்து வரவும் வழி வகுத்தது எனலாம். இம்மரபின் கருத்தாக்கங்களை உள்வாங்கி காலம்தோறும் பல பிரிவுகளாக வளர்ச்சியடைந்து வந்ததே கோயில்களையும், சிற்பக்கலையும்.

திராவிட மரபு எனும் தமிழர் மரபு :


உலகில் தோன்றிய மிகப்பழமையான கோயிற்கலை மரபுகளில் ஒன்று தமிழர் கலை மரபு. திராடக் கோயிற்கலை மரபு எனப் பிற்காலகட்டத்தில் திசைச்சொற்பெயராக அறியப்படுவதும் இஃதே. "தமிழ்" என்னும் உச்சரிப்பு பிராகிருதம், பாலி, கிரேக்கம், யவனம் போன்ற மொழிகளில் “த்ரமிட” அல்லது “த்ரமிள” என்றே உச்சரிக்கப்படும் என்பது நாம் அறிந்ததே.

அவ்வகையில் சுமார் ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி மொழிமாற்றம் செய்யப்பட்ட தமிழர் கோயில், சிற்பக்கலை நூல்கள் சமஸ்கிருதத்தில் க்ரந்த எழுத்தில் நூல்களாக மாற்றம் பெற்றன. அவற்றிற்கேற்ற ஒலி, மற்றும் பொருட் குறிப்புகள் பெற்று. எனவேதான், தமிழர் கலை நூல்கள் அனைத்தும் தமிழகம் மட்டுமே அறிந்த க்ரந்த

எழுத்திலமைந்த சமஸ்க்ருத நூல்களாகக் கிடைத்து வருகின்றன. தமிழர் மரபு "திராவிட மரபு" என்று அழைக்கப்பட்டு வருவது இவ்வாறே.

திராவிடாமரபுக் கட்டுமானக் கலை:

திராவிட மரபுக் கட்டுமானங்களை ஆராயப் புகும்பொழுது, பழங்கோயில்கள் மட்டுமே தற்போது காணக்கிடைப்பதால் அவற்றின் வாயிலாகவே அவற்றின் தன்மைகளை நாம் அறிய முடிகிறது. மற்றபடி, வாழ்வில்லங்கள், அரண்கள், அரண்மனைகள் காலத்தால் அழிந்துபட்டுள்ளன. சுமார் ஐந்தாம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியப் பரப்பில் குடவரைகளாகவும், கட்டுமானக் கோயில்களாகவும் எழுந்து இன்றுவரை நிலைத்திருக்கும் வழிபாட்டிடங்கள், மிக நுட்பமான, மிகப்பெரிய பரப்பில் வழங்கிவந்த வழிமுறை நெறிமுறைகளுடன் கூடிய கலை வடிவங்களாக அமைந்திருப்பதை ஈண்டு உணர்ந்துகொள்ள முடியும்.



"கோயில் வளாகமும் திருக்குளமும் மொகஞ்சதாரோ"

அண்மைக்காலங்களில் பல்வேறு ஆய்வுமுறைகளின் அடிப்படையாய் சிந்துவெளிப் பண்பாடு, ஓர் தமிழர் பண்பாடே என நிறுவப்பட்டு வரும் வேளையில், அங்கே அகழப்பட்ட பல நூற்றுக்கணக்கான கட்டுமானங்களின் இடத்தேர்வும், திசைத்தேர்வும். இடப்பகிர்மான முறைகளும் திராவிடக்கட்டுமான மரபில் அமைந்திருப்பதை அறியவரும்போது, கோயில்கலையிலும் பின்னோக்கு ஆய்வுகளின் மூலமாகவும் சிந்துவெளிப் பண்பாடு தமிழர் பண்பாடு எனப் பல்வேறு சான்றாதாரங்களின் மூலம் விளக்க முடியும் எனத் தோன்றுகிறது.

இதனை, எளிமையாகப் புரிந்துகொள்ள, அகழ்வாய்வுகளில் வெளிக்கொணர்ந்த சிந்துவெளிச் செங்கற்களும், சங்ககாலச் செங்கற்களும் சுடப்பட்ட முறைகளிலும், விகிதாச்சார அடிப்படையிலும் பெருமளவில் ஒத்திருப்பதை அறியலாம். பெரும்பான்மையான செங்கற்கள் 1:4:6 என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளன.



"சிந்துவெளிச் செங்கற்களும் சங்க கால செங்கற்களும்"

திராவிட கோயிற்கலை நெறிமுறைகள்:

திராவிடக்கலையின் அடிப்படைக் கட்டுமான நெறிகள் இயற்கையிலிருந்தே முகிழ்த்ததாகவும், தேவைக்கேற்பவும் கிடைக்கும் கட்டுமானப் பொருட்களின் அடிப்படையிலும், எழுந்ததாகவே உள்ளது. ஓர் உருவம் எனில், அதற்கு பாதம், கால், உடல், தலை, முடி என இயற்கையில் இருப்பதைப் போலவே, கோயில் கட்டுமானமும் "ஆறு அங்கங்களைப்" பெற்றுள்ளதாகவே இருந்துவந்துள்ளது. காலவாக்கில் பல்வேறு வளர்ச்சி நிலைகளுக்கு உட்பட்டிருந்தாலும் இந்த "அங்கமானப் பிரிப்பு" மாற்றம் பெறவில்லை.

விமானம் :

ஆலயம் இறைவழிபாட்டு இடமாகவும், சமுதாயக் கூடமாகவும் பண்டைய காலத்திலிருந்தே பயன்பட்டு வருகிறது. ஆலயத்தின் மைய உறுப்பு என்பது கருவறை விமானமாகும்.

விமானம் என்பது "மானம்" எனும் அங்குல அளவினால் "விண்ணோக்கி" உயர்த்திக் கட்டப்பட்ட கட்டுமானம் எனப் பொருள்படும். இது முற்சொன்னவாறு ஆறு அங்கங்கள் பெற்றமையும்.



“விமானமும் அங்கமானங்களும்” - அடி முதல் நுனி வரை அனைத்தும் விமானமே

அவை :

1.அதிட்டானம் தாங்குதள உறுப்பு

2.சுவர் : விமானத்தின் உடல் பகுதி, பித்திவர்க்கம் எனவும் அழைக்கப்படும்.

3.பிரஸ்தரம் : கூரைப்பகுதி. தோள்களுக்கு நிகரானது.

4.கீரிவம் : கழுத்துப்பகுதி

5.சிரகம் : தலைப்பகுதி

6.ஸ்தூபி : முடி அல்லது கலசம்

விமானம் என்பது இந்த ஆறு அங்கங்களையும் உள்ளடக்கி, அடி முதல் நுனி வரை அடங்கிய கட்டுமானம் ஆகும். கருவறையின் மேற்பகுதி மட்டும் அல்ல. மேலும், கருவறை விமானத்தைச் கோபுரம் எனக் கூறல் கூடாது.

விமான வகைகள்:

திராவிட விமானங்கள் அடுக்கடுக்கான உறுப்புகள் பெற்று உயரும் கட்டுமானங்கள் ஆகும். தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகள் மரங்களும், வளமான மண்ணும் கொண்ட பகுதிகள். எனவே, அவர்களின் கட்டமைப்புகளில் மரங்களும், சுட்ட செங்கற்களும் முக்கியப் பங்காற்றியுள்ளன. எனவேதான், திராவிடக்கட்டுமானங்கள் அடுக்கடுக்காக உயரும் தன்மை கொண்டுள்ளன.


விமானங்கள் அவற்றின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று பெரும் வகைகளாகப் வகைப்படுத்தப்படுகின்றன.

அவை,

*1.***நாகரம் :** சதுர அடித்தளத்தை அடிப்படையாக கொண்டவை. சதுரம் அல்லது செவ்வகம்.

*2.***திராவிடம்** பல பக்க வடிவத்தைக் கொண்டவை, ஆறுபக்கம் அல்லது எட்டுப் பக்கம்.

*3.***வேசரம்** வட்ட வடிவத்தை அடிப்படையாகக் கொண்டவை. இவ்வாறான வடிவ விமானங்கள், பல்வேறு துணை வடிவங்களையும், அலங்கார உறுப்புகளையும் பெற்று நூற்றுக்கணக்கான வேறுபாடுகளுடன் காலம் தோறும் காணக்கிடைக்கின்றன.



"நாகரம், திராவிடம், வேசரம் "

ஆலய வளாகம்:

விமானத்தை மையமாகக் கொண்டு பரப்பளவிலும், துணைக்கோயில்கள், பரிவாரக் கோயில்கள், மதில்சுவர்கள் என விரிவடையும் ஆலய வளாகம், சைவ மரபில் ஐந்து சுற்றுகளும், வைணவ மரபில் ஏழு சுற்றுகளும் கொண்டதாக வளர்ந்துள்ளன.

சைவம் கூறும் ஐந்து திருச்சுற்றுகள்:

1.அந்தர் மண்டலம் கருவறையும் வலச்சுற்றும்

2.அந்தர் ஹாரை துணைக்கருவறை மற்றும் நாளம்பலம் எனும் சுற்று மண்டபம்.

3.மத்ய ஹாரை : பரிவார ஆலயச்சுற்று

4.மர்யாதா : இடை வெளிச்சுற்று

5.மஹா மர்யாதா வெளிச்சுற்று

இந்த ஐந்து திருச்சுற்றுகளும் அவற்றுக்கான தளிப்பெயர்களுடன் அமையும். மதில்களும், வாயிற்கோபுரங்களும் துணைத்தெய்வங்களும், பரிவார ஆலயங்கள் பெற்று அவற்றுக்கான திசைகளில் அமைகின்றன. இவை எட்டு முதல் 36 வரை அமையலாம்.

ஆகமங்களும், சாஸ்த்திரங்களும்:

ஆகமங்கள் மிகப் பழமையானவை, வேதங்களுக்கும் முந்தியவை, தமிழர் மரபில் எழுந்தவை. ஆதிகாலத்தில் திராவிட மரபு இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவியிருந்த நிலையில் ஆகமங்கள் அனைத்துப் பகுதிகளிலும் வழக்கில் இருந்து பின் மறையத்தொடங்கி தற்போது தென்னிந்திய நிலப்பரப்பிலும், காஷ்மீரத்திலும் மட்டும் வழக்கில் உள்ளன.

ஆகமங்கள் கடவுளை வழிபடும் முறையையும், ஆலய அமைப்பின் தத்துவங்களையும் விளக்குகின்றன. இவற்றுள் சைவ ஆகமங்கள் 28ம், வைணவ ஆகமங்கள் 2ம், சாக்த ஆகமம் ஒன்றும் அடங்கும்.

வாஸ்து சாஸ்த்திரங்கள் ஆகம மரபு உடன் சேர்ந்தே வளர்ந்து வந்தவை. இவை ஆகமத் தத்துவங்களை உள்வாங்கி அதன் அடிப்படையில் கோயில்கலைக்கும். சிற்பக்கலைக்கும் நுட்பங்களையும் விரிவாக விளக்குகின்றன. நெறிமுறைகளையும், தொழில் இவற்றுள் மானசாரம் மற்றும் மயமதம் இரண்டும் திராவிட மரபில் முக்கியமானவை.

சுருக்கவுரை:

திராவிடர் மரபு எனும் தமிழர் கோயிற்கலை மரபு உலகின் மிகப் பழமையான கட்டிடக்கலை மரபுகளுள் ஒன்று, தற்போது, உலகின் பல பாகங்களில் பல்வேறு துணை மரபுகளாக வளர்ந்துள்ளது. இம்மரபிற்கான தடயங்கள் சிந்துவெளி தொடங்கி, அப்பகுதியிலிருந்து உலகின் பல பகுதிகளுக்கும் பரவித் தற்போது தென்னிந்தியாவிலும், தென்கிழக்காசியாவிலும் மரபு மாறாமல் பல நல்ல கலைஞர்களால் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. நாம் கோயில்களுக்குச் செல்லும்போது இம்மாபெரும் பண்பாட்டுத் தொடர்ச்சியாக அவற்றைக் கண்டு தமிழர் பெருமைகளை வாழ்த்துவோம்.

துணைநூற் பட்டியல் :

1.மரபுக் கட்டிடக் கலை திரு.பொ.திருஞானம்


2.ஆசியப் பரப்பில் திராவிட விமானங்கள்: திரு.செ.இராசு பவுன்துரை

3.தமிழக கோயிற்கலை திரு.இரா.நாகசாமி.

திரு.மா.சந்திரமூர்த்தி.

மாறுகால்தலை…!
மாற்றுக்கருத்தை விதை…!





ஹாருன் பாஷா,
தமிழ் மெய்யியல் ஆர்வலர்,
(www.dhamotnptc@gmail.com, 8610780183)
மதுரை.

இதில் வரும் காஸிபன் எனும் சொல்லை கல்வெட்டோடு ஒப்பிட்டுப் பார்ப்பது கட்டுரையை விளங்கிக் கொள்வதற்கு வழி வகுக்கும். வினை மறுப்புக் கோட்பாட்டை தமிழர் மெய்யியல் கோட்பாட்டாக கொண்டிருந்ததை தொல்காப்பியம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

"வினையின் நீங்கி விளங்கிய

அறிவின் முனைவர்"-என்று

வினையிலிருந்து நீங்கியவரே அறிவின் முதல்வர் என்று குறிப்பிடுகிறது.

கடந்த 31.01.2023-ம் தேதி ஒரு பிரபல பத்திரிக்கையில் தொல்லியல் ஆர்வலர் சிவரஞ்சனி அவர்களின் கட்டுரை படிக்க முடிந்தது. மிக நல்ல கருத்துதான் எனினும் ஒரு மெய்யியல் தன்மை கொண்ட ஒரு சான்றை வெறும் கல்வெட்டாக மட்டுமே அனுகியதன் விளைவே அது. பூவிலுடையார் மலை என்று அழைக்கப்படும் மலைக்கு அருகில் இருக்கும் தமிழ் கல்வெட்டு கூறும் செய்தியை விவரிக்காது, அதன் சொற்களை மட்டும் உதிர்த்ததில் மீண்டும் அது காலத்தால் பின் தங்கிப் போகிறது. எந்த ஒரு சான்றோட்டங்களும் இன்றி கி.பி.2 என்றும் அதை கணிக்கிறார்.

அது யாருக்கு உரிய இடம் என்பதை அந்த இடத்தின் பெயரே விளக்கிக் கூறுகிறது.

பூவிதால் உடையார் மலை....

இது மறுவிய பெயராகவே காட்சியளிக்கிறது. இச்சொல்லின் உண்மைப் பொருள்

“பூ இல் உடையார் மலை”

அறிவர் மரபினர் அனைவரும் மலர் (தாமரை) மேல் அமர்ந்தவாறு காட்டுவதே அவர்களது வழக்கம். இதைத் தெளிவாய் பேராசிரியர் க.நெடுஞ்செழியன் அவர்கள் தன் நூலில் எழுதியிருப்பார். காடிகா எனும் அறிவுலகத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டதே அதன் காரணம் தாமரைப்பூ அறிவின் குறியீடு. இதையே திருக்குறளும்,

“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தான்

நிலமிசை நீடு வாழ்வான்.”

மலரின் மேல் (மிசை என்பது ஓங்கி, மேலேறிய எனும் பொருளில் அமைந்த சொல் எ.கா.மீமிசை ஞாயிறு)

ஏறியிருக்கும் அறிவரின் வழி நடப்போர் நிலத்தின் மேல் உயர் புகழ் பெற்று நீடுழி வாழ்வார் என்று கூறுகிறது.

இன்பத்துறையில் தருக்க முறையில் அமைந்த குறளான

“தாம் வீழ்வார் மென்தான் துயிலின் இனிதுகொல்

தாமரைக் கண்ணான் உலகு.”

என்பது கூட காதலியின் தோள்களில் காயும் இன்பத்தை விடவா தாமரையின் மீது இருப்பவன் உலகம் இனிது என்று கேட்கிறது. இதில் கண்ணான் எனும் சொல்லை பவர் கண்ணனுடைய உலகம், இந்திர உலகம், மேல் உலகம் என்று பொழிப்புரை எழுதியிருக்கிறார்கள். இதை அறிவது மிகக் கடினம் எல்லாம் அல்ல.. தமிழ் இலக்கண முறையில் உள்ள ஏழாம் வேற்றுமைத் தொகையான “கண்” எனும் சொல்லை அறிந்தால் அதன் பொருள் எளிமையாம்.

மதிலின் கண் பூனை-என்பது மதிலின் மேல் உள்ள பூனையே ஆகும். தேவலோக மதிலில் உள்ள பூனை என்று ஆகாது.

இதையே தொல்காப்பிய சூத்திரம் (565-566)

ஏழாகுவதே

கண் எனப் பெயரிய

வேற்றுமைக் கிளவி (505)

கண் கால் புறம் அகம் மேல் உழை..

அதன் பால (566)

- என்று தெளிவாய் விளக்குகிறது.

எனவே பூ இல் உடையர் மலை என்பது அந்த மலையில் இருந்த தாபதர் ஒருவர் பூவின் மேல் உயர்த்தப்பட்டதையே தெளிவாய் உணர்த்துகிறது.

எனில் யார் அந்த அறிவர்..? அதைத்தான் அந்தக் கல்வெட்டு விளக்குகிறது. இக்கல்வெட்டை ஆராய்ந்த சிவரஞ்சனி அவர்கள் கொடுக்கப்பட்ட சொற்களின் வழிவகையில் தேடாமல், அவர் முறையில் பதம் பிரித்துக் கூறுகிறார். அந்தக் கல்வெட்டை திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள்

"வெண் காசிபன் கொடுபித கல் கஞ்சனம்" *என்று படித்துள்ளார். அதற்கு பொருளாய் கசிந்து ஒழுகும் மேற்கூரைக்கு தாரை அமைத்துக் கொடுத்தது எனும் பொருளில் "சல தாரை" என்கிறார் எனக் கூறி அதை ஏற்றுக் கொண்ட வழியிலே கல்வெட்டில் உள்ள காஞ்சனம்/கஞ்சனம் என்ற சொல்லை கஞ்சம் + அணம் எனப் பிரிக்கிறார்.*

கழகத் தமிழ் அகராதியில் கஞ்சம் என்ற சொல்லுக்கு நீர் என்ற பொருள் உள்ளதாகவும், அணம் என்பது குகையினம் மேற்பகுதி என்றும், எனவே ஐராவதம் மகாதேவன் ஐயா கூறியது போல இது நீ்ர் கசிந்து ஒழுகும் குகையின் மேற்கூரைக்கு தளம் அமைத்தது என்கிறார்.

இது எப்படி உள்ளதென்றால் சட்டை என்பதற்கு சட்+டை சட் என்றால் உருதுமொழியில் கொட்டு என்ற பொருளும், டை என்றாலம் ஆங்கிலத்தில் மடி என்ற பொருளும் வருவதால் அந்தச் சொல்லிற்குப் பொருள் கொட்டிக் கொண்டே மடி என்பது போலாகும். இதையே தொல்காப்பியர்

"தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் எனும் குற்றமாகக் கூறுகிறார்". (1611)

முதலில் அந்தக்கல்வெட்டை யாரெல்லாம் எப்படிப் படித்தார்கள் என்று பார்ப்போம்.

ஒரு அடி உயரமும், பதினோறு எழுத்துக்களைக் கொண்ட இக்கல்வெட்டை எச்.கிருஷ்ணசாஸ்திரி.

"வேணகோஸி பானா குடுபிதக் (ளா) கா ஞ சணான" என படித்து சமஸ்கிருத சொல்லோடு ஒப்பிட்டார்.

பின் கே.வி.சுப்பிரமணிய ஐயர்

"வேண் கோஸிபான் குடுபிதா

காள காஞ்சணம்"

எனப் படித்து அவர் வேண் நாட்டுவேளிர் என்றார்.

பின் திரு.நாராயண ராவ்

"வேணம் கோஸிபான குட்டுபிதா

காள காஞ்சனம்" என்று

படித்து சமஸ்கிருத முறையில் ஆய்ந்து பௌத்த விநய பீடகத்தைச் சேர்ந்த ஒருவரால் செய்யப்பட்டது என்றார்.

பிறகு டி.வி.மகாலிங்கம் அவர்கள் படித்து

"வேண் கோஸிபன் குட்டுபித கல் கஞ்சனம்" –இது

வேண் காஸிபனால் தானமாக கொடுக்கப்பட்ட கல் படுக்கை என்றார். இந்த குகைத்தளங்கள் எல்லாம் ஆசீவர்களுக்கு உரியவை என்று முதலில் உரைத்தவரும் இவரே.

அதன் பிறகே ஐ.மகாதேவன் அவர்கள்

"வேண் காஸிபன் கொடுபித

கல்காஞ்சணம்"-எனப் படித்து

வேள் காசிபனால் கொடுக்கப்பட்ட

கல் படுக்கை என்றார்.

இவை எல்லாம் இருக்க இதைப்பற்றிய

தெளிவான ஆய்வினை செய்தவரில் ஒருவர்

திரு மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள்

அவர் இக்கல்வெட்டை

“வெண் காசிபன் கொடுபித கல் கஞ்சனம்”

என்று படித்து, பிராமி (தமிழி)

எழுத்தில் எகரமும், ஒகாரமும் பொதுவாய் ஒரே போன்று எழுதப்படுவதால்

இதை வெண் என்று படிப்பதே இங்கு சாலச் சிறந்தது என்கிறார். மேலும் காஞ்சனம் எனும் சொல் பிராகிருத சொல் எனவும், அது படுக்கையை குறிக்கிறது என்கிறார். வெண்காசிபன் என்பவர் முனிவர்களுக்காய் கொடுத்த கற்படுக்கைகள் என்று கூறுகிறார்.

மேலும், ஓய்வு பெற்ற, மறைந்த தொல்லியல் இயக்குனர் ரா.நாகசாமி அவர்களும் அதை வெண்காசிபன் என்று படித்தது குறிப்பிடத்தக்கது.

-இவ்வாறு காஞ்சணம் என்றும், சொல் பாலி, பிராக்கிருத வழக்கில் இருந்து, இங்கு கற்படுக்கையைக் குறிப்பதாய் அனைவரும் கூற, சிவரஞ்சனி அவர்கள் அதை நீர்க்கசிவிற்காய் அமைந்தகஂ கூரை என்று குறிப்பிடுவது விந்தையாய் உள்ளது.

அப்படி அது நீர்க்கசிவு கூரையைத்தான் குறிக்கிறது என்றால் தமிழகத்தில் கிடைக்கும். தமிழக்கல்வெட்டுகள் உடைய, படுக்கைகள் கொண்ட பல குகைகளில் இந்த மழைவெட்டு எனும் அணம் வெட்டப்பட்டுள்ளது. அந்தக் கல்வெட்டுகள் எதிலும் காஞ்சணம் என்ற சொல் இல்லையே, கொட்டுவிக்க மறந்து விட்டார்கள் போலும்.......

இந்தக் காஞ்சனம் எனும் சொல்லுக்கு *The pali text society* ன் *pali to English*-அகராதி பொன் என்றே பொருள் கூறுகிறது. *Kancanna vanna* -எனும் சொல்லுக்கு பொன் நிறம் என்ற பொருளைத் தருகிறது.

மேலும், பகவத்கீதையின் அத்யாயம் 6, சூக்தம்-8

ஞான விஜ் ஞானத்ருப்தாத்மா.... அஷ்ம காஞ்சன- எனும் பாடலில் கூட அஷ்ம என்பது கல்லையும், காஞ்சன என்பது பொன்னையும் குறிக்கிறது.

மேலும், சைவ சித்தாந்த அகராதி காஞ்சனம் எனும் சொல்லுக்கு பொன் என்ற பொருளையே தருகிறது.

சூடாமணி நிகண்டும் கூட காஞ்சனம் எனும் சொல்லுக்குப் பொன் என்ற பொருளையும், மேலும் கீழ்கண்ட சொற்கள்

காஞ்சன மாலா	-	பொன்மாலை
காஞ்சன வல்லி	-	பொற்கொடி

என்ற பொருளையும் தருகிறது இவைகளின் மூலமஂ தெளிவாய் அறிவது காஞ்சனம், கஞ்சனம் எனும் சொற்கள் பொன்னைக் குறிக்கிறது என்பதே.

மக்கள் வழக்கிலஂ பிராக்கிருத, பாலி சொற்கள் கலந்த போது ஏற்பட்ட மாற்றமாய் இருக்கலாம். சாண்டில்யன் எழுதிய கடல் புறா-எனும் புதினத்தில் கூட இளைய பல்லவனின் நாயகியாக வருபவர் காஞ்சனை என்பவர் தான். கள ஆய்வில் காஞ்சன் பாண்டியன் எனும் மாணவனைக் காண முடிந்தது. அவரிடம் காஞ்சன் என்ற சொல்லிற்கு பொருள் கேட்ட போது அவர் பெற்றோர் பொன் என்று கூறியதாய் விவரித்தார். பொன் பாண்டி எனும் பெயரில் மக்கள் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், அடுத்தபடியாக வெண்காசிபன் எனும் பெயருக்கு வெண்மையான பிரகாச ஒளியுடையவன் எனும் பொருளைக் கூறுகிறார். பல்வேறு சிந்தனைப் பள்ளிகளைக் கொண்டிருந்த இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் பொத்தாம் பொதுவாக வெண்மை என்பதை ஒரு நிறமாகப்

பார்ப்பது, இங்கு வேர் விட்டிருந்தக் கோட்பாடுகளை ஆயாததே ஆகும்.

சங்க இலக்கியங்களை நற்றிணை, குறுந்தொகை, புறம் மற்றும் அகநானூறு அனைத்திலும் வெண் என்ற அடைமொழியை வைத்திருந்தவர்கள் பலரைப் பார்க்கலாம். வெண்ணாகனார், வெண் பூதியார், வெண்மணிப்பூதியார், வெண் கண்ணனார், வெள்ளைக்குடி நானகார், வெண் கொற்றனார், வெண் பூதனார் இவர்களுக்கெல்லாம் வெண் என்ற அடைமொழி பொதுவாய் கொடுத்திருப்தற்குக் காரணம் என்ன? அவர்களெல்லாம் வெண்மையாக ஒளிர்ந்ததாலா.......?

நிறக் கொள்கையை இங்கு கொண்டிருந்தவர்கள் இருவர் அதாவது ஜெயினர் மற்றும் ஆசீவகர்கள். ஜெயினர்களின் கொள்கை, இலேசியக் கொள்கை, அதனாலே சேக்கிழார் அவர்களைக் குறிப்பிடும் பொழுது தலைமயிரைப் பறித்து உண்ணும் சாதி அமணர் என்று குறிப்பால் உணர்த்துகிறார். நிறங்களுக்கேற்ற வேற்றுமை உண்டு. மேலும் அது பிறப்பால் வருவது என்பதை ஜெயினம் கூறும். ஆனால் ஆசீவகத்தில் உள்ள வண்ணக்கோட்பாடு படிநிலை சார்ந்தது. கருப்பு, கருநீலம், பச்சை, செம்பொன், வெண்-ஆகிய நிறங்கள் மனிதனின் வாழ்வியல் படிநிலைகளைக் கூறுகிறது. ஒரு பள்ளியல் 2ம் வகுப்பு முடிந்ததும், 3,4 என்று எப்படி கற்றலின் வழி படிநிலை முன்னேறுகிறதோ அதைப் போல ஒவ்வொரு குற்றங்கள் கடந்த பின்பு ஒரு நிறத்தில் இருப்பவர் மற்றொரு நிறத்திற்கு மாறலாம். இதைத் தெளிவாய் தன் நூலை விளக்குவார். முனைவர் ர.விஜயலெட்சுமி அவர்களம் இதையே சங்க இலக்கியங்கள் பல்வேறு வண்ணங்களை அடைமொழியாகக் கொண்ட புலவர்களாக அடையாளமிட்டுக் காட்டுகிறது. எனவே இங்கு வெண் காஸி(சி)பனாக காட்டப்பட்டு இருப்பது ஆசீவகத்தின் நிறுவனத்தலைவர்களில் ஒருவரான பூரணக்காயபரே. கி.மு.6-ஆம் நூற்றாண்டு இந்திய சிந்தனை மரபில் ஓர் அறிவுப்புரட்சியை உண்டாக்கிய தருணம். அதில் இருந்த பற்பல சிந்தனைப் பள்ளிகளைப் பற்றி, டி.டி.கோசாம்பி அவர்களும், தேவி பிரசாத் சாட்டோ பாத்யாயாவும் தங்களுடைய ஆய்வு நூல்களில் விளக்கியிருப்பார்கள். அதில் முக்கியப்பங்காக பூரண காயபரையும் அவரின் தற்செயல் கோட்பாட்டை (யத்தேச்ச) பற்றியும், விளக்கியிருப்பார்கள். இதில் முக்கியமாக நாம் பார்க்க வேண்டியது இவருக்கும் வெண்மைக்கும் உள்ள தொடர்பே ஆகும்.

அங்குதர நிகாயத்தில், சுக்க நிகாயத்தில் (57)-ஆம் சுக்தம் புத்தரிடம் அவரின் சீடரான ஆனந்த புத்தர் உரையாகும் கூற்றைக் காணலாம்.

ஆனந்தர் புத்தரிடம் கூறுகிறார். "ஆசீவர்களும் ஆசீவக பிட்சுணிகளும் வெள்ளை சாதியினர் அதில் நந்தவாச்சன், கிசசங்கிசன், மற்கலி மிக வெண்மை (பரம சுக்கில) உடையவர்கள்".

இந்தக் கூற்றில் கிசசங்கிசன் என்று குறிப்பிடப்படுபவரை காசிபன் (காயபர்) என்று நிறுவுகிறார். ஆய்வாளர் A.L.பாசாம் அவர்கள்.

முழுமை அடைந்த அறிவினை உடையவன் என்பதைக் குறிக்கும் விதமாகவே அவர் பூரணர் என்றும் அழைக்கப்படுகிறார். முழுமை பெற்ற அறிவினை உடையவரானதாலே பௌத்த இலக்கியங்கள் பல இவரைத் தூற்றுகிறது. இதைப்பற்றி ஆய்வு செய்த A.L.பாசாம் அவர்கள் " திபெத்திய தம்மபதம் மட்டும் திவ்ய வதனம் பூரண காஸிபரின் இறப்பை தூற்றுகிறது . அவர் புத்தரிடம் தோற்று தற்கொலை செய்துகொண்டார் என்று அது விளிக்கிறது " என்று கூறுகிறார்.அதற்குக் காரணம்

இவர் வினை மறுப்புக் கோட்பாட்டைக் கொண்டதே ஆகும். அதன் வடமொழி வடிவம் அக்ரிய வாதம் என்பதால் இதை ஆய்வு செய்யும் தருமானந்த கோசாம்பி "பூரண காஸ்ஃபனுடைய அக்ரிய வாதம் சாங்கியம் போலவே உள்ளது" என விளிக்கிறார்.

இதில் வரும் காஸிபன் எனும் சொல்லை கல்வெட்டோடு ஒப்பிட்டுப் பார்ப்பது கட்டுரையை விளங்கிக் கொள்வதற்கு வழி வகுக்கும். வினை மறுப்புக் கோட்பாட்டை தமிழர் மெய்யியல் கோட்பாட்டாக கொண்டிருந்ததை தொல்காப்பியம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

"வினையின் நீங்கி விளங்கிய

அறிவின் முனைவர்"-என்று

வினையிலிருந்து நீங்கியவரே அறிவின் முதல்வர் என்று குறிப்பிடுகிறது.

வடமொழியில் அக்ரிய வாதம் போலவே வினைமறுப்புக் கோட்பாட்டை யதிருச்சவாதம் (யத்தேசவாதம்)-என்கிறது இதைப்பற்றிக் கூறுமஂ கி.மு.3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சரகத சம்ஹிதை- எனும் மருத்துவ நூல், "யதிருச்ச வாதிகளின் மதத்தில் செய்பவர், பொருள், கர்மா, ரிஷி கர்ம பயன்கள் என எதையும் ஏற்றுக் கொள்ளா நாத்திகர்கள், பெரும்பாவிகள்"

இதில் வரும் கர்ம, கர்ம பயன் எதிர்ப்பு என்பது வினை மறுப்பான தற்செயலைக் குறிப்பதாகும். இவரின் நிறக்கோட்பாடு 'அபிசாதி' எனும் பெயரில் வடமொழியில் குறிப்பிடப்படுவதையும், அதே நிறக்கோட்பாட்டை ஆசீவகத்தின் முக்கியக் கோட்பாடாகவும் மணிமேகலை, நஂலகேசி குறிப்பிடுவதை உற்று நோக்க வேண்டும்.

"கரும் பிறப்பு, கருநீலப் பிறப்பு,

செம்பிறப்பு………… வெண்பிறப்பு

என் இவ்வாறு பிறப்பும் மேஷ.

.... கழி வெண்பிறப்பு கலந்து

வீடு அணைகுவர்" – என்று

காஸிபரின் நிறக் கோட்பாட்டை மணிமேகலை (150) கூறுவதும்,

நீலகேசி, மணிமேகலை இரண்டும் ஆசீவக வாதத்தைக் குறிப்பிடும் பொழுது இரண்டிலும் பூரணரின் பெயரைக் குறிப்பிடுவதும் சாதாரண விஷயம் அன்று.

இதை ஆய்வு செய்யும் ஆய்வாளர் குணா.

"கி.மு.6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூரணரும், மணிமேகலை மற்றும் நீலகேசியில் வரும் பூரணரும் ஒருவரே என்றுத் தோன்றுவது இயற்கை" – என்கிறார்.

ஆம் மற்கலியின் ஊழ் கோட்பாட்டை விட பூரணரின் தற்செயல் கோட்பாடு ஆசீவகத்தில் உயர்ந்திருந்ததைக் குறிப்பால் உணர்த்துவதாய் நீலகேசியும், மணிமேகலையும் அவரின் பெயரை வைத்தே ஆசீவகப் பள்ளித் தலைவனை அழைக்கிறது.

இதைக் கொண்டு பார்க்கையில் பூரண காயபர் உயர் வெண்மை அடைந்த அறிவர் என்பது முழுமையாய் விளங்குகிறது. கழிவெண் பிறப்பில் கலந்து வீடடைந்ததைக் குறிப்பிடும் விதமாகவே. அந்த மலையும் பூ இல் உடையார் மலை என்று அழைக்கப்படுகிறது. இதைப் பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் க.நெடுஞ்செழியன் அவர்கள், அந்த மலையின் மீது மூன்று கற்கள் வைத்து தொடக்கத்தில் ஐயனார் வழிபாடு நடத்தப்பட்டதையும், தற்போது நல்ல வடிவமடைந்த ஐயனார் வழிபாடாய் அது உயர்ந்திருப்பதையும் தன் நூலில் எடுத்துரைத்திருப்பார். அதற்கு ஏற்றார் போல் மலையின் மீது "பூலுடைய சாஸ்தா" -திருக்கோவில்

அமைந்துள்ளது. அங்குள்ள மூலவரும் பூரணை பொற்கலை உடனுறையாக இருக்கும் காயபரே.

மூன்று முக்கிய ஐயனார்களில் இருவர் உடனிருப்பவர் (ஒக்கலன், ஒக்கலி – எனும் அடுத்த படிநிலை மாணவர்கள்?) பெயர்கள் அடைமொழியாகக் கொண்டிருப்பது இல்லை. எனவே இந்தப் பூரணை பொற்கலை என்பது பூரணன் எனும் அவரின் முழுமை அடைந்தப் பெயரையும், பொற்கலை என்பது அவர் பொன்னால் செய்து கொடுத்தப் பொருளையும் (படுக்கை?) குறிப்பதாய் பார்க்கமுடிகிறது(?).

எனவே பூ இல் உடையார் மலையில் பூலுடையார் சாஸ்தா (பூ இல் உடையார்) –ஆக வணங்கப்படும் அறிவர் பூரண காயரே. சாஸ்தா எனும் சொல் "சாத்தன்" – எனும் சொல்லின் வடமொழி வடிவமே ஆகும்.

இக்கல்வெட்டில் வரும் "ஸி" – எனும் எழுத்தையும், சாஸ்தா வில் வரும் ஸ - எனும் எழுத்தையும் உற்று நோக்கும் போது பாலி, பிராக்கிருத மொழி கலப்பு தமிழில் உண்டானதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. அறிவர்களின் சிந்தனைப் பள்ளிகள் வட நாடுகளிலும் செழிப்புற்று இருந்ததாலே இவ்விணைப்பாம்.

மக்கள் வழக்கத்தில்,

அங்கு அவர் கலந்திருப்பதை

"பொங்கலுமிட்டு தேங்கயும்

கரும்பும் பூ லா வுடையார்க்குச்

சாலக் கொடுங்கள்" – எனும்

முக்கூடற்பள்ளின் வரிகள் வெள்ளிடை மலையாய் உணர்த்துகிறது.

எனவே அக்கல்வெட்டு உணர்த்தும் செய்தி ஆசீவக வழக்கத்தில் வெண்மை நிறம் எய்திய பூரண காஸிபன் (காயபர்) பொன்னாலான படுக்கை செய்து

கொடுதӕ்து இருக்கிறார் அல்லது படுக்கைகள் செய்வதற்கு பொன் அளித்திருக்கிறார்.

அது மற்கலியின் நினைவாய் அவர் செய்த படுக்கை என்பதும் அதனாலே பொற்கலை எனும் பெயர் அவர் பெயருடன் மக்கள் வழக்கில் இணைந்தது என்பதும் பேராசிரியர்.க.நெடுஞ்செழியன் ஐயாவின் முடிவு.

இதன் பழங்காலத்தன்மையை உறுதிபடுத்தும் விதமாக. பல்வேறு வெண்சாநӕ்து ஓவியங்கள் இருப்பதை நண்பர் பாலமுரளி அவர்கள், ஆராய்ந்து உறுதி செய்துள்ளார். இது தாந்திரத்தின் உடனான ஆசீவகத்தின் இணைப்பே ஆகும்.இங்கு கொடுக்கப்பட்டுள்ளப் படங்கள் பாலமுரளி அவர்கள் ஆய்விற்கு சென்ற பொழுது எடுக்கப்பட்டவையே.

பூவிதால் / பூ வில் உடையார்

மலை மாறுகால் தலையில் பல வரலாற்று மற்றும் மெய்யில் தன்மைகளை

உள்ளடக்கியுள்ளது. தமிழ் மெய்யில் உணர்ந்து இளம் ஆய்வாளர்கள் ஆய்வு செய்வார்களாக.

சான்று விளக்க நூட்கள்

1. திருக்குறள் – 3, 1103
2. தொல் – 565, 566
3. The caverns &brahmi inscription of southern india – Krishna sasthri.
4. New Indian antiquary – vol 1
5. corpus of the Tamil – brahmi inscription – R.Nagaswami.

6. pali text society,s pali – English dictionary 487)
7. சங்க கால தமிழ்க் கல்வெட்டு எழுத்துகள் – மயிலை சீனி – வெங்கடசாமி
8. பகவத் கீதை 6 : 8
9. சூடாமணி நிகண்டு
10. கடல் புறா – சாண்டில்யன்
11. நற்றிணை – 248, 285, 313, 375
12. குறுந்தொகை – 174, 299
13. அகம் – 130, 170
14. புறம் – 35
15. சைவ சித்தாந்த அகராதி - பக் 89 பேரா.அ.கி.மூர்த்தி
16. தமிழகத்தில் ஆசீவகார்கள் – நா.விஜயலெட்சுமி
17. பகவான் புத்தூர் - டி.டி. கோசாம்பி
18. உலகாயதம் – தேவர் பிரசாதҙ் சாட்டோ பாத்தியாயா
19. அங்.நிகாயம் – சுக்க நிபாதம் (57)
20. தொல் – 60
21. சரக சம்ஹிதை – அக்னிவேசர்
22. மணிமேகலை – 150
23. நீலகேசி - கா.அப்பாத்துரைப்பிள்ளை - பக் 85
24. வள்ளுவத்தின் வீழ்ச்சி -குணா
25. ஆசீவகம் எனும் தமிழர் அணுவியம் – பேரா.க.நெடுஞ்செழியன்
26. முக்கூடற்பள்ளு – (33)
27. தமிழக குகைப் பள்ளிகளின் சமயம் – பேரா.க.நெடுஞ்செழியன்
28. south Indian palaco – graphy – t.v.mahalingam (297)
29. The history of Ajivikas- A.L.Basham
30. The doctorins of Ajivikas-A.L.Basham

திருக்கட்டளை சுந்தரேஸ்வரர் ஆலயம்





தென்கொங்கு சதாசிவம்
பெருந்தச்சர்
வரலாற்று ஆய்வாளர்
உடுமலைப்பேட்டை

போதிகை களின் நடுவில் நின்ற நிலையில் யாளி கள் வேறு எந்த கோவில்களில் காணாத அமைப்பு பிரஸ்தாரப் பகுதியில் உள்ள வலபியில் பூத கணங்களின் குறும்புத்தனங்கள் ரசிக்க வைக்கின்றன.

புதுக்கோட்டை அருகே உள்ளது திருக்கட்டளை என்னும் ஊர் இவ்வூருக்கு முன்பாக பெருங்கற்கால சின்னங்களான கல்வட்டங்கள் உள்ளன இவைகளை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறை வேலிகள் அமைத்து பாதுகாத்து வருகிறது.

திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் அஷ்ட பரிவார கோவிலாகும்.

பரிவார ஆலயங்கள் மூல ஆலயத்தின் சுற்று திரு மதிலுக்கு உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என ஆகம நூல்கள் கூறுகின்றன.

அஷ்ட பரிவார ஆலயங்களின் அமைப்பு:

சதுர வடிவத்தில் பந்த அதிட்டானமும் பித்தியில் பிரம்ம கந்த தூண்களும் எகதள விமானத்துடன் எளிமையான வடிவில் அமைக்கப்பட்டள்ளது.

பரிவார கோயில்கள்:

பரிவார தெய்வங்கள்:

சூரியன்

சந்திரன்

விநாயகர்

சப்த மாதர்கள்

முருகன்

தவ்வை

சண்டேஸ்வரர்

கல்வெட்டு:

சுந்தரேஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் இறைவனை

கற்குறிச்சித் திருக்கற்றளி ஆள்வாற்கு

வல்லநாட்டுக் கவிற்பால் கற்குறிச்சி கற்றளிப் பெருமானடிகளுக்கு

ஜயசிங்க குலகால வளநாட்டு தென் கவிற்பால் கற்குறிச்சி கற்றளி பெருமானுக்கு

ராஜேந்திர சொழமங்கல நாடாழ் வானடையான்

ஜெயசிங்ககுலகால வளநாட்டு தென்கவிற் நாட்டுக் கள்ளப்பால் கற்குறிச்சி அரையன் சொழதேவன ராஜேந்திர சொழமங்கல னடாழ்னென் திருக்கற்றளி

குறிப்பு: கல்வெட்டில் உள்ள படி எழுதி உள்ளேன் எழுத்து பிழை இல்லை.

இங்கு உள்ள பெருங்கற்கால சின்னங்களை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ***கலசக்காடு*** *என்று குறிப்பிடுகிறது.*

கட்டிடக்கலை:

கோயிலின் தாங்குதளம் பாதபந்த அதிஷ்டானம் அமைக்கப்பட்டுள்ளது.

சுவர்களில் பிரம்ம காந்த தூண்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

பிரம்ம கந்தம் என்னும் தூண்கள் அடிக்கால் முதல் தலைக்கால்வரை சதுர வடிவில் குடம் பலைகை கலசம் என்கிற அங்கங்கள் உடன் நான்கு பக்கங்களை உடையதாக அமைக்க படுவதல் பிரம்ம கந்தம் என அழைக்கப்படுகிறது.


தூண்களில் தரங்கு போதிகை அமைக்கப்பட்டுள்ளது போதிகை களின் நடுவில் நின்ற நிலையில் யாளி கள் வேறு எந்த கோவில்களில் காணாத அமைப்பு பிரஸ்தாரப் பகுதியில் உள்ள வலபியில் பூத கணங்களின் குறும்புத்தனங்கள் ரசிக்க வைக்கின்றன.

கபோதத்தில் உள்ள நாசிக் கூடுகளில் காந்தர்வ தலைகள் அமைக்கப்பட்டுள்ளன ஒரு நாசி கூட்டில் இரண்டுகிளிகள் அமைக்கப்பட்டுள்ளது இரண்டு கிளிகளில் ஒரு கிளி சிதைந்துள்ளது கபோதத்தில் சந்திர மண்டலமும் அமைக்கப்பட்டஉள்ளது.

கருவறை விமானம் தூவி தளம்

தேவ கோட்டத்து சிற்பங்கள்:

தேவ கோட்டம் சுவர்கள் மூன்றாக பிரித்து அதிட்டானத்தில் இருந்து பிரஸ்தராம் வரை முன் இழுத்து தேவ கோட்டம் அமைக்கப்பட்டஉள்ளது.



திரிபுராந்தகரும்

விஷ்ணுவும்

பிரம்மாவும்
நின்ற நிலையில் உள்ளார்கள்.

ஹராம்:

கர்ண கூடு சாலா. கர்ண கூடு பிரஸ்தாரத்தின் மீது அமையும் இவ் வரிசைக்கு ஹாரம் என்று பெயர்.

சாலா வில் உள்ள சிற்பங்கள்:

தெற்கில் பிட்சாடனர்

வடக்கு பிரம்மா

மேற்கு சிதைந்த நிலையில் விஷ்ணு

சாலாவில் உள்ள சிற்பங்களின் அருகே வித்தியாதரர்(பறக்கும் முனிவர்கள்) உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் நாசி கூடுகளில் உள்ள சிற்பங்கள்:

கிழக்கு உமாசகிதர்

தெற்கு வீணாதார தட்சிணாமூர்த்தி

மேற்கு லட்சுமி வராகர்

வடக்கு அமர்ந்த நிலை பிரம்மா

உச்சியில் ஊர்த்துவ பத்மத்தில் கலசம் வைக்கப்பட்டுள்ளது.



மேற்கோள் நூல்கள்:

புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள்

மயமதம் துவிதள லக்ஷணங்கள்

திராவிட மரபு கட்டிடக்கலை

இம்மாத புதிய தொல்லியல் கண்டுபிடிப்புகள்



திருக்கோயிலூர் அருகே

பல்லவர் கால கொற்றவை கண்டெடுப்பு

திருக்கோயிலூர் பிப்.1-
திருக்கோயிலூர் அருகே பல்லவர் கால கொற்றவை கண்டெடுக்கப்பட்டது.

திருக்கோயிலூர் - கடலூர் சாலையில் உள்ள டி. குன்னத்தூர் கிராமத்தில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தைச் சேர்ந்த ச.பாலமுருகன், சி.பழனிசாமி, சிற்றிங்கூர் ராஜா, திருவாமாத்தூர் கண. சரவணகுமார் ஆகியோர்கள் கள ஆய்வின் போது ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுடன் கூடிய கொற்றவை சிற்பத்தைக் கண்டறிந்தனர்.

திருக்கோயிலூர் வட்டத்திற்கு உட்பட்ட டி.குன்னத்தூர் கிராமத்தில் கள ஆய்வின் போது ஏரிக்கரையின் எதிரே உள்ள நிலத்தில் கிழக்கு பார்த்தவாறு கொற்றவையின் சிற்பம் அமைந்துள்ளது. இந்த சிற்பத்தின் உயரம் 6 அடியும் அகலம் 2 அடியும் உள்ள பெரிய சிலையாகும். இச்சிற்பத்தில் கொற்றவையின் வடிவம் மிகவும் அழகுற அமைக்கப் பட்டுள்ளது. சடையுடன் கூடிய கரண்ட மகுடம் நீண்ட காதணிகள், மார்பு மற்றும் இடுப்பில் உடையுடனும் காட்டப் பட்டுள்ளது. உடைகள் நேர்தியாக மடிப்புகளுடன் காணப்படுகிறது. தோள்களில் வளைகள், காலில் கழலுடன் அமைக்கப்பட்டுள்ளது. எட்டு கரங்களுடன் கூடிய கொற்றவை உருவில் வலப்புறம் ஒரு கை அபய முத்திரையும், மற்றொரு கை அம்பு ஏந்தியும், மற்றொரு கை வாள் ஏந்தியும், மற்றொரு கை சங்கு ஏந்தியும் உள்ளது. இடப்புறம் உள்ள கை இடுப்பில் வைத்தவாறும், மற்றொரு கை வில் ஏந்தியும், மற்றொரு கை கேடயம் ஏந்தியும், மற்றொரு கையில் சக்கரமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சிற்பத்தின் இடையில் பெரிய அளவில் கடமான் காட்டப்பட்டுள்ளது. கொற்றவையின் கால் எருமைத்தலையின் மீதுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் உள்ளிட்ட நூல்களில் சுட்டிக்காட்டிய இலக்கணத்துடன் இக்கொற்றவை சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கொற்றவை அதன் சிற்ப அமைப்பும் அதில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகளை கொண்டு அதன் காலத்தை 6 ஆம் நூற்றாண்டின் இறுதி என கூறலாம்.

இச்சிற்பத்தின் வலப்புறம் உள்ள கல்வெட்டு வட்டெழுத்தில் அமைந்துள்ளது. இக்கல்வெட்டு ஓரளவு மட்டும் படித்தறியும் படி அமைந்துள்ளது. இக்கல்வெட்டில் பெருவா இலார் மகன் தோறுல் என்று வாசித்து படித்தறிய முடிகிறது. இது இந்த கொற்றவை சிற்பத்தை செய்தளித்தவரின் பெயராக இருக்கக்கூடும். இவ்வூருக்கு அருகில் உள்ள அருங்குறுக்கை கிராமத்தில் காளியம்மன் கோயில் முகப்பு சுவரில் விக்கரம சோழனின் 17 ஆவது ஆட்சியாண்டில் கி.பி. 1135 அறிஞ்சி மகன் உஞ்சியாள் என்பவர் மண்டபம் செய்வித்ததாக குறிப்பிடும் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. திருக்கோயிலூர் பகுதியில் தான் தமிழ்நாட்டில் அதிக அளவில் கொற்றவை சிற்பங்கள் கிடைத்து வருகின்றன. தமிழகத்தில் தாய் தெய்வ வழிபாட்டின் தொட்டிலாக இப்பகுதி விளங்குகிறது. தமிழக தொல்லியல் துறை இது போன்ற அரிய சிற்பங்களை ஆவணப்படுத்தி பாதுகாக்கவேண்டும் என வரலாற்று ஆர்வலர்கள் கோருகின்றனர்.

■ திருக்கோயிலூர் அருகே கண்டெடுக்கப்பட்ட பல்லவர் கால கொற்றவை சிற்பம்



THE TIMES OF INDIA, CHENNAI
WEDNESDAY, FEBRUARY 28, 2024

Madras univ researchers unearth neolithic site near Chengalpet

Ragu.Raman@timesgroup.com

Chennai: University of Madras researchers have found a neolithic site with burial remains of a child at Chettimedu Pathur near Chengalpet, around 77km from Chennai, in what is being deemed a rare archaeological find.

Along with potsherds of burnished grey ware, a neolithic period characteristic, the researchers found rare Chola-era coins, potsherds of black slipped ware, black slipped ware with graffiti marks and bricks from the early historic period (Sangam era) and Iron age red slipped ware with designs in black.

The site, they say, could be between 2500 BCE and 3000 BCE. "Only a few neolithic sites including Vellore, Dharmapuri, Salem have been reported so far. Even in those sites, burnished grey ware was not found. At this site, we found burnished grey ware with a burial which is very rare," said Jinu Koshy, in-charge of excavation, department of ancient history and archaeology, University of Madras.

Burnishing involves polishing a pot using items with a hard smooth surface such as pebbles or leather for a shiny look. "Burnished ware has not been not found anywhere in the state except at Valasai in Vellore district," he added.

Koshi said the child, whose remains have been found, could be between 9 years and 11 years of age as the mandibular deciduous first molar tooth hasn't started to shed. The skeleton is in north-south direction, with the head placed north and rest of the body oriented to south, the face turned towards west. "This practice has been followed since protohistoric era and the pot near the skeleton is typical neolithic era pottery." Researchers plan to date the site and extract DNA samples from skeleton or material in the pot.

Initial exploration at Chettimedu Pathur showed hopscotch, bone tools and brickbats, different types of potsherds as well as burnished grey ware, burnished red ware, black and red ware, all-black ware, red slipped ware, red ware and coarse red ware. A few potsherds with graffiti marks were on the surface of the mound due to soil erosion and human activity. "To understand the context of the cultural material at the site, we began excavating on Feb 5," said J Soundararajan, associate professor, head-in-charge, department of ancient history and archaeology.

Four trenches were dug and preliminary analysis of the material evidence shows the layers could be from five different cultural periods. "Another important artefact is the red slipped ware having designs painted with black pigment and design resembling pottery types from chalcolithic period, especially Malwa culture. The painted type of potsherds found in Chettimedu Pathur could be from Iron age," he added.

RARE FIND: A skeleton of a child and a pot and burnished red and grey ware unearthed at a neolithic site near Chengalpet



திருமலையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த கோரிக்கை




EXPRESS READ

17th-centure sculpture found in Katpadi

Vellore: A 17th-century stone sculpture was discovered on a private farmland in Kaniyambadi village near Katpadi on Tuesday. The sculpture, 47cm wide and 62cm tall, features a woman alongside a man holding a sword. Under directions of collector, Katpadi tahsildar relocated the sculpture to the government museum near Vellore Fort. ENS

ஆற்றுப்படையின் இம்மாத நிகழ்வுகள்





PATRONS:

Hajee M.J.Jamal Mohamed Bilal	- President
Dr. A.K.Khaja Nazeemudeen	- Secretary & Correspondent
Hajee M.J. Jamal Mohamed	- Treasurer
Dr.K. Abdus Samad	- Assistant Secretary
Dr. K.N. Abdul Khadar Nihal	- Member & Hon. Director

CHAIRMAN

Dr.S.Ismail Mohideen, Principal,

CONVENOR

Dr.A.Akbar Hussain, H.O.D. of History

ORGANISING SECRETARIES

Dr.M.Mohamed Tajdeen, Associate Professor

Dr. T.Umar Sadiq, Associate Professor

MEMBERS

Dr. J.Augustin, Assistant Professor

Dr.V.Manimuthu, Assistant Professor

R.Vignesh Kumar, Assistant Professor

Dr. S.I.A.Muhammed Yasir, Assistant Professor

Workshop on

"HERO STONES OF TAMIL NADU : REGIONAL VARIATION AND INFLUENCES"

20th February 2024
Venue : SYED HUSSAINUDEEN HALL

Since 1951

Organized by

PG & RESEARCH DEPARTMENT OF HISTORY

JAMAL MOHAMED COLLEGE
(AUTONOMOUS)

Accredited with A++ Grade by NAAC (4th Cycle) with CGPA 3.69 out of 4.0

(Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI - 620 020.

PROGRAMME

09:30 am: **INAUGURATION**

Welcome Address : **Dr. A.Akbar Hussain**
H.O.D. of History

Presidential Address : **Dr. S.Ismail Mohideen**
Principal

Felicitations : **Dr. A.K.Khaja Nazeemudeen Sahib**
Secretary & Correspondent

: **Hajee M.J.Jamal Mohamed**
Treasurer

: **Dr.K. Abdus Samad**
Assistant Secretary

Dr. K.N. Abdul Khadar Nihal
Member & Hon. Director

Dr.D.I.George Amalarethinam
Vice Principal

Dr.K.N. Mohamed Fazil
Director-Hostel Administration

Ms. J. Hajira Fathima
Director – Women Hostel

Inaugural Address : **Prof S. Chandni Bi,** (Retd)
CAS, Department of History,
Aligarh Muslim University, Aligarh U.P

10:30 to 11:45 am : Technical Session I
"Hero Stones of Tiruchirappalli"

Mr.K.Balakrishnan
Field Researcher in Rock Art
Principal and Correspondent
Bharathi Matriculation School
Tiruchirappalli.

12:00 pm to 1:15 pm Technical Session II
"Social Life of the Tamils Reveal from Hero Stones

Mr.V.Parthipan
Founder of Aatrupadai Heritage
Group Tiruchirappalli.

2:15 to 3:15 pm : Technical Session III
"Hero Stones in Literature and Folklore"

: **Mr.P. Prabhakaran**
State Manuscript Mission
Tamil Nadu State Department
of Archaeology.

Valediction

Welcome Address : **Dr. M. Mohamed Tajdeen**
Organizing Secretary

Felicitations : **Dr.A. Ishaq Ahamed**
AdditionalVice Principal

Dr.A.J. Haja Mohideen
AdditionalVice Principal

Valedictory Address : **Dr. S.Neelavathy**
Associate Professor of History
Government Arts College for Women,
Pudukkottai.

Distribution of Certificates

Vote of Thanks : **Dr. T. Umar Sadiq**
Organizing Secretary


கலைஞர் 100
அருங்காட்சியகத்துறை
அரசு அருங்காட்சியகம், நாகப்பட்டினம்
வழங்கும்
'உலக தாய்மொழிகள் தின விழா–2024'
நாள் : 22.2.2014, வியாழக்கிழமை
இடம் : ஏடிஎம் மகளிர் கலைக்கல்லூரி, நாகப்பட்டினம்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை : பா.மணிமுத்து காப்பாட்சியர் (பொ) அரசு அருங்காட்சியகம், நாகப்பட்டினம்.
தலைமையுரை : முனைவர் ஆர்.அன்புச்செல்வி, முதல்வர்,ஏடிஎம் மகளிர் கல்லூரி நாகப்பட்டினம்
வாழ்த்துரை : ஆர்.அலமேலு, துறை தலைவர், வரலாற்று துறை, ஏடிஎம் மகளிர் கலைக் கல்லூரி, நாகப்பட்டினம்.
சிறப்புரை : திரு. வே.பார்த்திபன், நிறுவனர், ஆற்றுப்படை அமைப்பு
தலைப்பு
'தமிழ் எழுத்துக்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி'
நன்றியுரை : S. ஐய்யப்பன், அரசு அருங்காட்சியகம், நாகப்பட்டினம்.
நாட்டுப்பண்




PG & RESEARCH DEPARTMENT OF HISTORY
JAMAL MOHAMED COLLEGE (Autonomous)


OPPO Reno8 5G
Mamu | 2024.02.22 15:24


ADM COLLEGE
DEPARTMENT OF HISTORY


A.D.M COLLEGE FOR WOMEN
DEPARTMENT OF HISTORY
OPPO Reno8 5G
Mamu | 2024.02.22 12:14


ஆற்றுப்படை உருவாக்கிய தமிழரின் தொல் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் AI Technology புகைப்படங்கள் தற்பொழுது சென்னை பன்னாட்டு விமான நிலைய வெளிப்புற சுவர்களில் வரையப்பட்டுள்ளது.











www.aatrupadai.com